வெளியீடு 18-1-2008

Issued 18-1-2008

1279
26.08.2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, அக்டோபர் 19, 2007—தொகுதி 38—எண் 1**

**Friday, the 19th October 2007—Volume 38—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-*600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

**[Price Rs. 3.00**

**19-10-2007**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் — v-x

Governor and Council of Ministers — xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் — xvii-xix

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) — xxi-xxxi

**1. வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் — 1-48

**2. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா, 'மக்கள் குரல்', 'நமது எம்.ஜி.ஆர்.' மற்றும் 'ஜெயா டி.வி' மீது எழுப்பிய உரிமைப் பிரச்சினையில், பத்திரிகைகள், தொலைக்காட்சிமீது வலியுறுத்தாதது குறித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை — 48-51

**3. தகவல் கோரல்—**

(அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது, பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி வீசிய உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மீது நடவடிக்கை — 51-78

மாண்புமிகு திரு. துரைமுருகன் — 51-52

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் — 52-59

திரு. ஜி.கே. மணி — 60-63

பக்கங்கள்

3. **தகவல் கோரல்**—தொடர்ச்சி

(அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது, பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி வீசிய உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மீது நடவடிக்கை—தொடர்ச்சி

திரு. சி. கோவிந்தசாமி 63-65

திரு. வை. சிவபுண்ணியம் 65-68

திரு. கு. செல்வம் 69-70

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 70-78

(ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பொட்டல் கிராமத்தில் கோயில் மண்டபம் இடிந்து, மரணமுற்றோர் மற்றும் காயமுற்றோர் குடும்பத்தினருக்கு நிதியுதவி 85-87

திரு. பா. வேல்துரை 85-86,87

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 87

(இ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நிவாரணம் 87-90

திரு. தி. வேல்முருகன் 87-90

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 90

4. **அரசினர் தீர்மானம்**—

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது, பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி வீசிய உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்களைப் பேரவைப் பணிகளினின்றும் அடுத்த கூட்டத் தொடரின் முதல் பத்து நாட்கள் வரை நீக்கிவைத்தல்— 78-85

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 80-85



பக்கங்கள்

5. **அறிக்கைகள் அளித்தல்**—

(அ) பொதுக் கணக்குக் குழு 91

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 91

6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 92

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 92

(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 93

*மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா 93

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2007 130-131

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 131

7. **அறிவிப்புகள்**—

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.) 92

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007–2008, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) 94

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.) 130

8. **கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**— 94-130

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 94,121-126

திரு. க.சி.க. ராஜேந்திரன் 98-105

திரு. அ. சௌந்திரபாண்டியன் 105-109

திரு. தி.க. ராஜா 109-113

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 113-121

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 131-133

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228092
சென்னை-600 008
நூலகம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and Welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 8. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 9. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 0. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 21. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 2. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 3. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 4. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 25. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 26. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 28. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 30. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 31. Minister for Khadi | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 17-10-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன்,<br>எம்.ஏ., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு,<br>எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன்,<br>எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி,<br>எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. நா. வீரராகவன்,<br>எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின்<br>தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி,<br>எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன்,<br>பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி.,<br>பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி.,<br>பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ.,<br>பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி.,<br>எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ.,<br>பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அங்கையற்கண்ணி, செல்வி ஆ. - சங்கராபுரம்
2. அப்துல் பாசித், திரு. எச். - வாணியம்பாடி
3. அப்பாவு, திரு. மு. - ராதாபுரம்
4. அமரமூர்த்தி, திரு. து. - அரியலூர்
5. அரி, திரு. கோ. - திருத்தணி
6. அருண்மொழிதேவன், திரு. ஆ. - சிதம்பரம்
7. அருள் அன்பரசு, திரு. - சோளிங்கர்
8. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. - திருச்செந்தூர்
9. அன்பரசன், திரு. தா.மோ. - ஆலந்தூர்
10. அன்பழகன், திரு. எம். - பழனி (செ.வ.)
11. அன்பழகன், திரு. கே.பி. - பாலக்கோடு
12. அன்பழகன், பேராசிரியர் க. - துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. - திருச்சிராப்பள்ளி–I
14. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
15. ஆறுமுகம், திரு. கி. - செங்கல்பட்டு
16. ஆர்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
17. இராசசேகரன், திரு. எஸ். - ஆலங்குடி
18. இராணி, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
19. இராமகிருஷ்ணன், திரு. நா. - கம்பம்
20. இராமசாமி, திரு. கரி. - திருவாடானை

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஜெ. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆவா.) |
| 167. | பொன்னுதுரை. திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | - கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | - குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | - நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | - திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | - முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | - மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | - திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | - சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | - காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | - ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | - வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | - சேலம்-1 |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | - சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | - கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | - கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | - பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | - இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | - மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | ராஜேந்திரன், திரு. க.சி.க. | - மதுரை மேற்கு |
| 204. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 208. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 2, சர்வஜித் - திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 அக்டோபர் 19, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு"*

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

11—

### இலவச மின்சாரம்

**•8692—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறக் கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மின்சாரச் சட்டம், 2003-ல் உள்ள பிரிவு 62-ன்படி மின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம்தான் உள்ளது. ஆனாலும், இன்று வரையில் ஆண்டு வருமானம் ரூ.1,000/-க்குக் குறைவாக உள்ள 2,000 வழிபாட்டுத் தலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. Phase 1-ன்கீழ் 1,000 வழிபாட்டுத் தலங்களுக்கும், Phase 2-ன்கீழ் 1,000 வழிபாட்டுத் தலங்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, தமிழகத்தில் வருமானமே இல்லாத 2,000 கோயில்களுக்கு மட்டுமே இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கோயில்களுக்கு மட்டுமே, இந்த இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், பல கோயில்களுக்கு II-C என்ற கட்டண அடிப்படையில், ஒரு யூனிட்டுக்கு ரூபாய் 2-50 என மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதிலும், சில கோயில்களுக்கு V என்ற கட்டண அடிப்படையில் ரூபாய் 5-30 என மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. எனவே, இந்தப் பாகுபாட்டைத் தவிர்த்து, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கோயில்களுக்கும், கட்டுப்பாட்டில் இல்லாத கோயில்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அப்படிப்பட்ட கட்டணம் எந்தெந்தக் கோயில்களிலே வசூலிக்கப்படுகிறது என்றால், சில கோயில்களிலே வருமானமும் அதிகமாக இருக்கிறது; அதோடு அந்தக் கோயில்களிலே சில [illegible]ளையும் [illegible]க்கொண்டு, வியாபாரமும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வியாபாரம் நடத்துகின்ற

சென்னை-600 009





ஆலயங்களிலே Commercial Tariff தான் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆலயங்கள் மட்டும் இருக்குமானால், ஆயிரம் ரூபாய்க்குக்கீழ் வருமானம் உள்ள கோயில்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டும், மற்ற கோயில்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் 50 காசு என்று வசூலிக்கப்பட்டும் வருகிறது. இதைத் தவிர வேறு சலுகைகளை மின்சார வாரியத்தாலே வழங்க இயலாது. ஏனென்றால், இப்போது ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய, கட்டணம் 3 ரூபாய் 58 காசு ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, கோயில்களிலாவது ஏதாவது உண்டியல் அல்லது வேறுவிதமான வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கான நிதி ஆதாரம் ஓரளவுக்கு அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான பள்ளிகளில்—துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில்—நம்முடைய பள்ளிக் கல்வித் துறையின் சார்பாகக் கொடுக்கப்படுகின்ற மின்சாரக் கட்டணம் என்பது போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தினால், அந்தத் தலைமை ஆசிரியர்கள் தங்களுடைய சம்பளத்திலிருந்தும் அல்லது பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்தும் பணத்தை எடுத்து, மின்சாரக் கட்டணம் கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். பள்ளிக் கல்வித் துறையால், நபார்டு திட்டத்தின்கீழும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும், Lab வசதிகளும் ஆங்காங்கே செய்யப்பட்டு, மிகச் சிறப்பாக இப்போது அது இயங்கி வருகின்றது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் இயங்குகின்ற அனைத்துப் பள்ளிகளுக்கும் இலவச மின்சாரம் தருவதற்கோ அல்லது சலுகை விலையிலாவது தருவதற்கோ முன்வந்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்திலேயே அதிகமான நிதி, கல்வித் துறைக்குத்தான் வழங்கப்பட்டு

[2007 அக்டோபர் 19

வருகிறது. எனவே, இதுவரையிலே கல்வித் துறையிடமிருந்து, குறைந்த கட்டணத்திலே மின்சாரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வரவில்லை. அப்படி வந்தால்கூட, அதைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு மின்சார வாரிய இலாகாவால் இயலாத நிலையிலே இருக்கின்றோம்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற வேளையில், முதல் கட்டமாக ஆயிரம் கோயில்களுக்கும், இரண்டாவது கட்டமாக ஆயிரம் கோயில்களுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கிராமப்புறங்களில் இருக்கிற கோயில்கள், வருவாய் இல்லாமல் மிக நலிந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கிராமப்புற மக்களின் வழிபாட்டைக் கருதி, அவர்களின் கோரிக்கையையேற்று—கிராமப்புறங்களில் வருவாய் குறைந்திருக்கிற எல்லாத் திருக்கோயில்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையேற்று—அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே வேளையில் இந்துக் கோயில்களுக்கு வழங்கப்படுவதைப்போல, கிறிஸ்துவ தேவாலயங்களுக்கும், இஸ்லாமிய மசூதிகளுக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். ஆகவே அதற்கும் ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் இப்போது பல இடங்களிலே பகல் நேரங்களிலும், இரவு நேரங்களிலும் மின் வெட்டு அதிகமாக இருப்பதாகப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துகொண்டிருக்கிறதா; அது நிவர்த்தி செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக் கோயில்களுக்குக் கொடுப்பதைப்போல இஸ்லாமிய மசூதிகளுக்கும், கிறிஸ்துவ ஆலயங்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள்



2007 அக்டோபர் 19]

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, எம்மதமும் சம்மதம் என்ற ஒரு கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிற அரசு. ஆனால், கிறிஸ்துவ ஆலயங்களில், ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ள கிறிஸ்துவ ஆலயங்கள் எவையும் கிடையாது. அதேபோல, இஸ்லாமிய மசூதிகளும் கிடையாது. அவர்களுடைய ஆண்டு வருமானம் 10,000 ரூபாய், 15,000 ரூபாய்; இன்னும் கேட்டால் சில கிறிஸ்துவ ஆலயங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலே வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டமே, 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை கலைஞர் ஆட்சியிலே இருந்தபோதுதான் நிறைவேற்றப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறை ஆலயங்களுக்கு, வருமானமே இல்லாமல் இருக்கக்கூடிய ஆலயங்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ள ஆலயங்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் மேலும் ஒரு கேள்வி கேட்டார், மின் வெட்டு இருப்பது குறித்து. அதுபற்றி நேற்றையதினமே விளக்கி இருக்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலே, காற்றாலைகள் மூலமாக 1,600 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி ஆகிக்கொண்டிருந்தது. அக்டோபர் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து காற்றே வீசவில்லை. ஒரு மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்திலே காற்று வீசினால்தான் காற்றாலைகள் இயங்கும். அப்படி இயங்காத காரணத்தாலே, 1,600 மெகா வாட்டுக்கும் குறைவாக நமக்கு மின்சாரம் கிடைக்கின்ற காரணத்தாலே, சில இடங்களிலே மின் தட்டுப்பாடு இருக்கிறது. இன்னும் ஒரு சில தினங்களிலே அது சரி செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளுக்குக் கேட்டதைப்போல, முதியோர் இல்லங்கள், அநாதை இல்லங்கள், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லங்கள், உடல் ஊனமுற்றோர் பள்ளிகளுக்கெல்லாம் கருணைகூர்ந்து நாம் இலவச மின்சாரத்தைத் தந்தால், இவைபோன்ற விடுதிகளிலே அனாதைகளாக, அபலைகளாக இருப்பவர்களுக்கு ஒரு வாழ்வு அளிக்கின்ற நிலை ஏற்படும் என்ற வகையிலே இவைபோன்ற இல்லங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2007 அக்டோபர் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநாதை இல்லங்கள் நடத்துகின்றவர்கள், பல நாடுகளிலிருந்து நிதியைப் பெற்றுத்தான் அந்த இல்லங்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களிடத்திலே ஏராளமான பணம் இருக்கிற காரணத்தாலே, அவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட சலுகைகள் வழங்கினால் மின்சார வாரியம் திவாலாகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

### சாலைப் பராமரிப்பு

***1635—திரு. கோவை தங்கம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்பாறை தொகுதி, வால்பாறை நகராட்சியிலுள்ள சாலைகளைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சிக்குட்பட்ட, வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமாக 25.09 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் உள்ளன. இச்சாலைகளில் 21.31 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தார்ச் சாலைகளாகவும், 3.78 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை சிமெண்ட் கான்கிரீட் சாலையாகவும் உள்ளன. இதில் பழுதடைந்துள்ள கான்கிரீட் சாலை 1.65 கிலோ மீட்டர், 5 வேலைகள், ரூ.4.5 இலட்சம் மதிப்பீட்டிலும் தார்ச் சாலை 2 கிலோ மீட்டர், ஒரு வேலை, ரூ.18 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.



2007 அக்டோபர் 19]

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக இந்த முறை பொறுப்பேற்றவுடனே நான் கேட்ட கேள்வி இது. கேள்வியைக் கேட்டதற்குப் பிறகு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கோவை மாவட்டத்திற்கு வந்தார்கள். சென்ற ஐந்தாண்டுக் காலங்களில் நடைபெறாத ஒரு புதுமையான திட்டத்தை வகுக்க வேண்டுமென்று சொல்லி, கோவை மாவட்டத்திலே ஓர் ஆய்வை நடத்தி, பணிகளை முடுக்கிவிட்டதன் காரணமாக, அற்புதமான திட்டங்களை அவர்கள் சிறப்பான முறையிலே செய்து வருவதால், இந்தப் பணிகள் வால்பாறையிலே வேகமாக நடைபெற்றன. அதற்காக நான் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வால்பாறை பகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சென்ற ஆண்டு வால்பாறை மற்றும் அதன் கீழ்ப் பகுதியில் இருக்கின்ற சில சாலைகளைப் போட வேண்டுமென்பதற்காக, என்னுடைய நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கின்றேன். வால்பாறை நகரின் மேல் பகுதிக்குச் செய்ததைப்போல, கீழ்ப் பகுதியிலும் பணிகள் சிறப்பான முறையிலே நடைபெற்று வந்தாலும்கூட, ஓரிரண்டு ரோடுகள் பழுதடைந்திருக்கின்றன. அவற்றையும் சீர்படுத்திச் செப்பனிட்டுத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்ற உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்ட அடிப்படையிலே, அவற்றையெல்லாம் முறையாக அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய அந்த நிலையை ஏற்படுத்தித் தரக்கூடிய சூழ்நிலையில், நிச்சயமாக அந்தப் பணிகளும் உரிய முறையிலே, உரிய வகையிலே கவனிக்கப்படும்; அதற்கான பணிகளில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், நன்றி சொல்லிவிட்டீர்களே, திரும்ப என்ன கேட்கப் போகின்றீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

[2007 அக்டோபர் 19

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை எவ்வளவு தூரம் நன்றி சொல்லிப் பாராட்டினாலும் தகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை என்பது மலைப் பகுதி. அந்த மலைப் பகுதியிலே சாலைகள் போடுவதிலே சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகின்றது. காரணம், மலையின் கீழ்ப் பகுதியிலிருந்துதான் கற்களைக் கொண்டு போக வேண்டிய நிலை இருக்கிறது. கீழ்ப் பகுதியிலிருந்து கற்களைக் கொண்டு போவதற்கு அரசாங்கம் ஒரு லோடுக்கு 2 ஆயிரம் ரூபாய் என்று நிதி ஒதுக்கீடு செய்கின்றது. ஆனால், மலைப் பகுதியில் பணி செய்கின்ற ஒப்பந்ததாரர்கள் விரைவிலே வேலை செய்ய முன்வருவதில்லை. காரணம், அங்கே வேலை செய்வதற்கு ஒரு லோடுக்கு 3,500 ரூபாய் தேவைப்படுகின்றது. ஆகவே நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், மலையின் கீழ்ப் பகுதியிலிருந்து கற்களை மேலே கொண்டு போகாமல், வால்பாறையில் இருக்கின்ற ரொட்டிக்கடையிலே இருந்து கற்களை எடுக்கின்ற அளவுக்கு அரசாங்கம் உதவி செய்ய முன்வந்தால், 2 ஆயிரம் ரூபாய்க்கு அங்கே வேலைகள் நடக்கும். கட்டடப் பணிகள் உட்பட சில பணிகள் தாமதமாகிக்கொண்டேயிருக்கின்றன. வால்பாறையில் இருக்கின்ற ரொட்டிக்கடையிலே இருந்து கற்களை எடுத்து, மேல் பகுதியிலே பணிகளைச் செய்வதற்கு (குறுக்கீடு) வால்பாறை மலையிலே ரொட்டிக்கடை என்ற ஓர் இடம் இருக்கிறது; அங்கே கல் எடுப்பார்கள்; எனவே, ரொட்டிக்கடையிலிருந்து கற்களை எடுப்பதற்கு அரசாங்கம் உதவி செய்தால், கீழ்ப் பகுதியிலிருந்து கற்களை எடுத்துச் செல்லும் நிலையையே இல்லாமல் செய்யலாம். அப்படி இல்லையென்றால், காலதாமதமும் அதிகமாகும்; நேரமும் அதிகமாகும், தொகையும் 1,500 ரூபாய் ஒரு லோடுக்கு ஒப்பந்ததாரர் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் ஒப்பந்ததாரர்கள் வரமாட்டேன் என்கின்றார்கள்.

நான் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்; தமிழ்நாடு முழுவதும் சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறைக்கு சிறப்புக் கவனம் செலுத்தி, அங்கே ரொட்டிக்கடை பகுதியிலே உள்ள கல் குவாரியிலே கற்களை எடுப்பதற்கு அனுமதி அளிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2007 அக்டோபர் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக அந்தத் துறையினுடைய அமைச்சரிடத்திலே எங்கள் துறை விவாதித்துக்கொண்டிருக்கிறது. எனவே, நல்ல சூழ்நிலையை உருவாக்கி, நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், நீண்ட நெடுங்காலமாக நகரப் பகுதிகளிலே அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு ஒரு புது வாழ்வு அளிக்கின்ற வகையில், அவற்றை அங்கீகரிக்கின்ற, முறைப்படுத்துகின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, மிகக் குறைந்த கட்டணத்திலே அவற்றை முறைப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்தார்கள். ஆனால், இன்றைக்குப் பல்வேறு நகராட்சிகளில் போதுமான நிதி இல்லாத நிலையில், அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகள் செய்வது என்பது இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றது. குறிப்பாக, திருப்பூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சற்றேறக்குறைய 36 வார்டுகள்—52 வார்டுகளில் 36 வார்டுகள்—அங்கீகாரம் இல்லாத மனைப் பிரிவுகளாக இருக்கின்றன. நம்பிக்கையோடு அந்த மக்கள் அந்த வளர்ச்சிக் கட்டணத்தைச் செலுத்தினார்கள். 7 கோடி ரூபாய் வரையில் வசூலாகி இருக்கிறது. ஆனால், கடந்த நகராட்சி நிருவாகம் கடன் வைத்துவிட்டுப் போன காரணத்தினாலே, அந்தக் கடனைக் கட்டுவதற்காகச் செலவிட்டுவிட்டார்கள். பணம் கட்டிய அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் தங்கள் பகுதிக்கு எதுவும் நடக்கவில்லையே என்கிற ஆதங்கத்தோடு இப்போது காத்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, மூலக் கேள்வி வேறு.

**திரு. சி. கோவிந்தசாமி:** இதுவும் ரோடு சம்பந்தப்பட்டதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரோடு சம்பந்தமானதுதான்; நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, இந்த வளர்ச்சிப் பணிகள் நடைபெற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவ முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அந்தச் சாலைகள் எல்லாம் இப்போது நகராட்சிப் பகுதியிலே இருக்கின்றன. அவர் எடுத்து வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, விரைவிலே அது மாநகராட்சியாக மாற இருக்கிறது என்பது, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும்; எனவே, மாநகராட்சியாக மாறுகின்ற காலக்கட்டத்தில் நிச்சயமாக அவருடைய கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## கரும்பு கொள்முதல்

***24611—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கரும்புகளை எஸ்.வி. சர்க்கரை ஆலை, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர் சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகள் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை பகுதியிலே தனியார் சர்க்கரை ஆலையான அருணாசலா சர்க்கரை ஆலை, கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியிலே மூடப்பட்டு நான்கு வருடங்கள் ஆகின்றன. அங்கு பயிரிடப்பட்ட கரும்புகளைக் கொள்முதல் செய்ய மற்ற ஆலைகளில் பதிவு செய்யப்படாததால், காலதாமதம் ஆகி, விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையில் அரசு சில நடவடிக்கைகளை எடுத்தது. இப்போது மீண்டும் இந்தக் கரும்பு கொள்முதல் பருவத்தில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இந்தத் துணை வினாவிற்குக் கொஞ்சம் விரிவான பதிலைத் தர வேண்டியிருக்கிறது; அதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். திருவண்ணாமலை மாவட்டம், மலப்பம்பாடி கிராமத்தில், திருவண்ணாமலை தாலுகாவில் உள்ள ஒன்பது பிர்க்காக்களை எல்லையாகக் கொண்டு, நாளொன்றுக்கு 2,500 டன்கள் அரைவைத் திறன்கொண்ட அருணாசலா சர்க்கரை ஆலை, 2001-2002 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு, இரண்டாண்டுகள்கூட அரைவை செய்ய இயலாத நிலையில், 2003-2004 ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. அரசாலே அதற்கு மூடுவிழாவும் நடத்தப்பட்டதை அப்பகுதி கரும்பு விவசாயிகள் நன்கு அறிவார்கள். அவ்வாறு மூடப்பட்ட சர்க்கரை ஆலை 2002-2003 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் அரைவை செய்த கரும்பிற்கான பணம் ரூபாய் 2.15 கோடி வழங்கப்படாததற்கு முந்தைய ஆட்சி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வரசு பொறுப்பேற்றவுடன், அருணாசலா சர்க்கரை ஆலை விவசாயிகளுக்குக் கரும்புக்கு வழங்க வேண்டிய தொகையான ரூபாய் 2.15 கோடியை உரிய விவசாயிகளுக்கு வழங்க வேண்டி, இவ்வரசால் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ்-R.R. Act-நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை அருணாசலா சர்க்கரை ஆலை நிர்வாகம் 2003-2004 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின்போது மூடப்பட்டு, அவ்வாலையின் கரும்புப் பகுதிகளைப் பிற ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்ய 21-10-2005-ல் நடைபெற்ற, 28-வது கரும்புப் பகுதி ஒதுக்கீட்டுக் குழுவில், அருணாசலா சர்க்கரை ஆலைப் பகுதிகளைத் தற்காலிகமாக தரணி சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கீடு செய்யப் பரிந்துரை செய்யப்பட்டு, அரசு 25-10-2005-ல் ஆணை வழங்கியது. அவ்வாணையில், முண்டியம்பாக்கத்தில் உள்ள திருவாளர்கள் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலையின் ஒரு பகுதியிலும் தரணி சர்க்கரை ஆலை கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டது. இதனை எதிர்த்து ராஜஸ்ரீ ஆலை மற்றும் முண்டியம்பாக்கம் கரும்பு விவசாயிகள் சங்கம், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, இடைக்காலத் தடையாணை பெற்றது. 5-12-2006-ல் உயர் நீதிமன்றத்தில் வழக்கை சர்க்கரை ஆலை திரும்பப் பெற்றதால் அருணாசலா சர்க்கரை ஆலைப் பகுதியில் உள்ள கரும்புகளை வேறு ஆலைகள் அரைவை செய்ய, சர்க்கரை ஆணையரை, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் 27-12-2006-ல் கேட்டுக்கொண்டதன்படி, சர்க்கரை ஆணையர் அவர்கள் 4-1-2007-ல் கூட்டம் நடத்தி, நடப்புப் பருவத்தில் விளைந்துள்ள கரும்பினைத் தரணி சர்க்கரை ஆலை, எஸ்.வி. சர்க்கரை ஆலை, ஆம்பூர் மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு மாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டு 11-1-2007-ல் ஆணை வழங்கப்பட்டது. அதன்படி, மங்கலம், நாயுடுமங்கலம், துரிஞ்சாபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள 83 ஆயிரம் டன் கரும்பினைப் போளூர், தரணி சர்க்கரை ஆலைக்கும், கீழ்ப்பெண்ணாத்தூர், வேட்டவலம், சோமாசிபாடி ஆகிய பகுதிகளிலுள்ள 70 ஆயிரம் டன் கரும்பினை எஸ்.வி. சர்க்கரை ஆலைக்கும், திருவண்ணாமலை தெற்கு மற்றும் வடக்குப் பகுதியிலுள்ள 32 ஆயிரம் டன் கரும்பினைத் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், வெரையூர் பகுதியிலுள்ள 10 ஆயிரம் டன் கரும்பினை ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் மாற்றம் செய்ய ஆணையிடப்பட்டது.

(முற்பகல் 9-50)

அருணாசலா சர்க்கரை ஆலைப் பகுதியிலேயுள்ள கரும்பை அரைவை செய்வதைத் துரிதப்படுத்த, சர்க்கரைத் துறை ஆணையர், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர், திருத்தணி, ஆம்பூர் ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அலுவலர்கள், தரணி, எஸ்.வி. சர்க்கரை ஆலைகளின் நிர்வாகிகள், கரும்புத் துறைத் தலைவர் மற்றும் கரும்பு



உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டுக் கூட்டம் அவ்வப்போது நடத்தப்பட்டு, மீண்டும் மறு ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 15 ஆயிரம் டன்னும், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 30 ஆயிரம் டன்னும், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 10 ஆயிரம் டன்னும், எஸ்.வி. சர்க்கரை ஆலைக்கு 60 ஆயிரம் டன்னும், தரணி சர்க்கரை ஆலைக்கு 1 இலட்சத்து 70 ஆயிரம் டன்னும் மாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டது. இதன்படி, தினசரி கரும்பு அறுவடை செய்து ஜூலை 2007-க்குள் அரைவை செய்து முடித்திட அறிவுரை வழங்கப்பட்டது.

அருணாசலா சர்க்கரை ஆலைப் பகுதியில் பயிரிடப்பட்ட கரும்பு, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 17 ஆயிரம் டன்னும், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 33 ஆயிரம் டன்னும், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 13 ஆயிரம் டன்னும், எஸ்.வி. சர்க்கரை ஆலையில் 15 ஆயிரம் டன்னும், தரணி சர்க்கரை ஆலையில் 1 இலட்சத்து 53 ஆயிரம் டன்னும் அரைவை செய்யப்பட்டுள்ளது. அதாவது, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 55 ஆயிரம் டன்னுக்கு மாறாக, 63 ஆயிரம் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டது.

தனியார் சர்க்கரை ஆலைகளில் 1 இலட்சத்து 68 ஆயிரம் டன் அரைவை செய்யப்பட்டு, மீதமுள்ள 41 ஆயிரம் டன் அரைவை செய்ய, தனியார் ஆலைகள் அரைவைக் காலத்தை நீட்டிப்புச் செய்து வருகின்றன. சர்க்கரை கட்டுப்பாட்டுச் சட்டம், 1966-இலுள்ள 6-வது பிரிவில் 1-சி மற்றும் D-யின்படி, கரும்பு உற்பத்தியாளர்கள் சர்க்கரை ஆலைகளில் சாகுபடி செய்யும் பரப்பினைப் பதிவு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில்தான் கரும்புகளை வெட்டும் உத்தரவு வழங்கப்படுகிறது. சர்க்கரை கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, அந்தந்த ஆலையில் பதிவு செய்யப்பட்ட கரும்புக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு கரும்பு ஆலைகளால் அரைவை செய்யப்பட்டன. பதிவு செய்யப்பட்ட கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலை வழங்கப்பட்டு வருகிறது. சர்க்கரைக் கட்டுப்பாடுச் சட்டம் பதிவு செய்யப்படாத கரும்புக்குப் பொருந்தாது. இருப்பினும், பதிவு செய்யப்பட்ட கரும்பு அரைவை செய்யப்பட்டவுடன், பதிவு செய்யப்படாத கரும்பை அரைவை செய்யவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, அவ்வாறே மாநில அளவில் 8 இலட்சம் மெட்ரிக் டன் பதிவு செய்யப்படாத கரும்பு அரைவை செய்யப்படுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட அருணாசலா சர்க்கரை ஆலையால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைய, தலைவர் கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் தீவிர நடவடிக்கை எடுத்து, பெருவாரியான கரும்பு விவசாயிகளின் துயர் துடைக்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், அனைத்து விவசாயிகள் நலனும் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்தத் தனியார் ஆலையைத் திறக்க வைக்கவும், அங்கே இருக்கின்ற விவசாயிகள் தாங்கள் விரும்புகின்ற இடங்களில் கரும்பினைப் பதிவு செய்யவும், ஏற்கெனவே அனுப்பிய கரும்புக்கு அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை எல்லா ஆலைகளும் வழங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலையை அதன் உரிமையாளர்கள் திறப்பதாகத் தெரியவில்லை. விற்பதற்கான முயற்சியை அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதற்கிடையிலே, அவர்கள் எதிர்பார்க்கின்ற பணம் கிடைக்காத காரணத்தால், அந்த விற்பனையும் நடைபெறாததால் அந்தப் பகுதியிலே அந்த ஆலை இயங்கக்கூடிய வாய்ப்பு இல்லை. விவசாயிகள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, அதைப்பற்றி அரசு ஒரு நல்ல முடிவு எடுத்து, புதியவர்கள் யாராவது அந்தப் பகுதியிலே ஆலை அமைக்க முன்வந்தால், அவர்களுக்கு அனுமதி வழங்கலாமா என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள், கரும்பு பயிரிட்டு, 10 மாதங்கள், 12 மாதங்களாகி அறுவடை செய்ய முடியாமல், 16 மாதங்கள், 17 மாதங்களுக்கு மேலாகியும் அவர்களுக்கு அந்தக் கரும்பு வெட்டப்படுகின்ற order கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. அதனாலே, ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 50 டன் வருகின்ற கரும்பை வெட்ட, 4 மாதங்கள், 6 மாதங்கள் என நாட்கள் கடந்து order கொடுக்கப்படுவதால், அது 30 டன்னாக, பாதியாகக் குறைந்துவிடுகிறது. அதனாலே, குறித்த காலத்தில், அந்தப் பருவ காலத்தில் அந்தக் கரும்பை வெட்டுவதற்கு நம்முடைய அரசு அனுமதி அளிக்குமா? இன்றைக்குத் தமிழகத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் துன்பங்களையெல்லாம் போக்குவதற்கு, கரும்பு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே நம்முடைய அரசு என்ன செய்யப் போகிறது என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் 269.67 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளது. கடந்த 2005-2006 ஆம் ஆண்டில் அரைவை செய்யப்பட்ட கரும்பான 231.46 இலட்சம் மெட்ரிக் டன்னைவிட 38.21 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதலாக இந்த ஆண்டு அரைவை செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், மொத்தம் 87.88 இலட்சம் மெட்ரிக் டன் அரைவை செய்யப்பட்டுள்ளது. இதில் பதிவு செய்யப்படாத கரும்பு 1.26 இலட்சம் மெட்ரிக் டன். தனியார் துறை சர்க்கரை ஆலைகளில் 181.79 இலட்சம் மெட்ரிக் டன் அரைவை செய்யப்பட்டுள்ளது. இதில் பதிவு செய்யப்படாத கரும்பு 6.74 இலட்சம் மெட்ரிக் டன் அரைவை செய்யப்பட்டுள்ளது. ஆக, பதிவு செய்யப்பட்ட கரும்பைவிட, இந்த ஆண்டு அரசு எடுத்த நடவடிக்கையின்மூலம் 8 இலட்சம் மெட்ரிக் டன் பதிவு செய்யப்படாத கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளது. ஆக, பதிவு செய்யப்பட்ட கரும்புகள் அனைத்தும் வெட்டப்பட்டு, அரைவை செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத கரும்பும் இருக்கின்றது. அந்தக் கரும்பையும், கூடுமானவரை ஆலைகள் தொடர் நடவடிக்கை எடுத்து, அதனை அரைவை செய்ய வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்து உத்தரவு வழங்கியுள்ளது. தனியார் ஆலைகளும் செயல்பட வேண்டும்; கூட்டுறவு ஆலைகளும் அரைவை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டதன்பேரிலும், தொடர்ந்து அந்தப் பணி தனியார் ஆலை மூலம் நடந்துகொண்டு இருக்கிறது. (குறுக்கீடு)

[2007 அக்டோபர் 19

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், நான் உங்களைக் கூப்பிட வேண்டும். நீங்களாகக் கையைத் தூக்கிக்கொண்டு எழுந்து நிற்கக் கூடாது. சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைக் கொடுத்தார்கள். ஆனால், யதார்த்த நிலை என்று எடுத்துக்கொண்டால், திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்கள், மற்றும் இருக்கக்கூடிய மாவட்டங்களில் ஏற்கெனவே பயிரிடப்பட்ட கரும்புகளை வெட்ட உரிய நேரத்தில் cutting order விவசாயிகளுக்குக் கிடைக்காத காரணத்தினால், அந்த கரும்புகளையெல்லாம் அவர்களே நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்ட நிகழ்வுகள் பல நடைபெற்று, பெரிய பதற்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தக் கரும்புக்கு, உரிய நேரத்தில் cutting order கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதே நேரத்தில், cutting order கொடுத்தாலும் வெட்டுவதற்கு ஆள் கிடைக்கவில்லை. ஒரு டன்னுக்கு 450 ரூபாயிலிருந்து 500 ரூபாய் என்று கூலியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் விழுப்புரம் பகுதியில் இருந்துதான் ஆட்கள் வர வேண்டும் என்ற ஒரு நிலை வந்திருக்கிறது. மேலும் இந்த ரூ.450-ஐ cutting order-க்கே கொடுத்துவிட்டால்—விவசாயிக்கு வரக்கூடிய அந்த 900 ரூபாயில் 450 ரூபாய் cutting order-க்கே போய்விட்டால்—அவர்களுக்கு என்ன மிஞ்சும்? நீங்கள் ஜப்பானிலிருந்து அந்தக் கரும்பை வெட்டக்கூடிய இயந்திரங்களை எல்லாம் இறக்குமதி செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். சாதாரணமாக இப்போது விவசாயிகள் நட்ட கரும்பை அதனாலே வெட்ட முடியுமா? அல்லது, நீங்கள் சொல்லுகிற முறையிலே நட்டால்தான், பிறகு அந்த இயந்திரத்தால் வெட்ட முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். 1 டன்னுக்கு 1,500 ரூபாய் கொடுப்பதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதையும் நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 அக்டோபர் 19]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பதிவு செய்த மில்களில், பதிவு செய்யப்பட்ட கரும்புகள் அனைத்தும் அரைவை செய்யப்பட்டு விட்டன. இதுதான் உண்மை. பதிவு செய்யப்படாத கரும்புகள் இருக்கின்றன. அவர் சொன்ன திருவண்ணாமலை மாவட்டம், மற்றுமுள்ள பகுதிகளில் 2005-2006 ஆம் ஆண்டு விளைந்த கரும்புகளை, ஆந்திர மாநிலத்தில் இருந்து இந்தப் பகுதிகளுக்கு வந்து, அங்கே வாங்கிச் சென்றார்கள். அந்த நம்பிக்கையிலே, இங்கே இருக்கின்ற மில்களில் பதிவு செய்யாமல், இந்த முறையும் அதேபோல் நம் கரும்புக்கு விலை கிடைக்கும்; அங்கே அனுப்பலாம் என்று எண்ணிக் கரும்பு போட்டவர்கள்தான் பாதிக்கப்பட்டார்கள். இருந்தாலும்கூட இந்த அரசு, பதிவு செய்யப்பட்ட கரும்பைக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சேர்ந்த ஆலைகளில் அரைவை செய்து விட்டாலும்கூட, பதிவு செய்யப்படாத கரும்பு இருந்தாலும், அரைவை செய்கின்ற காலத்தைக் கொஞ்சம் நீட்டித்து அதையும் வெட்ட வேண்டுமென்று அரசு, கூட்டுறவுத் துறை, பொதுத் துறைக்கு அனுமதித்து, அதையும் நாம் அரைவை செய்து இருக்கின்றோம், 2 இலட்சம் டன் கரும்புகளை. தனியார் 6 இலட்சம் டன் கரும்புகளை, அவர்களும் அரைவை செய்து இருக்கிறார்கள், பதிவு செய்யப்படாத கரும்புகளை. சில பேர் சர்க்கரை, வெல்லம் போன்றவற்றைத் தயாரிப்பதற்காக, அவர்களாகவே கரும்பைப் போட்டுவிடுகிறார்கள். இந்த நேரத்தில், அவர்களுக்கு வெல்லமும், சர்க்கரையும் தயாரித்தால் விலை குறைவாக இருக்கிறது. ஆகவே, கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், பொதுத் துறை ஆலைகள், கரும்பை வெட்டினால் 9 புள்ளி கட்டுமானத்திற்கு 1,025 ரூபாய் பணம் கிடைக்கும்; அதற்குமேல் ஒவ்வொரு புள்ளிக்கும் கட்டுமானத்திற்கு 9 ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும்; நல்ல விலை கிடைக்கும் என்பதற்காக, “இப்போது நீங்கள் வெட்டுங்கள், வெட்டுங்கள்” என்று சொல்கிறார்கள். நாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்தான் மில்களில் அரைவை பண்ணலாம். மீண்டும் நாம் அந்த மில்களை நிறுத்தி, அவற்றை எல்லாம் overhauling பண்ணினால்தான், அடுத்த season-க்கு நாம் நடத்த முடியும்; கரும்பை வெட்டி அரைவை செய்ய முடியும். நாம் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறபோதுகூட, 2 மாத காலங்கள் அதற்காக நீட்டித்து, பதிவு செய்யப்படாத கரும்புகளை ஓரளவுக்கு நாம் வெட்டிவிட்டோம். தனியாரிடம் நாம் இன்னும் கொஞ்சம் ஒதுக்கீடு செய்து இருக்கின்றோம், அதை அரைவை செய்ய வேண்டுமென்று. அந்தக் கரும்பையும், அந்தத் தனியார் ஆலைகள்

இன்னும் வெட்டிக்கொண்டு, அரைவை செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இதை நாம் வேண்டுமென்றே அரசியல் ஆக்க வேண்டிய அவசியமும் இல்லை.

இன்னொன்று, அவர் சொன்னது உண்மைதான்; அதாவது, கரும்பு வெட்டுவதற்குக் கூலி ஆட்கள் கிடைப்பது இல்லை என்று. அதற்கு 400 ரூபாய் கேட்கிறார்கள்; சில இடங்களில் 450 ரூபாய் கேட்கிறார்கள். அது நிரம்பக் கஷ்டமான சூழ்நிலை. உரிய காலத்தில் மில்கள் கரும்பு வெட்டுவதற்கு ஆணையிட்டாலும்கூட, கரும்பு வெட்டுவதற்கு ஆட்கள் கிடைப்பது இல்லை. இந்த நிலையெல்லாம் அரசினுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பிறகுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று என்னுடைய தலைமையில் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை, தாய்லாந்து, ஜப்பான், சீனா போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே நாங்கள் சென்று பார்த்ததிலே, அப்படிப்பட்ட மெஷின்களை வாங்கி வருவதன்மூலம், ஒரு ஆலைக்கு 2,500 டன் அரைவை அளவுக்குத் தேவை இருக்கிறது என்றால், அதற்கேற்ப வெட்டக்கூடிய மெஷின்களை வாங்கி வைத்தால் உரிய காலத்தில் கரும்பை வெட்டலாம் என்று இருக்கிறது. அப்படி வெட்டுகிறபோது அதற்கு என்ன கூலி ஏற்படும் என்று நாங்கள் ஒரு கணக்கை அந்த மில் அதிபர்களிடத்திலே—அரைவைக் கரும்பை வெட்டுகின்ற அந்த இயந்திரத்தைத் தயாரிப்பவர்களிடத்திலே—கேட்டுத் தெரிந்துகொண்ட வகையில் 1 டன்னுக்கு 125 ரூபாய்தான் செலவு ஏற்படும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, அந்த மெஷின்களை நம்முடைய மாநிலத்திலே இறக்குமதி செய்ய, விரைவிலே நாம் இதற்கு ஒரு முடிவை எடுக்கலாம் என்ற கருத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகத் தமிழ்நாட்டிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிவு செய்யப்பட்ட கரும்புகள் அனைத்தும் அரைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், கிட்டத்தட்ட 1 1/2 ஆண்டுகளுக்கு மேல், 18 மாதங்கள், 20 மாதங்கள் என்று எங்கள் பகுதியிலே கிட்டத்தட்ட, பல ஆயிரம் ஏக்கர் கரும்புகள், செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை மில்கள் மூலம் பதிவு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட கரும்புகளே இன்னும்



அரைக்கப்படாத நிலைமை இருந்து வருகின்றது. நீங்கள் அதை ஆய்வு செய்துகூட பார்க்கலாம். அதேபோன்று, எங்கள் மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத கரும்புகள் பல ஆயிரம் ஏக்கர் இருப்பதாக எங்கள் மருத்துவர் அய்யா அவர்களுடைய தலைமையிலே போராட்டத்தின் மூலமாக இந்த அரசுக்குத் தெரிவித்து, பல மனுக்களை அமைச்சரிடத்திலேயும் கொடுத்து இருக்கின்றோம். ஆனால், இதுவரையிலும் அந்தப் பதிவு செய்யப்படாத கரும்புகள் அரைக்கப்படாத நிலை உள்ளது. இந்த அரசு அவற்றை அரைப்பதற்கு ஆவன செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததுபோல, அவருடைய கட்சியின் நிறுவனத் தலைவர் சென்று, விவசாயிகளிடத்திலே மனுக்களை எல்லாம் பெற்று எனக்கு அனுப்பி வைத்தார்கள். நான் உடனடியாக அதை விசாரித்து உரிய பதிலையும் அவர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டேன். கூட்டுறவு, பொதுத் துறைகளிலே பதிவு செய்யப்பட்ட கரும்புகள் அனைத்தும் வெட்டப்பட்டு அரைவை செய்யப்படுகின்றன; செய்யப்பட்டுள்ளன. தனியார் ஆலைகளிலே இன்னும் கொஞ்சம் அவர்கள் அரைவை செய்துகொண்டே இருக்கிறார்கள். அதுதான் பிரச்சினையே தவிர, கூட்டுறவு, பொதுத் துறைகளிலே நாம் முழுமையாக அரைவை செய்துவிட்டு, இப்போது ஆலைகளை எல்லாம் நிறுத்தி, அவற்றை overhauling செய்து, அடுத்த season-க்கு, 2007 ஆம் ஆண்டு season-க்குக் கரும்பு அரைவை செய்வதற்கான அந்தப் பணியிலே இப்போது நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் பயிரிடப்பட்டுள்ள கரும்புகளைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னால், மூடிக் கிடக்கும் படாளம் சர்க்கரை ஆலையை மீண்டும் திறக்க வேண்டும். இங்கே அமைச்சர் அவர்கள் அருணாசலா சர்க்கரை ஆலையைப் பற்றி மிக விரிவாகக் கூறினார்கள். அருணாசலா

சர்க்கரை ஆலை 2001-2002 ஆம் ஆண்டுதான் திறக்கப்பட்டது. ஆனால், படாளம் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், சுதந்திரம் பெற்ற பிறகு திறக்கப்பட்ட முதல் சர்க்கரை ஆலையாகும். அதிலும், திறக்கப்பட்ட நாள் முதல் 20 கோடி ரூபாய் இலாபம் ஈட்டி வந்துள்ள ஆலையைக் கடந்த தி.மு.க. ஆட்சியினர். . . (குறுக்கீடு) அ.தி.மு.க. ஆட்சியினர் Sorry, அ.தி.மு.க. ஆட்சியினர்-- தனியார் சர்க்கரை ஆலைகளுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அந்தப் படாளம் சர்க்கரை ஆலையை மூடியுள்ளார்கள். தான் பதவி ஏற்ற முதல் நொடியிலேயே தமிழகத்திலுள்ள விவசாய நெஞ்சங்களில் எல்லாம் பால் வார்த்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) என் தொகுதியில் பசியும், பட்டினியுமாக வாடிக்கொண்டிருக்கும் கரும்பு விவசாயிகளின் துயர் தீர்க்கும் வகையில், எங்கள் படாளம் சர்க்கரை ஆலையைத் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல், கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில், அந்தப் படாளம் சர்க்கரை ஆலை திறக்கப்படும் என்ற அறிவிப்பை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதற்கான நடவடிக்கைகள் ஏதாவது இந்த அரசு எடுத்திருக்கின்றதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** உட்கார்ந்துகொண்டே சொல்லிக் கொடுக்கக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத் துறையில் 19 ஆலைகள் இருக்கின்றன. இந்த ஆலைகளுக்கு வரும் கரும்புக்குத் தருகின்ற விலையை, அரைவை மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து வருகின்ற அந்த விலையைக் கணக்கிட்டுப் பார்த்து, அவற்றில் சர்க்கரை உற்பத்தியாகி விற்கிறபோது, ஏறத்தாழ 400 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு நட்டம் ஏற்படுகிறது. கரும்பு விவசாயிகளுக்கு உரிய முறையிலே பணத்தைத் தர வேண்டும் என்பதற்காக, கருணை உள்ளம் படைத்த நம்முடைய முதல்வர் அவர்கள் பணத்தைக் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுங்கள் என்று, அரசு சார்பிலே வழங்கி வருகின்றார்கள். அதன் காரணமாகத்தான்,





விவசாயிகளுக்குக் கரும்புக்கான உரிய பணத்தை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு நட்டங்கள் ஏற்படுகின்ற நிலையில், இந்தச் சர்க்கரை ஆலைகளை இலாபத்திலே இயக்குவதற்கு என்ன செய்யலாம் என்பதற்கு உரிய நடவடிக்கை எடுங்கள் என்று முதலமைச்சர் ஆலோசனை வழங்கியதன்பேரில்—எல்லா ஆலைகளிலும்— Co-generation—மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும்; ethanol தயாரிக்க வேண்டும்; spirit தயாரிக்க வேண்டும்; அந்த முறையிலே பயன்படுத்தினால்தான் இலாபகரமாக இயங்க முடியும் என்ற ஆலோசனை முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டதன்பேரில்— இப்போது புதிதாக ஆலைகளைத் தனியார் எவர் போட முன்வந்தாலும்கூட, இந்த condition-ஐ அவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதோடு, மத்திய அரசு நிர்ணயிக்கின்ற விலையையும், மாநில அரசினுடைய பரிந்துரை விலையையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதோடு, வண்டி வாடகை முழுவதையும், கரும்பு ஆலைக்கு எடுத்து வருகின்ற அந்த வாடகையையும் அவர்களே ஏற்றுக்கொண்டால்தான் உரிமம் வழங்கப்படும் என்றும் ஓர் ஆணை முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு, நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

*முற்பகல் 10-10*

இவ்வளவு பெரிய நட்டத்திலே இருக்கின்ற கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளை இலாபத்திலே கொண்டு வருவதற்கு ஒருபுறம் நடவடிக்கை எடுக்கின்ற அதே நேரத்தில், இன்னும் நட்டத்திலே இயங்கக்கூடிய அளவிலே இருக்கக்கூடிய ஆலைகளை-- கூட்டுறவுத் துறை ஆலையையோ, பொதுத் துறை ஆலையையோ-- எடுத்து நடத்துவது என்பது சிரமம் என்பதை அரசு கருத்திலே கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த மதுராந்தகம், படாளம் சர்க்கரை ஆலையைத் தனியார் யாராவது நடத்த முன்வந்தால், நாம் lease-க்குக் கொடுக்கலாமா என்ற ஒரு முடிவையும் நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றோம். அதை விரைவிலே அமைச்சரவைக் கூட்டத்திலே வைத்து, அதுபற்றி முடிவெடுக்கப்பட்டு, அந்த அடிப்படையிலே நாம் அந்த ஆலையை இயக்குவதற்கு விரைவிலே நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## நீதிமன்றம்

***6701—திருமதி டி. யசோதா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைமையிடமான ஸ்ரீபெரும்புதூரில் நீதிமன்றம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரிலே மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைத்திட 18-7-2007 அன்று தக்க ஆணை வெளியிடப்பட்டது. அதற்கிணங்க, தலைமைப் பதிவாளர், உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பிய அறிக்கையை மொழிவதற்கான செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிட உள் துறையால் 11-10-2007 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசிடமிருந்து மாநில அரசினுடைய உரிமைகளை, பங்குகளைப் பெற்றுத் தருவதிலே தமிழக முதல்வர் முன்னிலையிலே நிற்கிறார் என்பதிலே யாருக்கும் ஐயப்பாடு இருக்க முடியாது. சென்னை உயர் நீதிமன்றக் கிளையினை மதுரையிலே நிறுவி, தென் மாவட்ட மக்களுடைய பயன்பாட்டிற்கு உகந்த வகையிலே அமைத்திருப்பது பெரிய நன்மைகளைத் தந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே, பல்வேறு வகைகளிலும் நீதிமன்றத்தை நாடக்கூடிய இந்நாளிலே, டெல்லியிலே இருக்கக்கூடிய உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையினைத் தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே அமைந்திருக்கக்கூடிய உச்ச நீதிமன்றத்தின் ஒரு பகுதியை, கிளையைத் தமிழகத்திலே சென்னையிலே அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகத் தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள்; இந்த அரசும் பல முயற்சிகளை எடுத்திருக்கிறது. அரசு எடுத்த முயற்சியின் விளைவாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசும் உச்ச நீதிமன்றத்தை இதுகுறித்து அணுகியது. இந்தக் கோரிக்கையை முன்வைத்து, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினுடைய தலைமையில் எல்லா நீதிபதிகளும்—Full Bench—உட்கார்ந்து ஆய்வு செய்து, டெல்லியைத் தவிர இந்தியாவிலே வேறு எங்கும் உச்ச நீதிமன்றத்தின் கிளைகளை அமைப்பதில்லை என்று ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவை மத்திய அரசு நமக்குத் தெரிவித்திருக்கிறது. இருந்தாலும், மீண்டும் உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதிக்குத் தமிழக அரசின் சார்பில் ஒரு வேண்டுகோளை அனுப்பலாம். ஆனாலும், நாம் நேரடியாக அனுப்ப முடியாது, உச்ச நீதிமன்றத்திற்கு. மீண்டும் அதைத் தலைமை நீதிபதி அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். எழுதலாமா என்பது குறித்து, அதற்கு வேண்டிய ஒரு வரைவுக் கடிதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆணைக்கேற்ப. . . (குறுக்கீடு) இல்லை, நம்முடைய தலைவர் அவர்கள், நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு கடிதத்தை மத்திய அரசின் சட்ட அமைச்சருக்கு எழுதுவதற்காக, ஒரு வரைவுக் கடிதம் தயார் செய்யப்பட்டு 16-10-2007 அன்று முதல்வர் அவர்களுடைய பார்வைக்குச் சென்றிருக்கிறது. எனவே, மீண்டும் இந்த அரசு மத்திய அரசை இது குறித்து வற்புறுத்தும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்திலே ஸ்ரீபெரும்புதூரிலே புதிய நீதிமன்றம் ஏற்படுத்தப்படும் என்று ஏற்கெனவே கடந்த முறை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்து, அதற்கான அரசாணையையும் பிறப்பித்திருக்கிறார்கள். அங்கே அந்த நீதிமன்றத்திலே, குற்றவியல் நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் அமையுமா? எங்களுடைய மாவட்டத்திலே, அதுவும் என்னுடைய தொகுதியில்

திருக்கழுக்குன்றத்திலே இருக்கின்ற நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. அதேபோல, உத்திரமேரூர் நீதிமன்றத்திற்கும் புதிய கட்டடம் இல்லை. அவை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலே புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படுமா? அதிலும், மதுராந்தகத்திலே இருக்கின்ற நீதிமன்றம் ஒரு சிறிய இடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்காகத் தனியாக நீதிமன்றக் கட்டடம் கட்டப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூரிலே அமையவுள்ளது உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்தான். நான் நேற்றே இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்களின் ஒவ்வொரு ஊரிலும், அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. சென்ற முறை, சென்ற நிதிநிலை அறிக்கையிலே, நாங்கள் 20 இடங்களை அப்படித் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அதைத்தான் நான் சொன்னேன். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக அறிவித்தார்கள். 300 கோடி ரூபாய் நிதி அதற்காக ஒதுக்கப்படுகிறது; படிப்படியாக நான்கு ஆண்டுக் காலத்திற்குள், இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற எல்லா நீதிமன்றக் கட்டடங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்ற உறுதியைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆக, நான்கு ஆண்டுக் காலத்தில், எந்தெந்த இடத்திற்குத் தேவையோ, அந்தந்த இடத்திற்கு நீதிமன்றக் கட்டடங்கள் கட்டித் தரப்படும். அஃதன்னியில், மத்திய அரசு prospective plan ஒன்று கேட்டார்கள். அதனடிப்படையிலே, 213 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தீட்டி இந்த அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதனுடைய அனுமதியை எதிர்பார்த்து இருக்கிறது. அதுவும் வருமானால், கிட்டத்தட்ட 513 கோடி ரூபாய் இந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கென இருக்கும். அதைத்தான் நேற்றே நான் சொன்னேன். அதையே இன்றைக்கும் நான் சொல்கிறேன். நிச்சயமாக இந்த அரசு, வருகிற காலக்கட்டத்திற்குள், நான்கு ஆண்டுக் காலத்திற்குள்ளாக எந்தெந்த இடங்களில் எல்லாம் நீதிமன்றங்களைப் புதிதாகக் கட்ட வேண்டுமோ, அல்லது புதுப்பிக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் நிச்சயம் கட்டித் தரும் என்று நான் நேற்றும் சொன்னேன்; இன்றைக்கும் சொல்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர்
ந. எஸ். ராஜகுமார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
வர்கள்.

—

## புதிய கட்டடம்

**•9234—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும்
னாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப்
ிற்சி மைதானத்துடன் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**
ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மோட்டார் வாகன ஆய்வாளர்
லுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து, மயிலாடுதுறை
ர எல்லை புல எண் 20, நகரளவு எண் 517 மற்றும் 518-ல்,
7 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து, அதற்கு நாகப்பட்டினம் மாவட்ட
ட்சியர் முன்மொழிவு அளித்துள்ளார். மேலும், சொந்தக் கட்டடம்
டுவதற்கு ஆகும் செலவு ரூ.75.00 இலட்சத்திற்கான மதிப்பீடு மற்றும்
ரைபடம், செயற்பொறியாளர், பொதுப் பணித் துறை, நாகப்பட்டினம்
வர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. வரவிருக்கும் 2008-2009 ஆம்
ண்டு பகுதி-2 திட்டத்தில், மேற்படி பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக்
டடம் கட்டுவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு பெற்று நடவடிக்கை
ற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
ந. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்
ந. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
ட்டூர் பகுதியில் ஒரு வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர்
லுவலகம் இதுவரையில் இருந்து, அது சேலம் போக்குவரத்து
லுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. இப்போது அது

சேலத்திலிருந்து சங்ககிரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. மேட்டூர், அதிக சரக்குந்துகள், அதாவது லாரி போக்குவரத்து மிகுந்த பகுதி. தொழிற்சாலைகள் மற்றும் அனல் மின் நிலையத்திலிருந்து சாம்பல் ஏற்றிக்கொண்டு செல்லும் வண்டிகள் அதிகம் இருக்கின்றன. போக்குவரத்து உரிமையாளர்கள் இந்த மாற்றத்திற்காக ஒரு போராட்ட அறிவிப்பைக்கூட செய்தார்கள். நாங்கள்கூட, சட்டமன்றம் விரைவில் கூட இருக்கிறது; அதில் அனுமதி பெற்றுத் தருகிறோம் என்று வாக்குறுதி அளித்து, அந்தப் போராட்டத்தை எல்லாம் நிறுத்தி வைத்திருக்கிறோம். இது அவசிய, அத்தியாவசியத் தேவை என்கிற காரணத்தினாலே, மேட்டூரிலிருந்து சேலம் சென்று சங்ககிரிக்குச் செல்லக்கூடிய வாய்ப்புகளெல்லாம் இருக்கிற காரணத்தினாலே பழைய மாதிரியே மேட்டூர் ஆய்வாளர் அலுவலகம், சேலம் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் மீண்டும் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள், ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, புதியதாகப் பத்து அலுவலகங்களைத் திறந்து இருக்கிறார்கள். ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த R.T.O. அலுவலகங்கள் 47 தான். இப்போது புதிய அலுவலகங்களாகத் தரம் உயர்த்தப்பட்ட R.T.O. அலுவலகங்கள் 10. யூனிட் அலுவலகங்கள் பத்து. வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்ற எண்ணிக்கையின் அடிப்படையில், தேவை எங்கு அதிகம் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளிலே அந்த அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை ஆய்வில் எடுத்து இந்த ஆண்டு மறுபடியும் ஆய்வு செய்து, முடியுமானால் அந்த அலுவலகத்தை மீண்டும் திறக்க இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

*(முற்பகல் 10-20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பயிற்சி மைதானத்தோடு கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது.



இதுபோல நமது தமிழகத்திலே அரசின் சார்பிலே எத்தனை கட்டப்பட்டுச் செயல்படுகின்றன? மேலும், புதியதாகக் கட்டப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புவதோடு, பயிற்சி மைதானம் என்று குறிப்பிடுகிறபோது, இப்போது சாலைப் போக்குவரத்து என்பது மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. தினசரிப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால், சாலை விபத்துகள் என்ற செய்தி தினசரி வந்துகொண்டேயிருக்கிறது. 5 பேர் இறந்தார்கள்; 10 பேர் இறந்தார்கள் என்ற செய்தி வந்துகொண்டேயிருக்கிறது. இதுகுறித்துக்கூட, சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த கவலையோடு இந்தச் சாலை விபத்தினைப்பற்றி விரிவாகத் தன்னுடைய கருத்தை இங்கே வெளியிட்டார்கள். அதைத் தடுப்பதற்குரிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். தினசரி இந்த செய்திகள் வருகின்றன. கொத்துக் கொத்தாக மனிதர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்குரிய முயற்சி என்ற வகையிலே, வாகன ஓட்டிகளை எப்படிச் சரிப்படுத்துவது; அவர்களைத் திறமையான ஓட்டுநர்களாகப் பயிற்றுவிப்பது எப்படி என்பதைப்பற்றி எல்லாம் முயற்சிகள் இருக்கின்றன என்றாலும், ஒரு தனித்த திட்டமாக அதை மேற்கொள்வதற்குரிய முயற்சியாக அரசு என்ன செய்யவிருக்கிறது? அதேபோல, கன ரக வாகனங்கள் என்ற முறையிலே, லாரிகள் போன்றவற்றை இரவிலே முக்கியமான சாலைகளிலே போக்குவரத்து செய்வதற்குத் தடை செய்தால், ஓரளவு இந்த விபத்துகளைத் தடுக்கலாம் என்று நான் கருதுகிறேன். அதுபோல ஏதும் அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் சார்பாக ஓட்டுநர் தேர்வு தளம் அமைய நமது தமிழ்நாட்டிலே இரண்டு இடங்களிலே ஆய்வு செய்யப்பட்டு, அவற்றை இப்போது ஆரம்பிக்கவிருக்கிறோம். ஒன்று, கடலூர்; மற்றொன்று, மயிலாடுதுறை. அந்த இடங்களிலே அந்தப் பணிகள் எல்லாம் நடக்கவிருக்கின்றன. இடம் கிடைப்பதிலே உள்ள சிரமங்கள்தான் காலதாமதத்திற்குக் காரணமாக இருக்கிறது. மேலும், இந்த ஓட்டுநர் தேர்வு தளத்தைத் தமிழ்நாட்டிலே மேற்கொண்டு இடங்களிலே தருவதற்கு மத்திய அரசு ஒப்புதல் தந்து, அதற்கான

இடம் தேர்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. விரைவிலே இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், மத்திய அரசினுடைய முழுத் தொகையிலே அந்த ஓட்டுநர் தேர்வு தளம் 5 இடங்களிலே அமையப்படவிருக்கிறது. மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்; ஆங்காங்கே கொத்துக் கொத்தாக மனிதர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள்; அதனால் ஓட்டுநர்கள் தரமானவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலே தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றியும் கேட்டார்கள். ஏற்கெனவே தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 17 இடங்களிலே training centres இருந்தன, நல்ல தரமான ஓட்டுநர்களைத் தயார் செய்வதற்காக. கடந்த கால ஆட்சியிலே அந்த 17 இடங்களையும் மூடிவிட்டார்கள். இப்போது இந்த ஆட்சியிலே, நம்முடைய முதலமைச்சர் சொல்லி, 17 இடங்களிலும் இந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்கவும், தனியாக நம்முடைய போக்குவரத்துக் கழகத்திற்கு என்று ஒரு academy-யை மத்திய அரசின் 4¼ கோடி ரூபாய் திட்டத்திலே நமது குரோம்பேட்டையிலே ஆரம்பிப்பதற்கும், ஓட்டுநர்களாக யார் தேர்வு செய்யப்படுகிறார்களோ, அவர்கள் எல்லாம் தரமானவர்களா என்று சோதிக்க, அவர்களுக்கு training தனியாகத் தரப்பட்டு, நல்ல தரமான ஓட்டுநர்களை உருவாக்கவும், ஓட்டுநர்களை உருவாக்கிய பிறகு, அவர்களுக்கு counselling என்ற வகையில், மூன்று மாதத்திற்கு ஒரு முறை மீண்டும் அவர்களை அழைத்துப் பேசவும், இதுபோன்ற திட்டங்களை எல்லாம் தமிழ்நாடு அரசின் சார்பாகத் தொடர்ந்து செயல்படுத்த இருக்கிறோம். வாகனங்களுடைய எண்ணிக்கைப் பெருக்கத்தினால் ஏற்படும் accident-ஐத் தடுக்க நடவடிக்கை எடுப்பது என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிலே 300 இடங்களிலே ஆய்வு செய்யப்பட்டு, அவையெல்லாம் accident zones என்று கருதப்பட்டு, அதற்காக 40 கோடி ரூபாய்க்கு மேலாகத் தமிழ்நாடு அரசின் பணம் ஒதுக்கப்பட்டு, அந்த accident zone-களையெல்லாம் சரி செய்து கொண்டிருக்கிறோம். இவையெல்லாம் இந்த அரசின் சார்பாக எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகள். மேலும் சொன்னார்கள், இரவு நேரங்களிலே லாரிகள் எல்லாம் செல்வதைத் தடை செய்ய முடியுமா என்று. அதுபோல் ஒரு திட்டம் இல்லை. லாரிகள் செல்லவும், அந்த நேரத்தில் விபத்து இல்லாமல் செய்யவும் உள்ள நடவடிக்கைகளை இந்தத் துறை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி பெயரைக் கொண்ட நாங்குநேரி ஊரில் பஸ் நிலையம் பழுதடைந்து பல காலமாக வெயிலும், மழையும் அங்கே வருகின்ற மக்களின்மேல் பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த வெயிலையும், மழையையும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்தி, அங்கே இருப்பதற்கும், ஒளி வெள்ளம் வருவதற்கு விளக்குகளை அமைத்துத் தரவும் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்கள் 90 சதவிகிதம் முழுமையாக உள்ளாட்சித் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை உரிய முறையிலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, நல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகரைப் பொறுத்த அளவில், இருக்கின்ற பேருந்து நிலையங்களில் ஒரு பாதி மாநகராட்சியின் சார்பாகவும், மீதி போக்குவரத்துத் துறையின் சார்பாகவும் இருக்கின்றன. ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பேருந்து நிலையங்கள் மிகவும் பழமையாகவும், மழைக் காலங்களிலே தண்ணீர் தேங்கி நிற்கிற நிலையிலும் உள்ளதால் அவற்றைச் சரி செய்வதற்காக இந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 15 கோடி ரூபாயைத் தனி நிதியாக, அரசு நிதியாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நாங்குநேரியைப் பொறுத்த அளவில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

## எரிவாயு சிலிண்டர்

***28859—திரு. து. ரவிக்குமார்:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நியாய விலைக் கடைகள் மூலமாக எரிவாயு சிலிண்டர் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நியாய விலைக் கடைகள் மூலமாக எரிவாயு சிலிண்டர் வழங்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எரிவாயுப் பயன்பாடு என்பது மிகவும் அதிகமாக அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைமையிலான அரசு அறிவித்திருக்கின்ற இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் அந்தத் திட்டத்தின் காரணமாக இதுவரை புகை அடுப்பால் துயரப்பட்டுக் கொண்டிருந்த பெண்கள் எல்லாம் எரிவாயுவைப் பயன்படுத்துகின்ற ஒரு நல்ல சூழல் உருவாகி இருக்கிறது. அடுத்த ஆண்டிலே கூடுதலாக 3 இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகளைக் கொடுப்பதற்காக, நம்முடைய துணை மதிப்பீடுகளிலே 60 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஊரகப் பகுதிகளிலே எரிவாயுப் பயன்பாடு என்பது அதிகரிக்கின்ற இந்த நேரத்திலே, அதைக் கொடுக்கின்ற ஏஜென்சிகள் அதற்குக் கூடுதலாகப் பணம் கேட்கிறார்கள். ஏனென்று சொன்னால், ஊரகப் பகுதிகளிலே கொண்டு வந்து சிலிண்டரை சப்ளை செய்வதற்குக் கூடுதலாக அந்த மக்களிடத்திலே பணம் கேட்கிறார்கள். நகரப் பகுதியிலேகூட 50 ரூபாய் வரை அப்படி வாங்குகிறார்கள். அது மட்டுமல்லாமல், அந்த ஏஜென்சிகள் வீட்டு உபயோகத்திற்கான எரிவாயு சிலிண்டர்களை ஓட்டல் முதலான நிறுவனங்களுக்குத் திருப்பி விடுகின்ற காரணத்தினாலே, எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைச் செயற்கையாக உருவாக்கி, மக்களிடத்திலே





ஓர் அதிருப்தியையும் இன்றைக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைக் களைவதற்காகத்தான் நம்முடைய அரசு நியாய விலைக் கடைகள் மூலமாக இந்த எரிவாயு சிலிண்டர்களை வழங்குமேயானால், அது ஊரகப் பகுதிகளுக்குக் கிடைப்பதற்கு வழி ஏற்படும். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு இலவசமாக நம்முடைய அரசின் கருணை உள்ளத்தால் எரிவாயு இணைப்பைப் பெற்ற ஏழை மக்கள், அந்த சிலிண்டர்களுக்குக் கூடுதலாகப் பணம் கொடுக்க வேண்டிய ஓர் அவல நிலையும் தவிர்க்கப்படும். இதை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், இந்த ஆண்டு கூடுதலாக 3 இலட்சம் இலவச அடுப்புகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு 8 இலட்சம் அடுப்புகள் வழங்குவதற்காக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் இந்த அரசு எடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. இது ஒன்று. ஏற்கெனவே இருக்கிற எரிவாயு இணைப்பு என்கிற வகையிலே, 10 கிலோ மீட்டர் தூரம் வரை கொடுக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த 10 கிலோ மீட்டர் வரை எந்தவிதமான கூடுதல் கட்டணமும் பெறக் கூடாது என்று அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே, தமிழ்நாட்டிலே இந்த இலவச எரிவாயு அடுப்புகள் எல்லாம் கிராமப் பகுதிகளுக்குப் போகிற காரணத்தினால், அங்கு ஏற்கெனவே இருக்கிற ஏஜென்சிகள், தனியாருடைய ஏஜென்சிகள் எல்லாம் முறையாக 30 கிலோ மீட்டர் தூரம், 35 கிலோ மீட்டர் தூரம் எல்லாம் போக முடியாது என்பதை அரசு அறிந்த காரணத்தினால்தான்—இன்னும்கூட சொல்லப் போனால், சில தொகுதிகளின் தலைமை இடம் என்கிற இடத்தில்கூட இந்த ஏஜென்சிகள் எல்லாம் இல்லை; நான் பிறந்த எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட, பெரணமல்லூர் தொகுதி என்ற ஒரு தொகுதியே இருக்கிறது; அங்கு ஏஜென்சி இல்லை; இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கிற என்னுடைய ஊருக்குக்கூட அந்த ஏஜென்சி இல்லை—இப்படித் தமிழ்நாட்டிலே பல இடங்களிலே கண்டறிந்து, 69 இடங்களிலே ஏஜென்சிகள் இல்லை என்பதைக் கண்டறிந்து முதலமைச்சரிடத்திலே

சொன்னபொழுது, நேரடியாக அவற்றை எல்லாம் நுகர்வோர் வாணிபக் கழகத்தின் மூலமாக அல்லது வலுவாக இருக்கிற கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடத்தலாம் என்று அவர்கள் அறிவுரை சொன்னதன்பேரில், நேரடியாக 12-6-2007 அன்று மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினோம். "69 இடங்களுக்கு நீங்கள் ஏஜென்சி வழங்க வேண்டும் அரசுக்கு" என்று நாங்கள் கடிதம் எழுதி இருக்கிறோம். அதோடு மட்டுமல்ல; 8-10-2007 அன்று நேரடியாகச் சென்று, மாண்புமிகு திரு. முரளி தியோரா அவர்களைச் சந்தித்து, "69 இடங்களில் இந்த ஏஜென்சிகளைக் கொடுப்பதன் மூலமாகத்தான் இந்தத் திட்டம் முழுமையாக கிராமங்களுக்குப் போய்ச் சேரும்" என்றும் சொல்லி இருக்கிறோம். அப்போது உடனிருந்த மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ராஜா அவர்கள்கூட விளக்கிச் சொன்னார்கள். அவற்றை உடனடியாக அரசுக்குக் கொடுக்கலாம் என்ற ஓர் உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அவை வருகிறபொழுது, தமிழக அரசின் சார்பாகத் தலைவர் அறிவித்த சிறப்புத் திட்டம் முறையாக வந்து சேர்வதற்கு இந்த அரசு வேகமாக முயற்சிகள் எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

Gas தட்டுப்பாடு என்று சொன்னார்கள். Gas தட்டுப்பாடு என்பதையும், Cylinder-கள் எல்லாம் சில நேரங்களில் Hotel-களுக்குப் போகின்றன என்பதையும் தடுப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. ஆனால் எண்ணெய்க் கழகங்கள் மூலமாகக் கண்காணிப்பதற்குத்தான் மைய அரசு அந்த அதிகாரத்தை வைத்திருக்கிறது. ஆனால் நாம் உடனுக்குடன் அப்போதைக்கப்போது கடிதம் எழுதிக்கொண்டிருக்கின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே மாநில அதிகாரிகள் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்து அதைப்பற்றிப் பேசி, தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு, இயன்ற அளவிற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

**திரு. து. ரவிக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற உறுதிமொழிக்கு மிகவும் நன்றி.





அதே சமயத்திலே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக அந்த Gas Cylinder-களை supply செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழகத்திலே உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் அதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், short ஆகக் கேளுங்கள். Supplementary question இது. கேட்பதைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. து. ரவிக்குமார்:** மகளிர் சுய உதவிக் குழுக்கள் அந்த Gas Agency-களை எடுத்து நடத்த முன்வந்தால், அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதையும் உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Gas Agency எடுக்க வேண்டுமென்று சொன்னால் அது private-ஆக இருந்தாலும், அரசாங்கமாக இருந்தாலும் அதற்கென சில விதிகள் இருக்கின்றன. அதற்கு godown தேவை; அவற்றை display செய்வதற்காக ஒரு தனி அறை தேவை; இப்படியெல்லாம் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் பிரகாரம்தான் ஓர் அரசாங்கம் செய்ய முடியும். அவற்றை எடுத்துக்கொண்டு கிராமப் பகுதிகளுக்குப் போகிறபோது, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக அவற்றை அனுப்ப முடியுமா என்பதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அதையும் முறைப்படுத்துவதற்கு இந்த அரசு மேற்கொண்டு முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## திருப்பணி

***24218—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 19

பெரணமல்லூர் தொகுதி, மடம் கிராமம், அருள்மிகு தடாகபுரீஸ்வரர் ஆலயத்தினைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், மடம் கிராமத்தில் அருள்மிகு தடாகபுரீஸ்வரர் திருக்கோயில் நிருவாகம் இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நிலை-3 செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்திட வேண்டித் திட்டமிடப்பட்டு, ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 20-9-2007 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆகவே, தொல்லியல் துறையினுடைய அனுமதி பெற்று திருப்பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு தடாகபுரீஸ்வரர் ஆலயத்தினை, அதிலும் குறிப்பாக, சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்கள் ஆண்ட பூமியில், குறிப்பாக வட தமிழகத்தில், சம்புவராயர்கள் ஆண்ட பகுதியாக இருக்கிற இந்தப் பகுதியில், அந்த மன்னர்களுடைய வரலாற்றுக் கல்வெட்டைக் கொண்டிருக்கின்ற மிகப் பழமை வாய்ந்த அந்தக் கோயில், கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே, குறிப்பாக, அவாள் ஆட்சியில்—அந்த அவாள் ஆட்சியில்கூட—அது கண்டுகொள்ளப்படவில்லை. ஆனால், இந்த ஆட்சியில் கோரிக்கை வைத்தவுடனே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, திருப்பணிகள் தொடங்கப்பட்டிருப்பதை இங்கே பாராட்டி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பணம் ஒதுக்கிய இந்தப் பகுத்தறிவு ஆட்சிக்குப் பாராட்டைச் சொல்லி, முதல்வருக்கும், அமைச்சருக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 அக்டோபர் 19]

**18—**

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***11618—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்கும் அவசியம் தற்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதி என்பது மாநிலத்தினுடைய கடைசி எல்லையில் கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ளது. மலைவாழ் மக்கள் அதிகம் வாழ்கின்ற அந்தப் பகுதி கல்வி அறிவில் மிகவும் பின்தங்கியுள்ளது. அந்தப் பகுதியிலே உள்ள பெரும்பாலான அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இன்றைக்கு நமது அரசு ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தாலும்கூட, மலைப் பகுதி என்பதால் ஆசிரியர்கள் மாறுதல் பெற்றுக்கொண்டு சென்றுவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் புதிதாக ஆசிரியர் பள்ளி தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே ஏற்கெனவே ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அரசின் சார்பிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

இப்போது 100 மாணவர்கள் அங்கே பயின்று வருகின்றார்கள். இது தவிர 11 சுய நிதி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அந்த மாவட்டத்திலே இருக்கின்றன. அந்த மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு, தருமபுரியிலே இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் புதிதாக ஓர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தை அரசின் சார்பிலே தொடங்குவதற்கு ஒப்புதல் அளித்து, அங்கேயும் அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவை தவிர, ஏறத்தாழ அங்கே 20 சுய நிதி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மொத்தம் 1,300 மாணவர்கள் எண்ணிக்கையோடு நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில், புதிதாக அந்தத் தளி தொகுதியிலே மாத்திரம், அந்தப் பகுதிக்கு என்று தனியாக ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அரசின் சார்பிலே துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. அந்தப் பகுதி மாணவர்கள் அருகே இருக்கக்கூடிய அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் கல்வி பெறக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியிலிருந்து கிருஷ்ணகிரி அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு 3 பேருந்துகள் மாறி, 150 கிலோ மீட்டர் தூரம் மலைவாழ் மக்களின் மாணவ, மாணவிகள் செல்ல வேண்டி இருப்பதால் மிகவும் சிரமமாக உள்ளது. ஆகவே, மலைவாழ் மக்களுடைய கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையிலே தளி தொகுதியிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை உடனடியாக ஏன் துவங்க முடியாது என்கின்ற அந்தக் காரணத்தை விரிவாக நான் இந்த அவைக்கு ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுக் காலமாக, தமிழகத்திலுள்ள ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு பல்லாயிரக்கணக்கான காலிப் பணியிடங்களையெல்லாம் நிரப்பியதற்கு நன்றி தெரிவிக்கிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் போன்ற தென் மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சி முடித்த மாணவ, மாணவிகள்—1987 ஆம் ஆண்டு படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இன்னும் கிடைக்காமல் இருக்கிறது. அதற்குக் காரணம், மாவட்ட அளவில் பதிவு மூப்பு அடிப்படையிலே அந்தப் பணியிடங்கள் வழங்கப்படுவதாலும், தென் மாவட்டங்களில் காலியாக உள்ள பணியிடங்களை மாறுதல் மூலம் நிரப்புவதாலும், தென் மாவட்ட மாணவ, மாணவிகள் 1987-ல் படித்தது முதல் இதுவரை வேலையில்லாமல் இருக்கிறார்கள். இன்னுங்கூட சொல்லப் போனால், வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயே அவர்கள் ஓய்வுபெறுகின்ற அவல நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே மாண்புமிகு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் படிப்பு படித்து முடித்தவர்களுக்கு மாநில அளவில் பதிவு மூப்பு அடிப்படையில், வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று கேட்பதோடு, பல தென் மாவட்டங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சி முடித்த மாணவர்கள் பதிவு செய்யும்போது தகுந்த ஆவணங்களை அளித்த பின்பும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, மூலக் கேள்வி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பது பற்றியது.

**திரு. மு. அப்பாவு:** தொடர்புடையதுதான் ஐயா! தகுந்த ஆவணங்களோடு பதிவு செய்தாலும்கூட அவர்களை அங்கே பணியமர்த்த மறுக்கிறார்கள். அதற்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா; தென் மாவட்ட மாணவ, மாணவிகளுக்குக் கருணையோடு மாநில அளவில் பதிவு

மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்புத் தர நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் அவரே அவருடைய கேள்விக்குப் பதிலினை அளித்திருக்கிறார்கள். மாநில அளவிலே இத்தகைய பதிவு மூப்பு அடிப்படையைக் கொண்டு வந்தால், தென் மாவட்ட மக்களுக்கு அதிலே பெரிய பலன் இருக்கிறது. ஆனால், அதிலே மற்ற மாவட்டங்களிலே பதிந்து வைத்திருக்கக்கூடியவர்களுக்கு, குறிப்பாக வட மாவட்டங்களிலே பதிவு செய்து வைத்திருக்கக்கூடியவர்களுக்கு, இதிலே தாங்கள் பாதிப்புக்கு உள்ளாவோம் என்கின்ற அச்ச உணர்வும் அவர்களிடத்திலே இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்த விஷயம் ஓர் ஆய்வுக்குரிய விஷயமாக அமைந்திருக்கிறது. எனவே, அவற்றிலே உடனடியாக ஒரு முடிவினை நாம் எடுத்துவிட முடியாது. மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தென் மாவட்ட மக்களுக்கு மாத்திரம் இல்லாமல் ஏகத் தமிழ்நாட்டிற்கும் அவரே நிரந்தர முதலமைச்சராக இருக்கக்கூடிய காரணத்தாலே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விஷயத்திலே ஆய்வுக்காக வேண்டுமானால், இதை ஆய்வு நிலையிலே வேண்டுமானால் நாம் கருத முடியும். இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள்; ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களை அந்தந்த மாவட்டங்களிலே நியமிக்கின்றபோது அவர்கள் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்களா என்பதை வருவாய்த் துறையினுடைய உதவியோடு நாங்கள் முழுமையாக ஆய்வுகள் செய்திருக்கிறோம். சில இடங்களிலே, குறிப்பாகக் கடந்த முறை புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே இந்தப் பிரச்சினை வந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே தொடர்புகொண்டு, அவ்வாறு பதிவு செய்துகொண்டிருக்கக்கூடிய ஆசிரியர்கள் அந்தப் பகுதியிலே நிரந்தரமாகக் குடியிருக்கிறார்களா என்கின்ற இருப்பிடச் சான்றினுடைய உண்மைத் தன்மையை அறியக்கூடிய வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நாங்கள் முறையாகக் கண்காணித்து, ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனியார் சார்பாக ஏராளமாகத் துவங்கப்படுகின்ற இந்தக் காலக்கட்டத்தில், அந்தப் பள்ளிகளிலே சேர்ந்து படிக்கிற கிராமப்புற மாணவர்கள் அதிகமாக நன்கொடை தர வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாவட்டத்திற்கு இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை, ஒன்று பெண்களுக்கு என்றும், ஒன்று ஆண்களுக்கு என்றும் அரசின் சார்பாகத் துவங்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புவதோடு, குறிப்பாக, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சிப் படிப்பு படிக்கிறவர்கள், பணம் குறைவு என்ற காரணத்தால், பெரும்பாலானவர்கள் கருநாடக மாநிலத்திலே போய்ப் படிக்கிற அவல நிலை இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துகிற வகையிலாவது ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மேலும் கூடுதலாக இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிறபோதே குறிப்பிட்டேன். இந்த ஆண்டு தருமபுரியிலேகூட, புதிதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவுவதற்கு நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் வழங்கி, இப்பொழுது அங்கே அந்தப் பயிற்சி நிறுவனம், அந்த மாவட்டம் பயன்பெறத்தக்க அளவிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு மாவட்டத்திற்குக் கூடுதலாக இரண்டு பள்ளிகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அரசினுடைய நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்திலே பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம் அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் சுய நிதித் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, அவை பல்வேறு மோசடிகளைச் செய்துகொண்டிருக்கின்றன. அந்த மோசடியின் முதல் அங்கமாக, மாணவ, மாணவியர்களிடத்திலே விதிமுறையை மீறி, ரூ. 1½ இலட்சம், ரூ.2 இலட்சம் என்று அதிகமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு, மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. மாணவர் சேர்க்கைக்கு அரசு அங்கீகாரம் 50 என்று வழங்கப்பட்ட பிறகு, இப்படி 50-க்கும் மேலாக 100 மாணவ, மாணவிகளை அனுமதியே இல்லாமல் சேர்த்துக்கொள்கிறார்கள். முதல் ஆண்டுத் தேர்வு எழுதவும் அனுமதிக்கப்பட்டு விடுகிறார்கள். இப்பொழுது இரண்டாவது ஆண்டுத் தேர்வு எழுத முடியாமல், பல பள்ளிக்கூடங்களிலேயிருந்து சென்னையை நோக்கி வந்து, முதலமைச்சர் அவர்களை எல்லாம் பார்ப்பதற்குக் கடந்த வாரம் முயற்சி செய்து, அலைந்து சென்றிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, வேலூர் மாவட்டத்திலே திருவலம் பகுதியிலே இருக்கிற குழந்தை ஏசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்; அதைப்போல, ஈரோடு மாவட்டத்திலே அந்தியூரிலே புனித மரியன்னை ஆசிரியர் பயிற்சி நிறுவனம் என்று பல பள்ளிகளிலே இப்படிக் கூடுதலாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அப்படி அந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கு அனுமதி எப்படி வழங்கப்படுகிறது? அப்படி அனுமதியில்லை என்று சொன்னாலும்கூட, தேர்வு எழுதுவதற்கு அரசு அலுவலகங்களிலே பட்டியல் வெளியிடப்படுகிறது. உதாரணத்திற்கு, 50 மாணவர்கள் தேர்வு எழுத அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளுக்கு, 100 மாணவர்களுக்குத் தேர்வு எழுத அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதம் என்னிடத்திலே இருக்கிறது; வேண்டுமானால் தருகிறேன். அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது; தேர்வு எழுத முடியவில்லை. இவர்களுக்கு முறைகேடாக அனுமதி வழங்குங்கள் என்று நான் கேட்கவில்லை. இப்படிப்பட்ட ஆசிரியர் நிறுவனங்கள்மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்; அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகள், ஏழைகள். கடன் வாங்கி, ரூ. 1½ இலட்சம், ரூ. 2 இலட்சம் கொடுத்து, அவர்கள் நடுத் தெருவிலே அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேர்வு எழுதுவதற்குச் சிறப்பு அனுமதி வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப் பேரவைத் தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து ஏற்கெனவே என்னிடத்திலே தொலைபேசி வாயிலாகவும், நேரடியாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையைக் குறித்து, முழுமையாக ஓர் ஆய்வினையும் நான் மேற்கொண்டேன். இதிலே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழகத்திலே சில ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்—நான் எல்லா ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களையும் குறிப்பிடவில்லை சில பயிற்சி நிறுவனங்கள்-- இத்தகைய செயலிலே ஈடுபட்டு, அது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மொத்தத்திலே 8 நிறுவனங்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டிருக்கின்றன. தமிழகத்திலே இன்றைக்கு ஏறத்தாழ 644 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே 8 நிறுவனங்களிலே மாத்திரம், இந்த ஆண்டு இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அவற்றிலே இரண்டு நிறுவனங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு உத்தரவு பெற்றிருக்கின்றன. மற்ற ஆறு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே படிக்கக்கூடிய 290 மாணவர்களுக்கு இந்தப் பிரச்சினை ஏற்பட்டு, இப்போது பரீட்சை எழுதமுடியாமல் இருக்கிறார்கள். பல இடங்களில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் நீதிமன்றத்திலே சில வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. நீதிமன்றத்திலே அந்த வழக்குகள், ஒவ்வொரு நிறுவனத்திலேயும் ஒவ்வொரு நிலையில் இருக்கின்றன. Infant Jesus நிறுவனத்தை எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு 50 பேருக்குத்தான் மாணவர்கள் சேர்க்கைக்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. நீதிமன்ற ஆணையினுடைய அடிப்படையிலே முதலாண்டு அவர்கள் தேர்வினை எழுதியிருக்கிறார்கள். இந்த ஆண்டு, இரண்டாம் ஆண்டு அவர்கள் தேர்வு நடத்துவதற்கு, அவர்கள் மாணவர்களைச் சேர்ப்பதற்கு நீதிமன்றம் ஒரு தடையினை வழங்கியிருக்கிறது. (குறுக்கீடு) ஆமாம், அப்படிக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே நீங்கள் சொன்னதைப்போல, சில குறிப்புகள் எங்களுக்குக் கொடுக்கப்படும் என்றால், நான் நிச்சயமாக அவற்றையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறேன். எனவே, அந்த நீதிமன்றத்திலே, ஒவ்வொரு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் குறித்து கொடுத்திருக்கக்கூடிய நீதிமன்றத் தீர்ப்புகள், அவற்றில் நிலுவையில் இருக்கக்கூடிய வழக்கின் தன்மை, இவற்றையெல்லாம் முழுமையாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஏதேனும் வழிமுறைகள் இருந்தால், அவற்றை அரசு

[2007 அக்டோபர் 19

நிச்சயமாகக் கருத்திலே கொண்டு, என்ன செய்ய முடியும் என்பதை யோசிக்கும். இப்படி Staff approval கொடுக்காமலேயே, மாணவர்களைச் சேர்க்கக்கூடிய நிலைமையில், அதிகமான மாணவர்களைச் சேர்க்கக்கூடிய அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது; நிச்சயமாக உரிய நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

**விரைவுச் சாலை வசதி**

***13789—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சென்னைக்கும், திருச்சிக்கும் இடையே தேசிய நெடுஞ்சாலையில் தனியாக விரைவுச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லவே இல்லை! (சிரிப்பு)

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் தமிழகத்தில் தொழிற்புரட்சி ஒரு பக்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. படித்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. இப்போது தொழிற்புரட்சி சென்னையைச் சுற்றியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலே இருந்து



2007 அக்டோபர் 19]

கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், அந்தப் பகுதி சென்னையையொட்டி இருக்கிற பகுதியாகும். தேசிய நெடுஞ்சாலைகள் மூன்று சாலைகள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. மிக அதிகமாக அந்தப் பகுதியிலே தொழிற்சாலைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்று சொன்னால், அதனுடைய சாலைக் கட்டமைப்பு வசதி சரியாக இருந்தால்தான் அதனுடைய வளர்ச்சி அதிகமாக ஏற்படும் என்ற ஒரு கருத்து பொருளாதார நிபுணர்களிடம் இருக்கிறது. அந்த வகையிலே, சென்னையிலிருந்து திருச்சிக்கு 320 கிலோ மீட்டர் நீளம் இருக்கிற அந்தப் பகுதியிலே சாலைக் கட்டமைப்பு வசதி அதிகமாக இருந்தால்தான் பொருளாதாரம் முன்னேற வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்கு, மும்பையிலிருந்து பூனா வரையிலே இருக்கிற அந்த அதி விரைவுச் சாலையில், 1½ மணி நேரத்திற்குள்ளாக பூனாவைக் கடக்கிற ஒரு வாய்ப்பு மும்பையில் இருக்கிறது. அதனாலே அந்தப் பகுதியிலே ஏராளமான தொழிற்சாலைகள் இருந்துகொண்டிருக்கின்றன. பொருளாதாரமும் வளர்ந்துகொண்டிருக்கிறது. அதுபோன்று இந்தப் பகுதியிலே பார்த்தால் உங்களுக்குத் தெரியும்; நம்முடைய அண்ணன் திரு. சிவபுண்ணியம் சொன்னதுபோல, ஏராளமான விபத்துகள் N.H. 45 சாலையிலே நடந்துகொண்டிருக்கின்றன. உயிரிழப்புகள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதுபோன்று உயிரிழப்புகள் ஏற்படுவதற்குக் காரணம், எல்லா வாகனங்களும் ஒன்றாகச் செல்கின்றன. அதற்கு ஏற்ற சாலை வசதி இல்லை. உதாரணத்திற்கு, அதி விரைவுச் சாலையான மும்பை-பூனா சாலையைப் பார்த்தால் அது 6 வழிச் சாலை. அதிலே எவ்வளவு வேகம் என்றால், 100, 120 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றுகொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் சுமையுந்துகள் எல்லாம் சென்றுகொண்டிருக்கின்றன. எந்தப் பிரச்சினையும் இன்றி அங்கே வெகு இலகுவாகச் செல்ல முடிகிறது. அதுபோன்ற சாலைகள் இருந்தால்தான் நம்முடைய நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; இதுபோன்ற சாலைகள் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மட்டுமல்லாமல், திருச்சி, தஞ்சாவூர் வரை செல்கிற வாய்ப்பு இருக்கிறது. எனவே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** அதுதான் தலைவரே! அமைச்சர் அவர்கள் இல்லவே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏனென்றால், இது முக்கியமான பிரச்சினை.

[2007 அக்டோபர் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று சபையை Guillotine time-படி முடிக்க வேண்டும் நான். நீங்கள் பேசிக்கொண்டேயிருந்தால் நான் எப்படி சபையை முடிப்பது?

**திரு. கி. ஆறுமுகம்:** சரி தலைவரே, முடித்துவிடுகிறேன். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. எனவேதான், இதை மீண்டும் நம்முடைய அமைச்சருக்குத் தங்கள் மூலம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை எப்படியாவது கொண்டு வருவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 45 சென்னையிலிருந்து செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல் வரை செல்லக்கூடிய சாலை. இந்தச் சாலை ஏற்கெனவே சென்னை நகரிலிருந்து தாம்பரம் வரை மாநில நெடுஞ்சாலைத் துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே தாம்பரத்திலிருந்து திண்டிவனம் வரை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் 4 வழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. திண்டிவனத்திலிருந்து விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி வரை மேலும் 4 வழிச் சாலையாக மாற்றுவதற்கு சுமார் 1,260 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம், மத்திய அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சாலையில் ஓரளவு இப்பொழுது விபத்துகள் குறைந்திருந்தாலும், விபத்துகள் என்பவை இந்த தேசிய நெடுஞ்சாலையில் மட்டுமல்ல; பல்வேறு சாலைகளிலும் நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்கூட அடிக்கடி இந்தச் சாலை விபத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அதைக் குறைக்க வேண்டுமென்று எங்களிடத்திலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்திலும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், இப்போது கிழக்குக் கடற்கரைச் சாலையிலும், தேசிய நெடுஞ்சாலை எண் 45-லும் விபத்துகள் அதிகமாக நடக்கக்கூடிய இடங்களைத் தேர்வு செய்து, அதற்குரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காகக்கூட கடந்த நிதியாண்டிலே ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்த ஆய்வுப் பணிகளை நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள். தேசிய



2007 அக்டோபர் 19]

நெடுஞ்சாலையில் குறிப்பாக விரைவுச் சாலை வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விரைவுச் சாலையைப் பொறுத்த அளவில், 4 வழிச் சாலையாக மாற்றப்பட்ட பிறகு போக்குவரத்து ஓரளவு எளிதாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தேசிய நெடுஞ்சாலை தமிழகத்திலே 4,483 கிலோ மீட்டர் உள்ளது. நம்முடைய மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, இதிலே தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 3,256 கிலோ மீட்டர் சாலையை 4 வழிச் சாலையாக மாற்றுவதற்குரிய திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கிற 1,227 கிலோ மீட்டர் சாலையை நம்முடைய மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று மாநில அரசு பராமரித்து வருகிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வரை அதைப் பரீட்சார்த்தமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு நெடுஞ்சாலைத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவு, கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் கூடுதலாக நிதி ஒதுக்கி பல்வேறு சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில், இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு வேண்டுமானால் பரிந்துரை செய்கிறோம். அதே நேரத்திலே, இப்போது சென்னைப் பெருநகரப் பகுதியைப் பொறுத்தவரையில், inner ring road இருக்கிறது. அதேபோல், புறவழிச் சாலையை 4 வழிச் சாலையாக மாற்றும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பிறகுகூட வெளி வட்டச் சாலை அமைக்க நம்முடைய அரசும் பரிசீலித்து வருகிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, இந்தப் போக்குவரத்து நெரிசல்

[2007 அக்டோபர் 19

எதிர்காலத்திலே நிச்சயம் குறைக்கப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

## கால்நடைத் தீவனம்

***23022—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனத்தைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கால்நடைத் தீவனத்தைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் ஏதும் தற்போதைய நிலையில் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களின் உயிர்நாடியான தொழிலாகக் கால்நடை வளர்ப்பு இருக்கின்றது. பெரும்பாலான ஏழையெளிய குடும்பங்களில் வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் கோழி, ஆடு, மாடு, பசு போன்ற கால்நடைகளை வளர்க்கின்றார்கள். ஆனால், தற்பொழுது கால்நடைகளினுடைய எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இதற்குக் கால்நடைத் தீவனங்களின் விலையேற்றமும் காரணமாக உள்ளது. ஏற்கெனவே தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கால்நடைத் தீவனங்கள் விநியோகம் செய்யப்பட்டன.



2007 அக்டோபர் 19]

உதாரணமாக, ஆவின் கால்நடைத் தீவனம் ஒரு கிலோ ரூபாய் ஐந்து முதல் ஆறு வரைக்கும் விற்கப்பட்டது. ஆனால், தனியார் நிறுவனங்களின் மூலமாகத் தற்பொழுது ஒரு கிலோ 'கோத்ரேஜ்' தீவனம் விலை ரூபாய் ஒன்பதிலிருந்து பத்து வரைக்கும், ஒரு லிட்டர் பாலின் விலைக்குத் தகுந்தாற்போன்று ஏறியிருக்கின்றது. அதேபோன்று, ஒரு கட்டு வைக்கோல், ரூபாய் நூறு என விற்கப்படுகின்றது. ஆகவே, ஏற்கெனவே இருந்ததைப்போன்று, அரசே கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்து குறைந்த விலையில் கிடைக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் தீவன உற்பத்தி மையம் எதுவுமே அமையப்பெறவில்லை. கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள பண்ணைகளுக்குத் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கால்நடைத் தீவனம் கொள்முதல் செய்து கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கப்படுகிறது. அதுபோலவே, பால் வளத் துறையின்கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்காகக் கால்நடைத் தீவனங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்ற தகவலை நம்முடைய உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதேபோன்று கால்நடைகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் இன்றைக்கு அதிகமான அளவு இல்லை. எப்பொழுதாவது கால்நடைகளைத் தாக்கக்கூடிய நோய்களுக்கு, Bernal என்று சொல்லக்கூடிய தேவையில்லாத மருந்துகள் இன்றைக்கு இருப்பில் இருந்துகொண்டிருக்கின்றன. அதேபோன்று, நபார்டு திட்டத்தின் மூலமாக வழங்கப்படக்கூடிய கருவிகள், அந்தக் கால்நடைகளைத் தாக்கக்கூடிய இரத்தத்தில் உள்ள குறைபாடுகள், அதாவது பாஸ்பரஸ், மக்னீசியம், கால்சியம் போன்ற நோய்களைக் கண்டறியக்கூடிய கருவியான Serum Analyser என்பது, தமிழகத்திலே இரண்டு மாவட்டங்களில் மட்டுமே இருந்து வருகின்றது. எனவே, தமிழகத்தினுடைய பல மாவட்டங்களில், குறிப்பாகக் கன்னியாகுமரி

மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக இருக்கக்கூடிய காட்டாத் துறையில் இந்த Serum Analyser என்று சொல்லக்கூடிய instrument-ஐத் தந்து கால்நடைகளைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டு முதல், அந்தந்தப் பகுதிகளிலுள்ள நோய்க் கிளர்ச்சி மற்றும் நோய்த் தாக்கத்திற்கேற்ப கால்நடைகளுக்கு மருந்து விநியோகம் ஒவ்வொரு மருந்தகத்திற்கும் செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுபோல, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான Serum Analyser என்ற அந்தக் கருவி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கும் வழங்குவதற்கு, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா, 'மக்கள் குரல்', 'நமது எம்.ஜி.ஆர்.' மற்றும் 'ஜெயா டி.வி.' மீது எழுப்பிய உரிமைப் பிரச்சினையில், பத்திரிகைகள், தொலைக்காட்சிமீது வலியுறுத்தாதது குறித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் . . . (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையினை அளிக்கிறேன்:

நேற்றையதினம் 18-10-2007 அன்று சட்டப் பேரவையில், அவை விதி 219 மற்றும் 220-ன்கீழ் தமிழகச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா அவர்கள் என்னைப்பற்றிச் செய்தியாளர்களிடம் கூறும்போது தெரிவித்த சில கருத்துகளுக்காக ஓர் ,உரிமைப் பிரச்சினையை அவையிலே எழுப்புவதற்குக் கடிதம் மூலமாகத் தங்களிடம் எழுதிக்கொடுத்து, தாங்களும் அதற்கான அனுமதியினை வழங்கி இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள்.

முற்பகல் 10-55

அந்த உரிமைப் பிரச்சினை குறித்து என் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறுமாறு தாங்கள் தெரிவித்தபோது, நான் வாய்மொழியாக, ஜெயலலிதாவின் பேட்டியினை வெளியிட்ட பத்திரிகைகள்மீதும், ஒளிபரப்பிய ஜெயா தொலைக்காட்சிமீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

பத்திரிகைகள்மீதும், தொலைக்காட்சிகள்மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டு வருவது என்பது அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றுள்ளது என்றபோதிலும், அது தி.மு.கழகத்தின் கொள்கைக்கு விரோதமானது என்று கழகத் தலைமை அறிவுறுத்தியதன்பேரில், நான் நேற்றையதினம் அவையில் வாய்மொழியாக அந்தப் பத்திரிகைகள்மீது உரிமை மீறல் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதை வலியுறுத்த விரும்பவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நான் எழுதிக் கொடுத்த உரிமைப் பிரச்சினைக்கான கடிதத்தில்கூட இந்தப் பத்திரிகைகள்மீது உரிமை மீறல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவில்லை என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். தாங்களும் இதற்கான தீர்ப்பினைத் தெரிவிக்கும்போது அந்தப் பத்திரிகைகள்பற்றியோ, தொலைக்காட்சிபற்றியோ எதுவும் குறிப்பிடவில்லை என்பதையும் தெளிவாக்கி, ஒரு சில பத்திரிகைகளில் அந்த ஏடுகள்மீதும், தொலைக்காட்சிமீதும் உரிமை மீறல் கொடுக்கப்பட்டுள்ளதுபோன்று வந்திருக்கக்கூடிய செய்தி தவறு என்பதை விளக்கிடும் வகையில் இந்த அறிக்கையினை அவையின்மூலம் வெளியிட விரும்புகிறேன். குறிப்பாக, இதுகுறித்து 'இந்து' நாளிதழ்,

பேரவைத் தலைவரிடம், "குறிப்பிட்ட ஏடுகள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டுள்ளதா?" என்று கேட்டதற்குப் பேரவைத் தலைவர் அவர்களே "ஏடுகள்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்படவில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் என்று அந்த ஏட்டிலேயே செய்தி வந்துள்ளது. உரிமைப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சியின் சார்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது, அவைக்கு வெளியிலே பேசியதற்கு அவையிலே உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்படுவது சரியல்ல என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், அவையிலே உறுப்பினராகவே இல்லாத 'முரசொலி செல்வம்' , ஏட்டிலே எழுதியதற்காகவே அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டு, உரிமைக் குழுவிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த அவை வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு கூண்டிலே ஏற்றித் தண்டிக்கப்பட்டார் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

அது மாத்திரமல்ல; கடந்தகால ஆட்சியில்—இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்மீது அ.தி.மு.க. ஆட்சியில்-- பல உரிமைப் பிரச்சினைகள், அவர் வெளியிலே 'முரசொலி'-யில் எழுதியதற்காகவும், பேசியதற்காகவும் கொண்டு வரப்பட்ட செய்திகளெல்லாம் அவைக் குறிப்பிலே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, *26-7-2004, 28-9-2005, 23-1-2006* ஆகிய நாட்களில் இப்படிப்பட்ட உரிமைப் பிரச்சினைகள் இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிலே பேசினார் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டன. அப்பொழுது அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.கழக உறுப்பினர்கள் இதுகுறித்துக் கருத்துகளைக் கூறவே அனுமதிக்கப்படவில்லை. ஆனால், நேற்றையதினம் இங்கே எப்படியெல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடந்துகொண்டார்கள் என்பதை அனைவரும் அறிவோம்.

*28-9-2005* அன்று இன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்பட்டபோது, அன்றைய முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா என்ன கூறினார் தெரியுமா? "இந்த அவையின் உறுப்பினராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஏதாவது கருத்துத் தெரிவிப்பதாக இருந்தால், துணை மானியக் கோரிக்கையின்மீது கருத்துத் தெரிவிக்க விரும்பினால், இந்த அவைக்கு வந்து தெரிவிக்க வேண்டுமே தவிர, அவைக்கு வெளியிலே தெரிவிப்பது, அவதூறாகக்



கருத்துத் தெரிவிப்பது என்பதற்கு உரிமை மீறல் என்ற பிரச்சினையைத்தான் அவர் இங்கே கொண்டு வருகிறார்"—இதை யார் சொல்வது? இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் முதலமைச்சர் அப்பொழுது முதலமைச்சராக இருந்தபொழுது சொன்னது.

அதைப்போல—''இப்பொழுது நான் முதலமைச்சராக இருக்கிறேன்"—இதுவும் அம்மையார் ஜெயலலிதா சொன்னது; முதலமைச்சராக இருந்த நேரத்திலே சொன்னது: "இப்பொழுது நான் முதலமைச்சராக இருக்கிறேன்; எனக்கும் எல்லாவித உரிமைகளும் உண்டு; ஆனால், இந்த அவைக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுது ஏதாவது அறிவிப்புச் செய்ய விரும்பினால், கருத்துக் கூற விரும்பினால், இந்த அவைக்கு வந்துதான் நான் தெரிவிக்க வேண்டுமே தவிர, வெளியிலே தன்னிச்சையாக நான் கட்டுரை எழுதி வெளியிட முடியாது; வெளியே தன்னிச்சையாக நான் பேட்டி கொடுக்க முடியாது". இவ்வாறு அன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் அப்பொழுது முதலமைச்சராக இருந்தவரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவருமான ஜெயலலிதா தெரிவித்த கருத்துகள் அவைக் குறிப்புகளிலே இடம்பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்து, ஜெயலலிதா அவர்களின் அந்தக் கருத்து ஏற்கப்பட்டு, உரிமைப் பிரச்சினைகள் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டதுபோலவே, இப்பொழுதும் நான் அளித்துள்ள உரிமைப் பிரச்சினையும் அவை உரிமைக் குழுவிற்குத் தங்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விடையாக அளித்திட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

## 3. தகவல் கோரல்

### (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது, பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி விசிய உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மீது நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த

சட்டமன்ற உறுப்பினர்கள், நேற்றைய தினம் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய செயலில் ஈடுபட்டதால், அவர்களை நீங்கள் சட்டமன்றக் காவலர்கள்மூலம் வெளியேற்றும்படி உத்தரவிட்டீர்கள். அவர்கள் காவலர்களோடு முரண்டு பிடித்துக்கொண்டு, வெளியேறிய நேரத்தில், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களில் ஒருவர், சபைக் காவலர் ஒருவரின் தொப்பியை எடுத்துத் தங்கள்மீது வீசியதை நேற்று இந்த மாமன்ற உறுப்பினர்கள் பார்த்தார்கள்; இன்றைக்கு நாடே பார்த்துக்கொண்டிருக்கின்றது. அப்படி அதனை வீசியவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் தங்களிடத்திலே கேட்டேன். இதுகுறித்து நாளைக்குத் தீர்ப்புச் சொல்கிறேன் என்று தாங்கள் சொன்னீர்கள். அந்தத் தீர்ப்பை இந்த அவை எதிர்பார்க்கிறது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் அக்கறை கொண்டோர் எல்லாம் எதிர்பார்க்கிறார்கள். இனி எவருக்கும் சட்டமன்றப் பேரவைத் தலைவரை அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணம்கூட ஏற்படக் கூடாது என்ற வகையில் தங்களுடைய தீர்ப்பு இருக்க வேண்டுமென்று இந்த மாமன்றம் எதிர்பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடலூர் மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற என்.எல்.சி. சம்பந்தமாக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது எந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்ததாகக் கேளுங்கள். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் நடந்த கண்ணியக் குறைவான செயல்களை இந்த நாடே பார்த்திருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிகழ்வுகள் நடந்து முடிந்தவுடனே தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இந்த அவையிலே தங்கள் ஆசனத்தினுடைய இடது பக்கமாக அமர்ந்திருக்கின்ற நாங்களும், வெளிநடப்புச் செய்கின்றவர்களை என்றும் தடுத்தது இல்லை. இந்த அவையிலே வெளிநடப்புச் செய்வதற்கோ, சில நேரங்களிலே கோஷங்கள் போடுவதற்கோ, சில நேரங்களிலே மௌனமாக எதிர்ப்புத் தெரிவித்து அமர்வதற்கோ ஜனநாயகத்தில் பல்வேறு வழிகள் இருக்கின்றன. அத்தகைய நடைமுறைகளை இந்த அவையிலே இரண்டு





பக்கமும் அமர்ந்திருப்பவர்கள் பல்வேறு காலக்கட்டங்களிலே செய்திருக்கின்றோம். ஜனநாயகத்திற்கு விரோதமாக சில கடுமையான செயல்கள் நடந்தபோது அமைதியான வழியில், எதிர்ப்பினைக் காட்டுவதற்காகக் கருப்புச் சட்டை அணிந்து வந்திருக்கின்றோம். கருப்புக் கொடி குத்தி வந்திருக்கின்றோம். சில நேரங்களிலே, இன்னும் அதிகமான அளவில் மக்களுடைய கவனத்தையும், அவையினுடைய கவனத்தையும் கவர வேண்டுமென்பதற்காக, வாயிலே கருப்புத் துணி கட்டி வந்த நாட்களைக்கூட இந்த அவை பார்த்திருக்கிறது. இந்த அவையினுடைய குறிப்புகளிலேகூட அத்தகைய செய்திகள் இருக்கின்றன. ஆனால், வெளியேறச் சொல்லி நீங்கள் உத்தரவிட்ட பிறகு, உங்கள் முன்னால் அமர்ந்து தர்ணா செய்வதைக்கூட ஜனநாயகம் ஒரு வேளை அனுமதிக்கலாம். உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்குச் சில நேரங்களிலே, சில கட்சிகளிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்குப் பெரிய அநீதி இழைக்கப்பட்டது என்கிற உணர்வு இருக்கும் என்று சொன்னால், அத்தகைய உணர்வுகளுக்கு வடிகாலாக அமைவதற்கு, இவற்றையெல்லாம்கூட அனுமதிப்பதற்கான சூழ்நிலைகூட சட்டமன்ற அவைக்குள்ளே சில நேரங்களில் ஏற்படுவது உண்டு, அசாதாரணமாக. ஆனால், நேற்று நடந்த சம்பவம், தங்களுடைய இருக்கையை நோக்கி, தங்களை நோக்கி, இந்த அவையினுடைய காவலராக இருக்கின்ற ஒருவரின் தொப்பியை எடுத்து உங்கள்மீது ஆவேசமாக எறிவது என்பது, எந்தப் பாராளுமன்ற மரபும், எந்த ஜனநாயக அமைப்பும், ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கொண்ட யாராலும், இந்த நாட்டில் ஜனநாயகம் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற எவராலும், அத்தகைய செயல்களை அனுமதிக்க முடியாது என்பதை இந்த அவையிலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமீப காலமாகப் பாராளுமன்ற ஜனநாயக அமைப்புகளிலே மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையினைக் குலைக்கக்கூடிய வகைகளிலே பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல்பாடுகள் இருக்கின்றன என்பதை இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தில் ஆர்வம்கொண்ட மிகப் பெரிய தலைவர்கள் அடிக்கடி இந்த மன்றங்களுக்குள்ளும், நாடாளுமன்றத்திற்குள்ளும் தொடர்ந்து பதிவு செய்துகொண்டிருக்கின்றார்கள். பாராளுமன்றத்தின் சபாநாயகராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், பாராளுமன்றத்தையே நடத்த முடியாத சூழ்நிலையிலே, பாராளுமன்றம் 14 நாட்கள், 20 நாட்கள், 25 நாட்கள் நடத்திட வேண்டுமென்று அலுவல்கள் இருந்தாலும்கூட அந்த அலுவல்களைத்

தொடர முடியாமல், பாராளுமன்றத்தை முடக்கக்கூடிய சக்திகள், ஜனநாயகத்தின் குரல்வளையை, பாராளுமன்றத்தின் பாதுகாப்பிற்குள்ளே நெரிக்கின்ற காட்சியைக் கடந்த சில நாட்களாகப் பார்த்து, வேதனைப்பட்ட சம்பவங்களையும், இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலும்கூட அதைப்போன்ற ஒரு சம்பவம் நடந்தது.

முற்பகல் 11-05

பாராளுமன்ற அமைப்புக்குள்ளே கருத்துக்குக் கருத்து, விவாதத்திற்கு விவாதம் எதிர்கொள்ள முடியாதவர்கள், தங்கள் தரப்பிலே நியாயம் இல்லை என்பதை மன ரீதியாக உணர்ந்தவர்கள், விவாதங்களை மக்கள் மன்றத்திலே எடுத்து வைப்பதற்கும், அந்தந்த அவை முன்பு எடுத்து வைப்பதற்கும் தைரியம் இல்லாதவர்கள், திராணி இல்லாதவர்கள், எங்கே நியாயம் இருக்கிறதோ, அந்த நியாயத்தின் குரல்வளையை நெரிப்பதற்காக, பாராளுமன்றத்திற்குள்ளே, இத்தகைய சட்டப்பூர்வமான அவைக்குள்ளே—பாராளுமன்ற பயங்கரவாதம் என்றுகூட நான் குறிப்பிட்டேன்; Parliament terrorism என்றுகூட நான் குறிப்பிட்டேன்—அத்தகைய பயங்கரவாதத்தை இங்கே அவிழ்த்துவிடுவதை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள யாரும் ஒருகாலும் அனுமதித்துவிடக் கூடாது. இது உங்களுக்கு நேர்ந்தது அல்ல; தாங்கள் இருந்திருக்கிற இந்த நாற்காலி. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடிச் சொல்வதுபோல, இந்தச் சபையினுடைய மரபுகளைக் கட்டிக் காத்த மிகப் பிரபலமான, மிகப் பாரம்பரியத்திற்குச் சொந்தமான மிகப் பெரிய மனிதர்கள் அமர்ந்த நாற்காலி இந்த நாற்காலி. அதைப்போல, இந்த அவையின் எதிரே உங்களுக்கு வலது புறமும், இடது புறமும், இந்த நாட்டின் ஜனநாயகப் பயிரை வளர்ப்பதற்காகத் தங்கள் தேக்கு மர தேகத்தைத் தியாகம் செய்தவர்கள், திராவிட இயக்கங்கள் என்றாலும் சரி, தேசிய இயக்கங்கள் என்றாலும் சரி, பொதுவுடைமை இயக்கங்கள் என்றாலும் சரி, பொது வாழ்வில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் காணிக்கையாக்கிக்கொண்ட தியாக சீலர்கள், இந்த அவையிலே கருத்து மோதல்களை நடத்திய அந்த மோதல் கூடமாக இது இருக்கலாம்; ஆனால், மல்யுத்தக் கூடமாக இது மாறிவிடக் கூடாது.

நேற்று நடந்த சம்பவத்தை பிரபலமான ஒரு வாரப் பத்திரிகை எழுதுகிறது. அதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். எவ்வாறாக இந்தச் செய்தி பொது மக்களைச்



சென்றடைகிறது என்று பார்க்க வேண்டும். இன்றையதினம் பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றபோது, தினச் செய்தி வருகின்றபோது, பத்திரிகைகளிலே அவற்றைப் பார்க்கிறோம். பிரபலமான 'தின மலர்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இந்த அவைக்கு வெளியே, நம்முடைய வெராந்தாவிலே நடந்த சம்பவத்தை எழுதுகிறது: "காவலர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், ஒவ்வொருவரையும் தள்ளி மல்யுத்தம் நடத்தினார்கள். இதற்கிடையிலே பெண் காவலர்களும், பெண் சட்டமன்ற உறுப்பினர்களும் என்ன செய்வது என்று திகைத்துப் போய் நின்றார்கள்" என்று எழுதியிருக்கிறது. இந்தச் செய்தியைப் பார்க்கின்ற மக்கள் இந்த அவையைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இன்றையதினம் ஒரு புகைப்படம் வந்திருக்கிறது பத்திரிகையிலே. நம்முடைய, இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் போஸ் அவர்கள் ஒரு காவலருடைய தொப்பியைப் பிடுங்கிக்கொண்டு நிற்பதை இன்று தமிழகத்திலே இருக்கின்ற 6½ கோடி மக்களும் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? இந்த மன்றத்திற்குள்ளே விவாதங்கள் நடக்கும்; இந்த மன்றத்திலே இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், அரசின் கவனத்திற்கு மக்களுடைய பிரச்சினைகளைக் கொண்டு போவார்கள்; அதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பதிலளிப்பார்கள்; அந்தப் பதிலில் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்; தெளிவு கிடைக்கும்; ஒளி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கின்ற மக்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்ற அவைக்குள்ளே நின்றுகொண்டு உங்களை நோக்கித் தன் கையை ஓங்கிக்கொண்டு, தொப்பியைத் தூக்கி எறிவதைப் பார்க்கின்றபோது இந்த நாட்டு மக்களுக்கு என்ன நினைப்பு வருகிறது என்று சொன்னால், இவர்களுக்கு வாக்களித்ததெல்லாம் நாம் செய்த மிகப் பெரிய சாபக்கேடு என்று நினைக்கக்கூடிய அளவிற்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை தளர்ந்திருக்கிறது. இதை நாம் அனுமதிக்க முடியாது. அப்படி நீங்கள் அனுமதித்தீர்கள் என்று சொன்னால், இந்த நிறுவனம் நாளாவட்டத்திலே தன்னுடைய முழுமையான மக்கள் நம்பிக்கையை இழந்துவிடும். அதற்கு மிகச் சரியான நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அநேகமான முன்னுதாரணங்களைச் சொல்லலாம். இதற்கு அதிகாரம் இருக்கிறது. இதை உரிமைக் குழுவிற்குக்கூட அனுப்ப வேண்டுமென்ற அவசியம் இல்லை. நம்முடைய சட்டமன்றப் பேரவை விதிகளிலே விதி 225 மிகத் தெளிவாகச் சொல்கிறது. இந்த மாதிரிச் சூழ்நிலையிலே இந்த அவையே அதற்கான முடிவுகளை எடுக்கலாம்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2007 அக்டோபர் 19

*பிரிவு 225:*—"If the Speaker, holds that the matter raised affects the privilege or amounts to a contempt of the House. . ."—நேற்று நடந்தது உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல. நேற்று நடந்தது இந்த அவையை அவமதிக்கின்ற செயல்—it is contempt of the House— ". . . and requires the intervention of the House, he may allow a motion to be made by any Member that the alleged breach of privilege be referred to the Committee of Privileges or in the alternative that it be dealt with by the House itself."

*முற்பகல் 11-10*

ஆகவே, இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அதன்மீது விவாதம் நடத்தி, அதன்மீது ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. நேற்று இந்தக் கொடுமை நடக்கின்றபோது, இந்த ஜனநாயக விரோதச் சம்பவம் நடக்கின்றபோது, இந்த அவைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதையை இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் சாட்சிகளாக இருந்து பார்த்துக்கொண்டிருந்தோம். ஏன்? உரிமைக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள்கூட, பத்திரிகையாளர் மாடத்திலே இருக்கின்ற பத்திரிகையாளர்கள்—இந்த தேசத்தினுடைய ஜனநாயகப் பயிரை வளர்ப்பதற்காகப் பத்திரிகைகள் ஒரு மிகப் பெரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றன என்பதை உரிமையோடு ஏற்றுக்கொள்கின்ற நேரத்திலே அவர்களும்கூட—நேற்று இதற்கு சாட்சிகளாக இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே இதை நாம் அனுமதிக்கலாமா? இதை அனுமதிக்கக் கூடாது. இதை அனுமதிக்கக் கூடாது என்று சொல்லப்படுகிற நேரத்திலே, இந்தக் குற்றத்திற்குத் தரப்படுகின்ற தண்டனை, அந்தக் குற்றத்திற்குத் தகுந்த தண்டனையாக இருக்க வேண்டும். அதற்கு இந்த அவைக்கு இருக்கிற உரிமையை இந்த நாட்டினுடைய உச்ச நீதிமன்றமே ஒத்துக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற நேரங்களிலே அதற்குச் சரியான நடவடிக்கை எடுப்பதற்கு, இந்த அவைக்கு வானளாவிய அதிகாரம் இருக்கின்றது என்று அவர்கள் சொல்வார்கள். அதை அப்படிச் சொல்லவில்லை, உச்ச நீதிமன்றம். இந்த அவைக்கு legitimate powers இருக்கிறது; இந்த அவைக்கு இதற்கான சட்டங்கள் இருக்கின்றன என்பதை நம்முடைய உச்ச நீதிமன்றம், "The cash for query case"-- நாடாளுமன்றத்திலே கேள்விகள் கேட்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பணம் வழங்கிய வழக்கிலே தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சொல்கிறது: " If the paramount consideration in granting powers, privileges and immunities to Members of Legislatures is to



2007 அக்டோபர் 19] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

enable them to ensure that they perform their functions, exercise their rights and discharge their duties effectively, efficiently and without interference of outside agency or authority, it cannot be accepted that in case of abuse or misuse of such privilege."

"ஓர் உறுப்பினர் தனக்கிருக்கின்ற உரிமையைத் தவறாகப் பயன்படுத்துவார் என்று சொன்னால், by any member, no action can be taken by the Legislature, the parent body என்பதை இந்த நீதிமன்றம் ஒத்துக்கொள்ள முடியாது" என்று சொல்லியிருக்கிறது. அந்த உறுப்பினர்கள் தங்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்திலே போய்ச் சொன்னார்கள். "எங்களுக்கு அந்த உரிமைகள் இருக்கின்றன; As a Member of this House, I am entitled to the privilege" என்று உச்ச நீதிமன்றத்தின் முன்பு போய் வாதிட்டபோது, உச்ச நீதிமன்றம் சொன்னது: "அல்ல; உரிமை என்கிற பெயரிலே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற பெயரிலே ஓர் அவைக்குள்ளே வந்து, மாண்பிற்குரிய, தகுதிக்குரிய, கண்ணியத்திற்குக் குறைவான செயலைச் செய்தால் இந்த அவை அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு முழு உரிமை இருக்கிறது; Every Legislative body possesses power to regulate its proceedings, power of self-protection, self-preservation and maintenance of discipline, in exercise of which it can suspend or expel a Member from the House" என்று இருக்கிறது. ஆகவே, தன்னுடைய கண்ணியத்திற்குக் குறைவான, இந்த அவையின் மாண்பிற்குக் குறைவான, உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கின்ற தகுதிகளுக்குப் புறம்பான செயலை யாராவது செய்தால், இந்த அவையிலிருந்து அவர்களை முழுமையாக நீக்கி வைக்கக்கூடிய அதிகாரம்கூட இந்த அவைக்கு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏற்கெனவே இந்த அவையிலே முன்னுதாரணமாகச் செய்திருக்கிறார்கள்.

*1986* ஆம் ஆண்டு இந்த அவையிலே நம்முடைய பேராசிரியர் பெருந்தகை இருந்தார்கள். அவர்கள் தலைமையிலே இருக்கின்ற *10* பேரை நீக்குகிறபோது இந்த அவை ஆதரித்த தீர்மானத்தை நான் உங்கள் பார்வைக்கு வாசிக்க ஆரம்பிக்கிறேன்:

"சம்பந்தப்பட்ட நபர்களுடைய நடத்தை, அரசியல் சட்டத்தின் மதிப்பையும், அதன்மூலம் ஏற்படுத்தப்பட்ட அவையின் மதிப்பையும், அவை உறுப்பினர்களுக்கான இருக்க வேண்டிய மதிப்பையும் தாழ்த்தி, இந்திய அரசியல் சட்டத்தின் கண்ணியத்தையும், இந்த அவையின்

கண்ணியத்தையும் குறைக்கும் செயலாக அமைந்துள்ளபடியாலும், மேலும் அவர்களுடைய நடத்தை, உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கும் தரத்திற்கும், தகுதிக்கும் ஒவ்வாததாக இருப்பதாலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்கள் தங்கள் நடத்தையால் இந்த அவையின் உறுப்பினர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்று இப்பேரவை கருதுகிறது."

1986 ஆம் ஆண்டு இந்த அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம். "ஓர் உறுப்பினர் தன்னுடைய நடத்தையால், தன்னுடைய நடத்தைக் குறைவால் இந்த அவையிலே இருக்கத் தகுதியற்றவராக இருக்கிறார் என்று இந்த அவை தீர்மானித்தால் . . ." என்ன சொல்கிறது? "ஆகவே, இந்த அவையின் உறுப்பினர்களாக நீடித்திருக்கும் இவர்கள் தகுதியற்றவர்கள் என்று தீர்மானித்து, அவர்கள் இப்பேரவையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுகின்றனர் என்றும், தொடர்ந்து இந்த அவையின் உறுப்பினர்களாக இருக்க முடியாது என்றும் தீர்மானித்து, அவர்களுடைய இடங்கள் வெற்றிடங்கள் ஆகின்றன என்று இந்த அவை தீர்மானிக்கிறது."

இதுதான் இந்த அவையிலே எடுக்கப்பட்ட தீர்மானம். அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமா? அத்தகைய தண்டனையை அளிக்க வேண்டுமா? அளிக்க வேண்டும் என்று நான் கேட்கவில்லை. அளிக்க வேண்டுமா என்று யோசிக்கிற கட்டத்திற்கு இந்த அவை வந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய அதிகார ஊற்றாகச் செயல்படுகின்றவர்கள் நீங்கள். You are the custodian of the House. நீங்கள் இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை அரசியல் சாசன சட்ட ரீதியாகச் சுமந்திருக்கிறீர்கள். The Constitution of India has given you the sole power to protect the privilege of the Members and the conduct of the House. உங்களுக்கே ஒரு சூழ்நிலை வருகின்றது என்று சொன்னால், இந்தச் சட்டமன்றத்தினுடைய எதிர்காலம் என்னவாகும் என்பதை நீங்கள் யோசித்து, இதைப்போன்ற செயல்கள் இனிமேல் இங்கே நடக்கக் கூடாது என்கின்ற கோணத்திலே, இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும்.





இரண்டு நாட்கள் சட்டமன்றம் நடத்தினால் போதும் என்று சொன்னார்கள். மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களிடம் நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்றத் தலைவர் அவர்கள், நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சட்டமன்றத் தலைவர், தோழர் சிவபுண்ணியம் போன்றவர்கள், இரண்டு நாட்கள் போதாது; குறைந்தது ஐந்து நாட்களாவது கூட்டத்தை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். 'அலுவலே இல்லை; இதை ஒரு அரசியல் சாசனக் கட்டாயத்திற்காக நடத்துகிறோம்; அலுவல்கள் ஒன்றுமில்லை; எனவே, வேண்டாம்' என்று சொன்னார்கள். நாங்கள் சொன்னோம், 'மக்கள் பிரச்சினைகள் இருக்கின்றன; விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் நிறைய எங்களிடம் இருக்கின்றன; நாங்கள் தருகின்றோம்' என்று சொன்னபோது, அவர் சொன்னார்: 'வெறும் கேலிக் கூத்தாக ஆக்குவதற்குத்தான் முயற்சி நடக்குமே ஒழிய, பயனுள்ள விவாதம் நடக்காது' என்று சொன்னார். நாங்கள் அதையெல்லாம் மீறி, முதலமைச்சரிடமே நேராகப் போய், கூட ஒரு நாள், இரண்டு நாட்கள் சட்டமன்றத்தை நடத்த வேண்டுமென்று கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள், பொருள் இருந்தால், கருத்து இருந்தால் நடத்தலாம் என்று அவர்களாக ஒப்புக்கொண்டார்கள். அதற்காக வாங்கிய நாட்களை இப்படிப் பயனற்ற வகையிலே, சட்டமன்றத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்குகின்ற வகையிலே சிலர் இதைக் கொச்சைப்படுத்துகின்ற முயற்சியை நாம் அனுமதிக்கக் கூடாது. அப்படி நாம் அனுமதித்தால், எதிர்காலச் சந்ததியினரிடம், ஜனநாயகத்தைப் படுகுழியில் தள்ளிய மாபாதகத்திற்கு நாமும் துணை போனோம் என்ற பெரும் அவப் பெயர் நமக்கு ஏற்படும் என்ற காரணத்தால், இந்த அவைக்கு அத்தகைய அவப் பெயர் ஏற்படக் கூடாது என்று நான் மனப்பூர்வமாக விரும்புகின்ற காரணத்தால், தங்களை அவமதித்த, இந்த அவையை அவமதித்த, ஜனநாயகத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிய, இந்த அவை நடவடிக்கைகளையே கொச்சைப்படுத்திய அந்த உறுப்பினருக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையிலே ஒரு செய்தி. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் மற்றும் முதலமைச்சர் அவர்களின் மகனாக இருக்கின்ற, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களைக் குறிப்பிட்டு, 'கொல்வதற்குச் சதித் திட்டம்' என்ற ஒரு மிகப் பெரிய செய்தி, நாட்டு மக்களெல்லாம் பார்த்து ஆச்சரியப்படக்கூடிய வகையிலே, அதிர்ச்சியுறக்கூடிய வகையிலே வருகின்றது. அந்தச் செய்தியைப் பார்த்தவுடனே, முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவர், ஓர் அரசியல் இயக்கத்தை நடத்தக்கூடியவர், அதற்கு விளக்கம் சொல்ல வேண்டுமா, வேண்டாமா என்பது என்னுடைய முதல் கேள்வி. அந்த அடிப்படையில்தான், யார்மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதோ, அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்கின்ற வகையில், அதிலும் குறிப்பாக முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தால், உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், சட்டமன்றம் நடைபெறுகின்ற நாட்களிலே சட்டமன்றத்திலே அதை எடுத்துச் சொல்வதும், அப்படிச் சொன்னவர்கள்மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவருவதும், ஜனநாயக நடைமுறைகளில் அனுமதிக்கப்பட்ட ஒன்று. அந்த அடிப்படையில்தான், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே உரிமை மீறல் பிரச்சினையை வாசிக்கின்ற நேரத்தில், அவருடைய கடமையைச் சரியாக செய்ய முன்வருகின்ற நேரத்தில், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற, முக்கிய எதிர்க்கட்சியாக இருக்கின்ற அ.தி.மு.க.வினர் கடுமையாக, அவரைப் பேசவிடாமல் தடுத்ததையும் நாம் பார்த்தோம். ஜனநாயக ரீதியாக, ஆக்கப்பூர்வமாக, எதிர்க்கட்சி என்ற முறையில் கருத்துகளைச் சொல்வதும், எதிரும் புதிருமாகப் பேசுவதும் நடைமுறையிலே இருக்கின்ற ஒன்று. ஆனால் அதையெல்லாம் மீறி, அவரைப் பேசவிடாமல் கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு கூச்சலிட்டது மட்டுமல்ல—அவர்கள் எதிர்ப்புக் காட்ட வேண்டுமென்று சொன்னால், நாடாளுமன்ற ஜனநாயக முறைப்படி அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது; பேசலாம். அதையும் விடுத்து, சபாநாயகர் இருக்கைக்கு அருகிலே வந்து அமர்ந்து கூச்சலிட்டது மட்டுமல்ல—அதையும் மீறி, இதுவரையில் நம்முடைய மாமன்றத்திலே நாங்களெல்லாம் பார்க்காத ஒன்றாக, அங்கே பேரவைத் தலைவர் முன்பாக இருக்கின்ற அந்த மேசையைத் தள்ளிய காட்சியை நாம் பார்த்தோம். சேர்ந்து தள்ளுகின்றார்கள். எதிர் வரிசையிலே இருந்த நம்முடைய காவலர்களும், மற்றவர்களெல்லாம் அந்த மேசையைத்



தாங்கிப் பிடிக்கின்ற நிலை இங்கே நடந்தது. அது மட்டுமல்ல; நம்முடைய அ.தி.மு.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. போஸ் அவர்கள், காவலர் தலையில் இருந்த தொப்பியைத் தூக்கி பேரவைத் தலைவர்மீது வீசி எறிந்த காட்சியைத் தொலைக்காட்சியில் நாங்கள் பார்த்தோம்; நாட்டு மக்களெல்லாம் பார்த்தார்கள். இப்படிப்பட்ட நிலையைப் பார்க்கின்றபோது, தமிழ்நாடு சட்டப் பேரவையிலே பணியாற்றும் நம்மைப்போன்றவர்கள்மீது மக்கள் என்ன நம்பிக்கை கொள்வார்கள் என்பதைத்தான் நாங்களெல்லாம் இங்கே கருத்துச் சொல்வதற்காகச் சொல்லிக்கொண்டிருக்கின்றோம்.

*முற்பகல் 11-20*

நம்முடைய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்திலே பல்வேறு ஆதாரங்களை மேற்கோள் காட்டிச் சொன்னார்கள். இப்போதும் நான்கூட சொல்லிக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை என்ற நேரத்தில், சில நாளேடுகளின்மீது சொன்னார்கள். அப்படி நாளேடுகளின்மீது உரிமை மீறல் தேவையில்லை; அதற்கு விலக்களிக்க வேண்டும்; விலக்கிக்கொள்ள வேண்டுமென்ற வகையிலேதான், பத்திரிகை ஆசிரியராக இருக்கிற, ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிற, ஒரு அரசியல் கட்சி நடத்துகிற அல்லது மூத்த தலைவராக இருப்பவர், தனக்கு அரசியல் நாகரிகம் இருக்கிறது; பக்குவம் இருக்கிறது; உயர்ந்த பண்பு இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் நாளேடுகளின்மீதான உரிமை மீறல் பிரச்சினைகளையெல்லாம் விலக்கிக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல; "பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியிருக்கிறது; என்மீது கொலை முயற்சி நடந்திருக்கிறது" என்று சொன்ன நேரத்தில், "150 காவலர்களுக்கு மேலே பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்; தேவையானால், இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கிறேன்" என்று இந்த மாமன்றத்திலே சொன்ன வாக்குறுதி என்பது, பேச்சு என்பது, பரந்த நோக்கத்தைக் காட்டுகிறது; ஜனநாயகத்தில் எல்லோரையும் பாதுகாக்க வேண்டுமென்ற முதலமைச்சரின் எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. ஆகவே, இப்படி ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட ஒரு தலைவர், மூத்த தலைவராக, முதலமைச்சராக இருக்கிற வேளையில் இந்த

மாமன்றத்திலே, பேரவைத் தலைவர்மீது இவ்வளவு பெரிய தள்ளுமுள்ளு அல்லது அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னால், இது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மிகப் பெரிய தலைக்குனிவு என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல; இந்திய ஜனநாயகத்தில், அதிலும் குறிப்பாக, இந்திய நாட்டினுடைய எல்லா மாநிலச் சட்டப் பேரவைகளையும்விடத் தமிழகத்தினுடைய சட்டப் பேரவைக்கு மிகப் பெரிய மாண்பு இருக்கிறது, மரபுகள் காக்கப்பட்டு வருகின்றன. மூத்த தலைவர்கள், அகில இந்திய ரீதியிலே இருக்கிற நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், போற்றுதலுக்குரிய பேரறிஞர் அண்ணா போன்றவர்களெல்லாம் இங்கே பணியாற்றியது, அதிலும் குறிப்பாக, நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தில் தலைவர் கலைஞர் அவர்களும் இந்த மாமன்றத்திலே பணியாற்றிக்கொண்டிருப்பது என்பது, இந்தச் சட்டப் பேரவையில் மாண்பு நிறைந்திருக்கிறது என்பதற்கு ஒரு சான்று. அப்படிப்பட்டவர்களெல்லாம் பணியாற்றிக்கொண்டிருக்கிற வேளையில் இந்தச் சட்டமன்றத்திலே இவ்வளவு பெரிய தலைக்குனிவுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறக் கூடாது; இது நீடிக்கக் கூடாது என்பதுதான் எங்களைப் போன்றவர்களெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புவது.

இன்னும் சொன்னால், நம்முடைய நாடாளுமன்றத்தினுடைய பேரவைத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் அடிக்கடிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்திய நாடாளுமன்றத்திலே அங்கே அலுவல்கள் நடக்க முடியாத நிலை வருகிறது. அவரைப் பற்றிச் சொல்வோம் என்று சொன்னால், பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவர்; போராட்டத்தை ஊக்குவிப்பவர். போராட்டத்தை ஊக்குவிக்கக்கூடிய பொதுவுடைமை இயக்கத்தினுடைய மூத்த தலைவராக இருக்கிற மாண்புமிகு சோம்நாத் சாட்டர்ஜி அவர்களே இப்படிப்பட்ட சம்பவங்கள் இந்திய ஜனநாயகத்திற்கு எதிரானது; நாடாளுமன்ற ஜனநாயகத்திலே இதை அனுமதிக்கக் கூடாது என்று பல்வேறு திட்டங்களையெல்லாம் அங்கே விதிகளாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு போராட்ட தளகர்த்த இயக்கமாக இருக்கிற பொதுவுடைமை இயக்கத்தின் தலைவரே வழிகாட்டிக்கொண்டிருக்கிற இந்த வேளையில், நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இப்படிப்பட்ட அசம்பாவிதச் சம்பவங்கள் இனி வருங்காலங்களில் நடக்கக் கூடாது; இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற அந்த வகையிலேதான்,



நம்முடைய பேரவைத் தலைவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த அசம்பாவிதம் என்பது, எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது, மன்னிக்கக் கூடாதது. அப்படிப்பட்ட குற்றம் என்கிற காரணத்தினாலேதான், நீங்கள் தயவுசெய்து 'உங்களைப் பாதுகாப்பதற்காக' என்று நான் சொல்லவில்லை; அந்த இருக்கை மகத்துவமானது; மாண்பு நிறைந்தது; ஆகவே, உங்களுக்கே அந்த நிலை என்று சொன்னால், சட்டப் பேரவையிலே மற்றவர்களுக்கு என்ன நிலைமை என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அசம்பாவிதத்தில் ஈடுபட்ட மாண்புமிகு உறுப்பினர் போஸ் என்பவர்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது சட்ட ரீதியான நடவடிக்கை என்பதைவிட, எல்லா அதிகாரங்களும், எல்லாப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மாமன்றப் பேரவைத் தலைவருக்கு இருக்கின்ற காரணத்தினாலே, நீங்களே தீர்ப்பளிக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கை எடுத்து, இனி அப்படிப்பட்ட அசம்பாவிதச் சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, guillotine time இருக்கிறது இன்றைக்கு. கொஞ்சம் சுருக்கமாக எல்லோரும் சொல்லுங்கள். ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும்.

*முற்பகல் 11-25*

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தவைர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையிலே நடந்திருக்கக்கூடியது அநாகரிகமான செயல். இந்தப் பேரவையில் எங்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பேரவைத் தலைவருக்கே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி, அ.இ.அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் இந்தச் சபையில் வேண்டுமென்றே சில பிரச்சினைகளைக் கிளப்பி, முன்னாள் முதலமைச்சர், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், கொலை செய்ய முயற்சிக்கிறார்கள் என்றும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கொலை செய்வதற்காக ஏதோ சதித் திட்டம் தீட்டினார்கள் என்றும் செய்திகளை எல்லாம் சொல்லி, அதற்கு எதிராக இந்தச் சபையிலே ஒரு கூச்சலை உருவாக்கி, அதனுடைய உச்சக்கட்டமாக, காவலர்களினுடைய தொப்பியையும்

எடுத்து வீசிப் பேரவைத் தலைவரையே அடிக்கின்ற ஒரு நிலைமை என்பது ஜனநாயகத்தில், சட்டமன்ற ஜனநாயகத்தில் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கடுமையான நடவடிக்கை என்று மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி இதைப் பார்க்கிறது.

இது சட்டப் பேரவையின் ஒரு குறுகிய காலக் கூட்டம். தமிழ்நாட்டின் ஏராளமான மக்கள் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிற ஒரு வாய்ப்பை இந்தப் பேரவைக் கூட்டத்தின் மூலமாகப் பயன்படுத்துவதற்கு மாறாக, அவர்களே வெளியிலே பல்வேறு போராட்டங்களை நடத்துகிறார்கள். அதையெல்லாம் இங்கே அரசினுடைய கவனத்திற்கு எடுத்துக் கொண்டு வந்து விடை காண வேண்டியவர்கள், அதுபோன்ற பொறுப்பான ஜனநாயகக் கடமைகளை ஆற்றாமல், இந்தச் சட்டமன்றத்தையே முடமாக்கக்கூடிய வகையிலே தொடர்ந்து இரண்டு நாட்களும் கூச்சலிலும், கலாட்டாவிலும் ஈடுபட்டு, அதனுடைய உச்சகட்டமாகப் பேரவைத் தலைவரையே தாக்குவது என்கிற ஒரு நிலைமைக்குச் சென்றிருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆகவே, அவர்கள் ஒரு தொப்பியைத்தானே வீசினார்கள் என்றுகூட நாளைக்கு வாதிடலாம். வீசியது தொப்பியா, கல்லா அல்லது இரும்பா என்பதல்ல. அவர்கள் கையில் அந்த நேரத்தில் எது கிடைக்கிறதோ, அதை வீசி அடிப்பது என்ற ஒரு நிலைமை உருவாகுமானால், அதனுடைய நோக்கம் மிகவும் ஆபத்தானது என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஒருவேளை இந்த ஒலிபெருக்கி அவர்களுடைய கையில் கிடைத்திருக்குமானால், அதைக்கூட வீசியடிக்கத் தயங்கி இருக்க மாட்டார்கள். ஆகவே தொப்பி என்று இதை அவ்வளவு சுலபமாகப் பார்க்கக் கூடாது. அவர்களுடைய நோக்கம், உங்களைத் தாக்குவது என்கிற நோக்கம் கடுமையானது; கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளானது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 18 ஆண்டுகளுக்கு முன்னால் இதே அவையிலே அன்றைக்கு நானும் உறுப்பினராக இருக்கிற வாய்ப்புக் கிடைத்தது. அன்றைக்கு இந்த அவையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களையே தாக்குகிற நிகழ்ச்சி, இந்த அவையிலே நடந்த நிகழ்ச்சியை நானும் நேரிலே பார்த்தேன். அதைத் தடுக்க முயற்சித்த நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஒலிபெருக்கியைப் பிடுங்கி அடித்து அன்றைக்கு எவ்வளவு கடுமையாகத் தாக்கப்பட்டார் என்பதையெல்லாம் பார்க்கிறபோது, அ.இ.அ.தி.மு.க.விற்கு இந்தச்



சட்டமன்றத்திலே இதுபோன்ற கலகங்கள் செய்வது புதிதல்ல; தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிற ஒரு ஜனநாயக விரோதச் செயல் என்பதை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இங்கே நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இவ்வளவையும் செய்துவிட்டு, இன்றைக்குப் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால், அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுகிறார்: "அ.தி.மு.க.-வைச் சார்ந்த உறுப்பினர்களைச் சட்டமன்றத்திலே ஜனநாயகக் கடமை ஆற்ற விடாமல் இன்றைக்கு இடைநீக்கம் செய்திருப்பது சரியல்ல; அவர்களை ஜனநாயகக் கடமையாற்ற அனுமதிக்க வேண்டும்" என்ற ஒரு செய்தியையும் இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். ஒருவேளை அவர்களுடைய பாஷையிலே ஜனநாயகக் கடமை என்பது பேரவைத் தலைவரைத் தாக்குவது; இங்கே மேஜைமீது ஏறி நின்று செருப்பைக் காட்டுவது; மக்கள் பிரச்சினைகளைப் பேசவிடாமல் இந்தச் சட்டமன்றத்தை முடமாக்குவதுதான் அவர்களுடைய ஜனநாயகமா என்பதற்கு அவர்கள்தான் விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அந்த வகையிலே நடந்திருக்கிற இந்த நிகழ்ச்சி மிகவும் கடுமையானது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற வரலாற்றிலே பொன் விழாக் கண்டவர். ஆகவே, அவருடைய சீரிய ஆலோசனையின்படி இதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையிலே நடைபெற்ற விரும்பத்தகாத, மோசமான சம்பவங்கள் குறித்து நேற்றையதினமே என்னுடைய கருத்தை இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். குறிப்பாக, அ.தி.மு.க. உறுப்பினர்கள் நேற்று நடந்துகொண்ட விதம் என்பது மிகவும் முரட்டுத்தனமாகவும், மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைந்துவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையே தாக்குகின்ற நோக்கத்தோடு, காவலரின் தொப்பியைப் பிடுங்கி உங்களை அடித்தார்கள். இங்கே உறுப்பினர் திரு. கோவிந்தசாமி குறிப்பிட்டுச் சொன்னதுபோல, அவர்களுக்குக் கிடைத்தது காவலருடைய தொப்பிதான். வேறு எது கிடைத்தாலும்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2007 அக்டோபர் 19

அதைக் கொண்டு பேரவைத் தலைவரைத் தாக்குவதற்கு முற்பட்டிருப்பார்கள் என்பதுதான் அந்தச் செயலின் மூலமாக வெளிப்படுகிறது.

குறிப்பாக, அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே அவைக்கு வருகிறபோது ஒரு நோக்கத்தோடு வருகிறார்கள். கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பிவிட்டு வெளியேறுகின்றபோது, வெளியிலே அந்தக் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பத்திரிகைச் செய்தியாளர்களைச் சந்திக்கின்றபோது பேட்டியிலேயே குறிப்பிட்டுச் சொல்கிறார். சொல்கிறபோது, இந்தப் போராட்டம் தினசரி தொடரும் என்று சொல்கிறார். இங்கே இருக்கிற பத்திரிகையாளர்கள் எல்லாம் அந்தச் செய்தியைக் கேட்டிருப்பார்கள். முதல் நாளே, தொடரும் என்பதை அறிவித்துவிட்டுத்தான் நேற்றையதினம் அந்தத் தொடர் நிகழ்ச்சியைத் தாக்குதலாகவே இங்கே அரங்கேற்றி இருக்கிறார்கள். ஆகவே, அ.தி.மு.க. உறுப்பினர்கள் என்பவர்கள், திட்டமிட்டு இந்த அவையிலே நடந்துகொள்வதற்குரிய முயற்சியாகத்தான் நேற்றைய சம்பவம் நடந்து இருக்கிறது.

*முற்பகல் 11-30*

முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பத்திரிகைக்கு அளித்த ஒரு செய்தி, அவருடைய அதிகாரப்பூர்வமான ஏட்டிலே வந்திருக்கிறது. சட்டமன்ற ஜனநாயகம் செத்துவிட்டது என்று மிகவும் அங்கலாய்க்கிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய் வருத்தப்பட்டதுபோல இருக்கிறது. அதுவும் ஜனநாயகத்தைப் பற்றி முன்னாள் முதலமைச்சர் சொல்கிறபோதுதான் நிரம்பவும் வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்கிறது.

சென்ற ஐந்தாண்டுக் காலம் அவர்களுடைய ஆட்சி நடைபெற்றபோது ஜனநாயகம் எப்படியெல்லாம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, அவர் ஜனநாயகத்தைப் பற்றிக் கவலைப்படுவதோடு அல்லாமல், வேறு ஒரு செய்தியையும் சொல்கிறார். அ.தி.மு.க. உறுப்பினர்கள் மக்கள் பிரச்சினையைப் பேசுவதற்காக இங்கே வந்தார்களாம். அந்த வாய்ப்பெல்லாம் பறிக்கப்பட்டு அவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்களாம். துதி பாடிகளாக இருக்கிற கட்சிகளை வைத்துக்கொண்டு, சட்டசபையிலே பல்வேறு மக்கள் விரோதச் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்று



2007 அக்டோபர் 19] [திரு. வை. சிவபுண்ணியம்]

இன்றைக்கு நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையிலே செய்தி வருகிறது. துதி பாடிகள் என்று இங்கே இருக்கிற எதிர்க்கட்சிகளை முன்னாள் முதலமைச்சர் குறிப்பிட்டுச் சொல்கிறார். நாங்கள் துதி பாடிகளாக இருக்கிறோமா, இல்லையா என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால் அ.தி.மு.க.-வுக்குத் தலைமை தாங்குகின்ற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களும், அவருடைய சட்டமன்ற உறுப்பினர்களும்—இங்கே நாங்கள் துதி பாடிகளாக இருக்கிறோம் என்று வாதத்திற்கு வைத்துக்கொண்டால்கூட—அவர்கள் இங்கே வருகிறபோதும் சரி, வெளியிலே அவர் கருத்தைச் சொல்கிறபோதும் அவர் துதிக்கை பாடிகளாகவே அவர்களுடைய செயல்பாடுகள் அமைந்துகொண்டேயிருக்கின்றன. அது முரட்டுத்தனமாகவும் இருக்கிறது. துதி பாடிகள் என்றால் அதனுடைய அர்த்தம் வேறு. ஆனால், துதிக்கை பாடிகளாக இருந்தால் எப்படி இருக்கும் என்பதைத்தான் புரிந்துகொள்ள வேண்டும். அது அவருடைய செயல்பாடு; அவருடைய எண்ணம், அதை ஈடேற்றுவதற்குரிய முயற்சியாக இந்தச் சட்டமன்றத்தைக் களமாகப் பயன்படுத்துவதற்கு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் முயற்சி செய்கிறார். அதனுடைய விளைவாக நேற்றைய சம்பவம் இங்கே நடைபெற்று இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் திரு. போஸ் அவர்கள் அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபட்டார் என்கிற செய்தி, பத்திரிகை மூலமாகப் படமாகவே எல்லாச் செய்திப் பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கிறது. ஆகவே, இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கு ஒரு சந்தேகம் என்னவிருக்கிறது என்றால், இதுவே சென்ற ஆட்சியிலே இருந்த பேரவைத் தலைவராக இருந்தால், **சென்ற பேரவைத் தலைவர் என்றால், அப்படியே சித்திரித்து, அதற்கு ஒரு கதை கட்டி என்ன பிரமாதமாக இந்தச் சட்டமன்றத்தில் அந்தச் செய்தியைச் சொல்லி இருப்பார் தெரியுமா? தாங்கள் அதைப் பற்றி எப்படிக் கருதுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. **என்ற காரணத்தினாலேயே உங்கள் இருக்கைக்கே வந்து உங்களுடைய மேஜையைத் தள்ளி, உங்களைத் தாக்குவதற்கான முயற்சி எடுக்கிற அளவுக்கு அவர்களுக்குத் தைரியம் வருகிறது என்று சொன்னால், அ.தி.மு.க. உறுப்பினர்கள் பல பேர்கள் சென்ற முறையும் இருந்தார்கள்; அதற்கு முந்தைய முறை இருந்தவர்களும் ஒரு சிலர் இருக்கிறார்கள்; ஆனால், இந்த அவையினுடைய மரபு என்பது காக்கப்படவில்லை என்பதுதான் வருத்தத்திற்குரிய செய்தி.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வை. சிவபுண்ணியம்][2007 அக்டோபர் 19

1996-2001 ஆம் ஆண்டுகளிலே 4 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களில் இப்போது 2 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அமைச்சர்களாகவும் இருந்தவர்கள்; இந்த அவையில் இருக்கிறார்கள். பி.ஆர். சுந்தரம் என்ற ஓர் உறுப்பினர் இருந்தார். இந்தச் சட்டசபைக்கு வந்தபோது எப்படி வந்தார்? தலையிலே helmet அணிந்து, Jerkins உடை அணிந்து கிரிக்கெட் வீரரைப்போல இந்தச் சட்டமன்றத்திற்கு வந்தாரா, இல்லையா? அவர் வந்தபோது—ராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர்—அப்போதுகூட நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை அனுமதித்துவிட்டு, இதைக் கொஞ்சம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **என்ற அந்த வார்த்தை நீக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** **என்பதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். **என்று வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** உங்களுடைய அமைதியும், பொறுமையும் இந்த அவையினுடைய மாண்பைக் காப்பதற்குப் பெருமளவில் உதவி செய்யும் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் இந்த அமைதியையும், பொறுமையையும் இந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் தவறாகப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்பதுதான் வேதனைக்குரிய செய்தி. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்தச் சட்டசபையிலே நடந்துகொண்ட அந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய செயல்பாடு என்பது, மிகவும் கண்டிக்கத்தக்க செயல்பாடு. தண்டனைக்குரிய செயல்பாடு. அவருக்குரிய தண்டனையை இந்த அவையினுடைய மாண்பு கருதி எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை நீங்கள் எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 அக்டோபர் 19]

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடைபெற்ற ஒரு ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து, நம்முடைய தலைவர்கள் எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்தினார்கள். ஏதோ நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்ததற்காகத்தான் அவர்கள் இப்படிக் கலவரத்தில் ஈடுபட்டார்கள் என்பதுபோல் பேசினார்கள். ஒருவேளை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை என்றாலும்கூட இப்படிப்பட்ட ஓர் அநாகரிகமான காரியத்தில் கண்டிப்பாக அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள். அவைக்கு வரும்பொழுதே, இந்த அவையை எப்படிச் சீர்குலைக்கலாம்; இந்த அவையிலே மக்கள் பிரச்சினையைப் பற்றி எந்தச் சட்டமன்ற உறுப்பினரையும் பேசாமல் தடுக்கலாம் என்று திட்டமிட்டே அவைக்கு வருகிறார்கள். ஆக, இப்படிப்பட்ட ஒரு அநாகரிகச் செயலைக் கண்டித்து, அவர்களுக்கு ஒரு கடுமையான தண்டனையை அளிக்கும்படி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குத் தொப்பியைப் பிடிக்குமென்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், அந்தத் தொப்பியையே இப்படி அவமரியாதை செய்வது எந்தவிதத்தில் சரி என்று நமக்குப் புரியவில்லை. பெரிய தொப்பியைத் தூக்கியெறிந்தவர்கள், இன்று சிறிய தொப்பியை நம்முடைய பேரவைத் தலைவர்மீது தூக்கியெறிவது எந்தவிதத்தில் சரி என்று தெரியவில்லை. நாமெல்லாம் பேசுகிறோம், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், இப்படிப்பட்ட ஒரு அநாகரிகச் செயலில் ஈடுபட்டார்கள் என்று. அவர்கள் கூட்டணியில் இருக்கின்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் நேற்று அதற்குச் சாட்சியாக, அவர்கள்பின் செல்லாமல், இது ஜனநாயகப் படுகொலை என்று மௌனமாக அவர்கள் அமைதி காத்து, வெளிநடப்புச் செய்யாமல் இங்கே அமர்ந்திருந்தார்கள். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த அவையிலே நடந்துகொண்ட விதம், இந்தச் சட்டமன்றத்திற்கு ஏற்பட்ட இழுக்கைக் கண்டித்து, இனி வருங்காலங்களில் இப்படிப்பட்ட ஓர் அவல நிலை சபையிலே ஏற்படாமல் இருக்க நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் திரு. போஸ் அவர்களுக்கு கடுமையான ஒரு தண்டனையை அளிக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், இங்கே வருகின்ற அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், பின்புறமாக இருந்து தாளம் போடுவது, மேசையைத் தட்டுவது, இங்கே உறுப்பினர்கள் மக்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசினால் கிண்டல்,

கேலி செய்யும் விதம், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், அந்த உறுப்பினரை இந்தக் கூட்டத் தொடர் மட்டுமல்லாமல், இனி வருங்காலங்களிலும் அவர் அவைக்கு வராமல் இருக்க ஒரு நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுக்க வேண்டுமென்று கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் நடைபெற்ற நிகழ்வு குறித்துத் தமிழகம் முழுவதும் உருவாகி இருக்கின்ற எதிரொலி பற்றிப் பல கருத்துகளை, எதிர் வரிசையிலே அமர்ந்துள்ள கட்சிகளின் தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோழமையாக உள்ள கட்சிகளின் தலைவர்கள் எடுத்துச் சொல்லி, இனி இப்படி ஒரு சம்பவம் நடைபெறாமல் இருக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்த அவைக்கு அதை உணர்த்தி இருக்கின்றார்கள். நேற்று நடைபெற்ற நிகழ்வு விரும்பத்தகாதது; வெறுக்கத்தக்கது; அநாகரிகமானது; ஜனநாயக விரோதமானது; பண்பற்றது; பண்பாட்டுக்கு விரோதமானது; இந்த அவை நீண்ட காலமாகக் கட்டிக் காத்து வருகின்ற மரபுகளுக்கெல்லாம் மாறானது என்று பல விமர்சனங்கள் நம்முடைய கட்சித் தலைவர்களால் இன்றைக்கு இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன. அதற்கான தண்டனையை உரியவருக்குத் தர வேண்டும் என்றும், தவறினால் இந்த அவையினுடைய மாண்புக்கே மாசு வந்து நேரும் என்றும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-40*

நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, எத்தகைய தண்டனை, தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும்போது, ஏற்கெனவே 1986 ஆம் ஆண்டு இந்த அவையில் நம்முடைய பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் மற்றும் 9 பேர்கள் ஒரே ஒரு தீர்மானத்தின் மூலமாக இந்த அவையில் இருந்தே விலக்கப்பட்ட தகவலை எடுத்துக் காட்டினார்கள். எனக்கு உள்ளபடியே அதிலே ஒரு வருத்தம்தான். ஏனென்றால், பழைய நினைவுகளை அசைபோடுவது, வரலாற்றுப்பூர்வமானதாக, வரலாற்றிலே நாம் பெருமிதம் கொள்ளத்தக்கதாக நடந்த நிகழ்வுகளாக இருந்தாலும், அவற்றை





நினைவூட்டும்போது ஓர் இனம் தெரியாத இன்பம், மகிழ்ச்சி நமக்கு ஏற்படும். ஆனால், பீட்டர் அவர்கள் இங்கே நினைவூட்டியது, அவர் தன்னுடைய கருத்தை வலியுறுத்துவதற்காக எடுத்துச் சொல்லப்பட்ட குறிப்புகள் என்றாலுங்கூட, என்னை முள்ளால் குத்தியது போன்ற ஒரு நிகழ்வாக அது எனக்குப் பட்டது.

மொழிப் போராட்டத்தின்போது, அறிஞர் அண்ணா அவர்களுடைய ஆணையின்படி பேராசிரியர் அவர்களும், கழக முன்னோடிகள் 8 அல்லது 9 பேரும் களத்திலே இறங்கி, அரசியல் சட்டத்தை அல்ல; அரசியல் சட்டத்திலேயே ஒரு மொழியைத் தாழ்த்தி, இன்னொரு மொழியைத் திணிப்பதற்காகக் கட்டாயப்படுத்துகின்ற ஓர் அம்சத்தை அகற்ற வேண்டும் என்பதற்கு அடையாளமாக அதைத் தீயிட்டுக் கொளுத்துவது என்று முடிவெடுத்து, கட்சி எடுத்த முடிவை அவர்கள் நிறைவேற்றினார்கள். அது அவர்களை இந்த அவையிலே இருந்தே வெளியேற்றுகின்ற அளவுக்குத் தண்டிக்கின்ற ஒரு நிகழ்வாக அன்றைக்குக் கருதப்பட்டது.

ஒன்றை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் வெளியேற்றப்பட்டபோது இங்கே நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சி. நடத்தப்பட்ட போராட்டம், தமிழைக் காப்பாற்றுகின்ற மொழிப் போராட்டம். தமிழைக் காப்பாற்ற-அதற்காகப் போரிட்ட-தமிழுக்காக வாதாடிப் போராடி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயிருந்து தமிழ் முழக்கம் செய்த பெருந்தகை பேராசிரியர் அவர்களையும், அவரோடு அந்தக் களத்திலே ஈடுபட்ட கழக முன்னோடிகளையும், அதிலே சில பேர் மாவட்டச் செயலாளர்கள், சில பேர் தலைமைக் கழகத்தினுடைய தளகர்த்தர்கள். இவர்கள் அத்தனை பேரையும் ஒரே அடியிலே, ஒரே தீர்மானத்தின்மூலமாக அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சி, இந்த அவையிலே இருந்து வெளியேற்றி, வரவே கூடாது, உங்களுக்குப் பதவியே கிடையாது என்று தண்டித்த அந்தக் காரியம் நடந்தபோது, தீர்மானத்தை முன்மொழிந்து அதை நிறைவேற்றித் தந்தவர்—நினைக்கவே சங்கடமாகத்தான் இருக்கிறது—நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள்.

*முற்பகல் 11-45*

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமிழகத்தின் தெருக்கள் எல்லாம் தமிழ் முழக்கம் செய்தவர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பாடல்களை, ***"இளம்பிற்றுகாண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்"*** என்ற பாடல் வரிகளையும்,

[கலைஞர் மு. கருணாநிதி][2007 அக்டோபர் 19

**"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு**
**தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்**
**நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?"**

என்ற பாடலையும் இளைஞர்களுடைய உள்ளத்திலெல்லாம் விதைத்துப் பதித்தவரைக் கொண்டே அந்தக் காரியத்தை அன்றைக்குச் செய்தார்கள். ஆக, ஒரு தமிழ் உணர்வை ஒரு தமிழனைக் கொண்டே கட்டுப்படுத்த அல்லது மட்டுப்படுத்த அல்லது தண்டிக்க முற்பட்ட ஓர் ஆட்சி, இன்று நேற்றல்ல; அப்போதே அ.தி.மு.க. என்ற பெயராலேயே ஆரம்பமாகிவிட்டது.

நான் அப்போதே இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். தமிழ் வளர்க்கிற இயக்கம் தி.மு.க. ஒருமுறை நான், 'அ.தி.மு.க.' என்று சொன்னபோது, அப்போது எதிரிலேயிருந்த ஒரு நண்பர், "முழுப் பெயரையும் சொல்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரைச் சொல்; அ.தி.மு.க. என்று சொல்லக் கூடாது" என்று மறுத்தபோது, அப்போதே சொன்னேன்: "தி.மு.க.-வுக்கு மறுப்பு இயக்கம், அதுதான் அ.தி.மு.க; 'மங்கலம்' என்றால் நல்ல பொருள்; 'அமங்கலம்' என்றால் நல்ல பொருளல்ல; 'அ' சேர்ந்திருக்கிற காரணத்தால், அது தி.மு.க. அல்ல; தி.மு.க.தான் தமிழ் வளர்க்கிற இயக்கம்; தமிழர் இயக்கம்; தமிழனுக்காக இருக்கின்ற தன்மான இயக்கம்" என்று நான் அப்போதே சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 'சைவம்' என்றால், அதற்கு எதிர்ப் பதமல்லவா 'அசைவம்' என்பது? 'அ' முன்னால் வந்தாலே எதிர்ப் பதமாகத்தான் வரும், 'மங்கலம்', 'அமங்கலம்' என்பதைப்போல; அப்போதே சொல்லியிருக்கின்றேன். அதனால்தான் பேராசிரியர் அன்பழகன் தலைமையிலே போர்க்களத்திலே அன்றைக்குக் குதித்தவர்கள் மொழிப் போர் வீரர்கள் என்று தமிழகம் முழுவதும் அவர்களை வாழ்த்தி வணங்கிக்கொண்டிருக்கிற அந்த நேரத்தில், இந்த அவையிலே இருந்தவர்கள் இந்த அவைக்கு உரியவர்கள் அல்ல என்று வெளியேற்றப்பட்டார்கள். அப்போது சொல்லப்பட்ட வார்த்தைகளை எல்லாம்கூட நம்முடைய பீட்டர் அவர்கள் இங்கே சொன்னார், இந்த அவையை அவர்கள் அவமதித்துவிட்டார்கள் என்றெல்லாம் கூறி வெளியேற்றினார்கள் என்று. இந்த அவையை மதிக்கின்றவர்களிலே முதல் தரமான ஆளாக இருப்பவர்தான் நம்முடைய பேராசிரியர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையை



2007 அக்டோபர் 19] [கலைஞர் மு. கருணாநிதி]

அவமதித்துவிட்டார் என்று அவர்கள் சொன்னதை பீட்டர் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சியை ஞாபகப்படுத்துவதற்காக அவர் அதைச் சொன்னார். அதே விதமான தண்டனை தர வேண்டுமென்பதற்காக அந்த நிகழ்ச்சியை அவர் வலியுறுத்தியிருப்பார் என்றுதான் நான் கருதுகின்றேன். அதே நேரத்தில், டெல்லியிலே இருந்த காங்கிரஸ் ஆட்சி எப்படி நடந்துகொண்டது என்பதையும், இங்கே அ.தி.மு.க. ஆட்சி எப்படி நடந்துகொண்டது என்பதையும் நீங்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இங்கே அ.தி.மு.க. ஆட்சி; டெல்லியிலே காங்கிரஸ் ஆட்சி. அங்கே நண்பர் வை. கோபால்சாமி அவர்கள்—நான் இப்போது அவரை நண்பர் என்றுதான் அழைப்பது வழக்கம். ஏன் என்றால் தம்பி என்றால், அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். நண்பர் வை. கோபால்சாமி அவர்கள்—அப்போது ராஜ்யசபா உறுப்பினர்; தி.மு.க. ராஜ்யசபா உறுப்பினர். பேராசிரியர் அவர்கள் இங்கே எப்படி அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார்களோ, அதைப்போல வை. கோபால்சாமி அவர்களும்—அப்போதெல்லாம் வை.கோ. என்று பெயர் அல்ல; வை. கோபால்சாமி என்றுதான் பெயர். வை. கோபால்சாமி அவர்களும்—அரசியல் சட்டத்தை அந்தப் பகுதியிலே கொளுத்தினார்கள். அவரும் கைது செய்யப்பட்டார்; அவரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். ஆனால், மத்தியிலே, யார் இந்தியைக் கொண்டு வந்து இங்கே திணிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டார்களோ, அந்தக் காங்கிரஸ்காரர்கள்தான் ஆளுகிறார்கள் டெல்லியிலே. அவர்கள்—வை. கோபால்சாமிமீது இத்தகைய ஒரு தண்டனையை நிறைவேற்றவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விட்டுவிட்டார்கள்; பரவாயில்லை என்று விட்டுவிட்டார்கள்; அது ஒரு போராட்ட முறை என்று விட்டுவிட்டார்கள். மொழிப் போர் உணர்வைக் காட்டுகின்ற முறை என்று விட்டுவிட்டார்கள். ஆனால், இதுதான் சாக்கு என்று இங்கே எதிர்பார்த்து, எப்படி இவர்களை வெளியேற்றுவது என்று கருதிக் கொண்டிருந்து, எந்த மொழிக்காக ஓரே அணியிலேயிருந்து போராடினோமோ, அந்த மொழியைக் காப்பதற்காகப் பேராசிரியர் அவர்களும், மற்றவர்களும் அன்றைக்கு முனைந்தபோது, அதையே அரசியல் சட்டத்திற்கு விரோதமானது; இந்தியாவுக்கு விரோதமானது; நாட்டுக்குத் துரோகம் என்றெல்லாம் சொல்லப்பட்டு, பேராசிரியர் அவர்களையும், மற்றவர்களையும் அன்றைக்கு வெளியேற்றினார்கள். வெளியேற்றியது ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல; அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவே இருக்க முடியாது என்கின்ற அளவிற்கு அத்தனை பேரையும் அன்றைக்கு வெளியேற்றினார்கள்.

[கலைஞர் மு. கருணாநிதி][2007 அக்டோபர் 19

முற்பகல் 11-50

இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கோ அல்லது காங்கிரஸ் ஆட்சிக்கோ ஒரு மாநிலத்தை ஆளும்போது எதிர்க்கட்சிகளைப் பழி வாங்குகின்ற இத்தகைய எண்ணம் என்றைக்கும் இருந்ததில்லை. நான் காங்கிரசையும் சேர்த்துச் சொல்கிறேன். பக்தவத்சலம் ஆட்சியிலே என்னைக்கூட கைது செய்து பாளையங்கோட்டையில் பிடித்துப் போட்டார்கள். அது வேறு. ஆனால், அதே பக்தவத்சலம் அவர்கள், என்னுடைய சொந்த ஊர் திருக்குவளையில் என்னுடைய தாயார் பெயரால் ஒரு தாய்-சேய் நல விடுதி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டபோது, அங்குள்ள காங்கிரஸ்காரர்கள் சில பேர் வேண்டாம் என்று முணுமுணுத்தாலும்கூட, "இல்லை, இல்லை; எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி பிறந்த ஊர்; அந்த ஊரைப் பார்க்க வேண்டும்; வந்தே தீருவேன்" என்று வந்து, அந்தத் திறப்பு விழாவை நடத்திக் கொடுத்தார். அப்படிப்பட்ட ஒரு நாகரிகமான அரசியல் தொடர்பு, இங்கே தமிழகத்திலே உள்ள காங்கிரசாக இருந்தாலும், கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், இன்றைக்குக்கூட பாட்டாளி மக்கள் கட்சியாக இருந்தாலும்—இன்றைக்கு அடித்துக்கொள்வோம்; நாளைக்குச் சேர்ந்துகொள்வோம். இன்றையதினம் ஒருவரையொருவர் தாக்கிப் பேசுவோம்; ஒருவருக்கொருவர் அறிக்கை விடுவோம்; ஒருவருக்கொருவர் போர்க் குரல் கொடுப்போம்; நாளையதினம் பார்த்தால், கட்டித் தழுவிக்கொள்வோம். காரணம், அந்த நாகரிக முதிர்ச்சி; அந்தப் பண்பாடு. இது எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறது. எல்லாக் கட்சிகளிலும் என்பதற்குப் பதிலாக, ஒரு கட்சியோ அல்லது இரண்டு கட்சியோ மன்னித்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட, இந்தவொரு பண்பாட்டை நாம் காப்பாற்றும் நிலையில் இருக்கின்றோம். அந்தப் பண்பாடு நம்முடைய இதயத்திலே மலர்ந்து இருக்கின்ற காரணத்தால்தான், இதுபோன்ற சம்பவங்களில் நேற்றையதினம் நடந்ததுபோல அவைத் தலைவரையே அவமானப்படுத்துகின்ற அளவுக்கு ஒரு காரியத்தைச் செய்கின்ற துணிவு ஏற்பட்டிருப்பதை நாம் காண முடிந்தது. அதை அனுமதிக்கலாமா என்கின்ற கேள்வி இன்றைக்கு எழுந்திருக்கின்றது. சில பேர் என்ன ஆகிவிட்டது; எதற்காக ஸ்டாலின் உரிமைப் பிரச்சினை கொடுக்க வேண்டும் என்று, இங்கு வராதவர்கள் கனடாவிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ அறிக்கை



2007 அக்டோபர் 19] [கலைஞர் மு. கருணாநிதி]

விடுகிறார்கள். என்ன செய்வது? பாவம், ஜனநாயகம் படும்பாடு அது.

இதே உரிமைப் பிரச்சினை, கடந்த ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் என்மீது, நான் இந்த அவைக்கு வராமல் இருந்தாலும்கூட, வெளியிலே நான் பேசிய பேச்சுக்களுக்காக இதே அவையிலே பல முறை கொண்டு வரப்பட்டது. நான் பட்ஜெட்டைப் பற்றிச் சொன்னேன். அ.தி.மு.க.வினுடைய பட்ஜெட்டைப் பற்றிச் சொன்னேன் வெளியிலே, ஒரு கூட்டத்திலே. "ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்; உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்." இது ஒரு சாதாரணப் பழமொழி. இதைக்கூட அந்த அம்மையார் எடுத்து வைத்துக்கொண்டு, இப்படியெல்லாம் பேசுகிறார் என்று அவர் சொல்ல, உடனே அன்றைக்கிருந்த சந்தானம் அவர்கள், அதற்குப் பக்கப் பாட்டுப் பாட, "இதிலே என்ன இருக்கிறது? இதிலே எப்படி நீங்கள் உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம்?" என்று நம்முடைய ஹேமச்சந்திரன் கேட்க, உடனே அப்போதைய சபாநாயகர் சொன்னார்: "இப்போது என்ன கருணாநிதியைத் தூக்கு மேடைக்கா அனுப்பப் போகிறோம்? ஏன் இப்படிப் பதைக்கிறீர்கள், துடிக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதாவது, தூக்கு மேடை அவர்களுக்கு அவ்வளவு சுலபமாக ஆகிவிட்டது! "தூக்கு மேடைக்கா அனுப்பப் போகிறோம்?" என்று, அன்றைக்கு அந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தே தீரவேண்டும் என்று கொண்டு வந்து, பிறகு அந்த உரிமைப் பிரச்சினை விவாதிக்கப்பட்டு, நடுவிலே ஆட்சி மாறிவிட்ட காரணத்தால் அதனுடைய முடிவு என்னைத் தொடவில்லை. அதற்கிடையிலே, ஸ்டாலின் பேசும்போது சுட்டிக்காட்டியதைப்போல, 'முரசொலி' பத்திரிகையினுடைய ஆசிரியர் திரு. செல்வம், அவர் அந்தப் பத்திரிகையில் எழுதிய காரணத்திற்காக—இங்கே உறுப்பினரும் அல்ல; அவர் இங்கே முன்னாளும் அல்ல; இந்நாளும் அல்ல. அப்படியிருந்தும்கூட, அவர் ஏதோ எழுதினார் என்று--அவர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து, அதற்காக வேலைமெனக்கெட்டு ஒரு கூண்டு செய்து, அந்தக் கூண்டை இங்கே வைத்து, அதிலே அவரை நிற்க வைத்து அழகு பார்த்தார்கள். நாங்கள் ஒன்றும் கூண்டு செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படியெல்லாம் குற்றவாளிப் பொறுப்பிலே அவர்களை நிறுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. ஆனால், இந்த அவையினுடைய மரபை, மானத்தை, பண்பாட்டை, ஜனநாயக நெறியைக் காப்பாற்றுவதற்கு நமக்கெல்லாம் கடமை உண்டா, இல்லையா என்ற கேள்விக்குத்தான் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

முற்பகல் 11-55

இன்னொருவர், அவர் சொல்லிவிட்டார்; 'இது ஜனநாயகம் அல்ல' என்று கனடாவிலிருந்து ஒரு நடிகர், நண்பர் விஜயகாந்த் அவர்கள் சொல்லிவிட்டார். பத்திரிகையிலே வந்திருக்கிறது. பத்திரிகைக்காரர்களைப் பாருங்கள். நாம் என்னதான் பத்திரிகைக்காரர்களுக்காகப் பாடுபட்டாலும், உழைத்தாலும், கொடி உயர்த்தினாலும், பத்திரிகைக்காரர்கள் பத்திரிகைக்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். (சிரிப்பு) அது வேறு விஷயம். பத்திரிகைக்காரர்களுக்குத் தமிழ்நாட்டிலே தி.மு.க. ஆட்சியிலே செய்ததைப்போல, பத்திரிகை நண்பர்களுக்கு யார் இவ்வளவு சாதனைகளைச் செய்திருக்கின்றார்கள்? எத்தனை வீடுகள், பத்திரிகைக்காரர்களுக்காகக் கட்டித் தரப்பட்டிருக்கின்றன எனத் தெரியாதா அவர்களுக்கு? தெரியும். இன்றைக்குப் பத்திரிகையின் ஆசிரியரோ, ஒரு துணை ஆசிரியரோ, ஒரு நிருபரோ இறந்துவிட்டால்கூட, அவர்களுடைய குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகை கொடுக்கின்ற ஒரே ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் என்ன செய்தாலும் அதற்கெல்லாம் நீங்கள் பாராட்டி எழுத வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நீங்கள் எங்களுக்கு நன்றி உணர்வு காட்டி எங்களைப் புகழ வேண்டும் என்று சொல்லவில்லை. உண்மையான செய்திகளை வெளியிட வேண்டும் என்றுதான் இப்போதும் சொல்கிறேன். நேற்று நடந்த செய்தியைப் பற்றி ஒன்றிரண்டு பத்திரிகைகளைத் தவிர, மற்ற பத்திரிகைகளில் எல்லாம் உண்மையில் என்ன நடந்தது என்ற செய்தி வெளிவரவில்லை என்பது எனக்கு வருத்தம்தான். நான் எந்தப் பத்திரிகை என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. அந்தந்தப் பத்திரிகைக்காரர்களுக்கே அவர்களுக்கே மனச்சாட்சி உறுத்தும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு நடந்திருக்கிறது? ஒரு சபாநாயகர்மீது ஒரு குல்லாவைத் தூக்கி எறிகின்ற அளவிற்கு, நம்முடைய நண்பர்கள் எல்லாம் சொன்னதைப் போல, கையிலே கிடைத்தது குல்லா என்பதால் அந்த அளவோடு நின்றது; வேறு ஒரு ஆயுதமாக இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? அதைக் கண்டிக்க, அதைச் சுட்டிக்காட்டி, இதெல்லாம் வருத்தம் தரக்கூடிய செயல் என்று குறிப்பிட எத்தனை பத்திரிகைக்காரர்கள் முன்வந்தார்கள் என்று பார்த்தால், உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். காரணம், நான் ஒரு கட்சியின் தலைவர் என்ற முறையிலேயல்ல; நானும் ஓர் அறுபதாண்டுக் காலமாக ஒரு





பத்திரிகைக்காரன் என்ற முறையிலே அந்தப் பத்திரிகைக்காரர்களோடு சேர்ந்து நானும் வருத்தப்படுகின்றேன்.

இங்கே நம்முடைய பீட்டர் அவர்களும், மற்ற நண்பர்களும், கட்சித் தலைவர்களும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். வை.கோ. கட்சிக்காரர்கள் நேற்று இருந்தார்கள். இன்றைக்கு இல்லை. அவர்கள் எப்பொழுது மறுமலர்ச்சி பெற்றார்கள் என்று எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு) நேற்று வெளிநடப்பில் கலந்துகொள்ளவில்லை. இன்றைக்கு அவையிலே கூட்டத்திலேயும் கலந்துகொள்ளவில்லை. இந்த இரண்டைப் பற்றியும் நமக்கு விவரம் தெரியாது. இருந்தாலும்கூட, அவர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். என்னென்ன முரண்பாடுகள் இந்த ஒரு மாத காலத்தில் நடைபெற்றிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆடம் பிரிட்ஜிலே என்ன இருந்தாலும் அதை இடித்துவிட்டுக் கால்வாயை வெட்ட வேண்டும் என்று சொன்ன தேர்தல் அறிக்கையும் இருக்கிறது; இல்லை, இல்லை, அந்தக் கால்வாயே கூடாது என்று இப்போது சொல்லப்படுகிற அறிக்கையும் இருக்கிறது. இதற்கெல்லாம் உள்ள முரண்பாட்டை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் கட்சி உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இரண்டு நாட்களாக நடைபெறுகின்ற விவாதங்களில் சொல்லப்பட்ட கருத்துகளில் எவ்வளவு கருத்துகள், எத்தனை முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இங்கே அமர்ந்து, இன்றைக்குப் பேசிய அத்தனை கட்சிகளுடைய தலைவர்களையும், பீட்டராக இருந்தாலும், நம்முடைய மணி அவர்களாக இருந்தாலும், நம்முடைய கோவிந்தசாமியாக இருந்தாலும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் சிவபுண்ணியம் அவர்களாக இருந்தாலும், செல்வம் அவர்களாக இருந்தாலும், இதில் 5, 6 பேர் சொன்ன கருத்து மாத்திரம்தான் என்று நான் சொல்லவில்லை. எல்லோரும் இந்தக் கருத்தைத்தான் எதிரொலித்திருக்கின்றீர்கள். ஆனால், இதிலே நான் கேட்டுகொள்வதெல்லாம், இவ்வளவு கருத்துகளை எடுத்துக்கூறி, இவ்வளவு வேகமாகப் பேசி, அவரை அறவே இந்த அவையிலிருந்து விலக்க வேண்டும் என்கின்ற அந்தக் கடினமான தீர்மானம் வேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். நான் அதைப் பற்றி அவை முன்னவரிடத்திலே பேசியிருக்கின்றேன். அதையெல்லாம் மனதிலே வைத்து அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வருவார் என்று நம்புகின்றேன். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

நண்பகல் *12-00*

ஒரு தண்டனை கொடுப்பது என்றால் அதையேதான் கொடுக்க வேண்டும் என்ற நிலை இல்லை. "பொன்னை வைக்க வேண்டிய இடத்திலே பூவை வை" என்று சொல்லுகிறோம். எதற்காக? பூவை வைத்தாலும், பொன் இல்லை; ஆகவே, பூவை வைக்கிறோம் என்றுதான் வைக்கிறோம். அதைப்போல, இதற்காகக் குறிக்கப்படுகின்ற தண்டனை குறைவானதாக இருந்தாலும், அந்தப் பெரிய தண்டனை கொடுக்க மனம் இல்லை; ஆகவே, இந்தத் தண்டனை கொடுத்தோம்; இருந்தாலும் தண்டனை தண்டனைதான் என்ற அந்த அளவிலே தண்டனை கொடுத்தால் போதும். அது பரிகாரமாக இருக்கும். அது எதிர்காலத்திலே இந்த அவையிலே ஜனநாயகத்தைக் காப்பாற்ற இது உதவும் என்ற அளவோடு, தீர்ப்பை நம் அத்தனை பேருடைய சார்பிலும் வழங்க வேண்டும்; அதற்குச் சபாநாயகர் அவர்களும் துணை நிற்க வேண்டும்; அவை முன்னவர் அவர்களும் அதற்கேற்றவாறு தீர்மானத்தை முன்மொழிய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்த அளவில் என்னுடைய கருத்துகளை நிறுத்திக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

## 4. அரசினர் தீர்மானம்

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது, பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி விசிய உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்களைப் பேரவைப் பணிகளினின்றும் அடுத்த கூட்டத் தொடரின் முதல் பத்து நாட்கள் வரை நீக்கிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றையதினம் *18-10-2007* அன்று அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையில் நடந்துகொண்ட விதம் குறித்து இங்கு அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் அனைவருமே நன்கு அறிவார்கள். தமிழக மக்கள் அனைவரும் தொலைக்காட்சிமூலம் அவர்களது அடாத செயல்களைத் தெரிந்துகொண்டனர். அவர்கள் செய்யும் சட்ட விரோதமான, மக்கள் விரோதமான செயல் இப்பொழுது வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அவர்களது உண்மையான சுயரூபம் வெளியே தெரிய வந்திருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் தினமும் குழப்பம் விளைவிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் சட்டமன்றத்திற்கு வந்து, சட்டமன்றத்தில் கூச்சலும், குழப்பமும்





ஏற்படுத்துகின்றனர். அவர்களது செயலை நியாயப்படுத்த, விளக்கம் அளிக்க அவர்களால் இயலாத காரணத்தால், அந்த ஆத்திரத்தில் பேரவைத் தலைவரை மிரட்டும் பாணியில் எனது இருக்கைக்கு அருகே வந்து உட்கார்ந்துகொண்டு அவை நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் குந்தகம் விளைவிக்கிறார்கள். அவை மரபுக்கு மாறாக நேற்றையதினம் ஓர் உறுப்பினர் அவைக் காவலர் ஒருவரின் தொப்பியை எடுத்து என் இருக்கையை நோக்கி வீசி எறிந்துள்ளார். எனது மேசையைத் தள்ளியுள்ளார். இது சம்பந்தமாக ஒளி நாடாவை நானும் பார்த்தேன், எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் பார்த்தனர். அந்த ஒளி நாடாவில் திரு. ஏ.கே. போஸ் சட்டமன்ற உறுப்பினர் தொப்பியைப் பேரவைத் தலைவரின்மீது வீசும் நிகழ்ச்சி பதிவாகி உள்ளது. சட்டமன்றம் என்பது, மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட ஓர் அவை. இந்த அவைக்குப் பிரதிநிதியாகவும், பாதுகாவலராகவும் பேரவைத் தலைவர் உள்ளார். பேரவைத் தலைவர், பேரவையின் மதிப்பினையும், இறையாண்மையையும், மாண்பினையும் காக்கும் பொறுப்புள்ளவர். சட்டமன்றப் பேர்வையைப் பேரவை விதிகளுக்கு உட்பட்டு நடத்திச் செல்வதுதான் பேரவைத் தலைவரின் தலையாய கடமையாகும். சட்டமன்றத்தின் அமைதியையும், ஒழுக்கத்தையும் நிலைநிறுத்தி, அவையின் சிறப்பு உரிமைகளைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு அவருக்கு உண்டு. சுமுகமாக அவையை நடத்திச் செல்ல வேண்டிய ஒரு பெரும் பொறுப்பும் பேரவைத் தலைவரையே சாரும். பேரவைத் தலைவராகிய என்னுடைய பதவிக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், இறையாண்மைக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும் ஓர் உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் நேற்று அவையிலே செயல்பட்டுள்ளார். இதுபோன்ற செயல்கள் தடுக்கப்படாவிட்டால் ஜனநாயகத்தின் முக்கியத் தூணாக விளங்கும் சட்டமன்றத்தின் தரம் பொது மக்கள் மத்தியில் மிகவும் தாழ்ந்துவிடும். எனவே, இதுபோன்ற செயல்கள் தடுக்கப்பட வேண்டியவையும், தண்டிக்கப்பட வேண்டியவையும் ஆகும். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. கோவிந்தசாமி அவர்கள், திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் மற்றும் திரு. கு. செல்வம் ஆகியோர் நேற்றைய சம்பவம் குறித்து தங்களது உணர்வுகளை மிகத் தெளிவாக அவையில் எடுத்துக் கூறினார்கள். அவர்களது உணர்வுகளோடு எனது உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். எனவே, பேரவைத் தலைவரின் பதவிக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் செயல்பட்ட திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்

அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் தீர்மானத்தை முன்மொழிய வேண்டும் என்று பேரவை முன்னவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தினுடைய மாண்புகளைக் காப்பாற்றுவதற்காகவும், உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், முறைகேடுகளைத் தடுப்பதற்காகவும், சபாநாயகருடைய தகுதியைக் குறைக்கிற முறையில் நடந்துகொள்வதை நிறுத்துவதற்காகவும், குறிப்பாக நம்முடைய கண்ணியத்தை உயர்த்திக்கொள்வதற்காக நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிய இருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தில் ஏற்கெனவே எழுதப்பட்ட வாசகங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த ஆலோசனையின் அடிப்படையில் ஒரு சிறு மாற்றத்தோடு நான் வழங்க இருக்கிறேன். உரிமைப் பிரச்சினையைப் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் சொல்கிறபோது, ஒரு கருத்து என்னுடைய மனதில் மிக ஆழமாகப் பதிந்த கருத்து, இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்றுவதுதான் இந்த உரிமைப் பிரச்சினை என்பது. அவையினுடைய உரிமையைக் காப்பாற்றுவதற்கு, அவையினுடைய அமைச்சராக இருந்தாலும், அவையிலே உறுப்பினராக இருந்தாலும், அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றுவதும், அவையினுடைய உரிமையைக் காப்பாற்றுவது ஆகும். இந்த அவை அரசியலமைப்புச் சட்டப்படி முழு இறையாண்மை உள்ள ஓர் அவை. அரசியலமைப்புச் சட்டத்திலே முழு இறையாண்மை இந்த அவைக்கு வழங்கியிருப்பதே ஜனநாயகத்தினுடைய நிறைவுக்கு அடிப்படையான தேவை என்பதாலேதான். இந்த முழு இறையாண்மை உள்ள மாநிலச் சட்டமன்றம், முழு இறையாண்மை உள்ள மத்தியச் சட்டமன்றங்கள் ஆகிய இந்தச் சட்டமன்றங்கள் பெற்றுள்ள அந்த இறையாண்மைகளுக்கிடையில் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதற்கான அரசியலமைப்புச் சட்ட வரம்புகளைப் பெற்று, அந்த அடிப்படையிலே இயங்குகின்றன. இந்த இறையாண்மையைத் தவிர்த்து, நீதிமன்றத்தினுடைய இறையாண்மை என்பதும் தனித்திருக்கிறது. நீதிமன்றம், சட்டமன்றம், நிருவாகம் என்ற மூன்று பிரிவுகளில் முழு இறையாண்மைகொண்டது சட்டமன்றம்தான். நீதிமன்றத்தைவிட சட்டமன்றத்தினுடைய இறையாண்மைதான் உலகத்திலே மிகப் பெரிதாக மதிக்கப்படுகிறது. நீதிமன்றமேகூட பல நாடுகளில் சட்டமன்றத்தால் நியமிக்கப்படுகிற, அமர்த்தப்படுகிற



நீதிமன்றங்களாகத்தான் இயங்குகின்றன. எனவே, இந்த இறையாண்மை என்பது மக்களுடைய உரிமையைக் காப்பாற்றுகிற முறை. அந்த மக்களுடைய உரிமையைக் காப்பாற்றுகிறவர்கள்தான் இங்கே உள்ள பிரதிநிதிகள்; இங்கே உள்ள உறுப்பினர்கள். ஆகவே, இந்த உறுப்பினர்களுடைய செயல்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிப்பது, தடை விளைவிப்பது, குறை ஏற்படுத்துவது எதுவாக இருந்தாலும் அது நடவடிக்கைக்கு உரியது. ஏனென்றால், இந்த அவையின் இறையாண்மை என்பது இந்த உரிமையைப் பாதுகாப்பதன் மூலமாகக் காப்பாற்றப்படுகிறது. அந்த அடிப்படையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன், வெளியிலே இருக்கிற, யார் செய்கிற எந்தச் செயலாக இருந்தாலும், எந்தக் கருத்தாக இருந்தாலும் நேரடியாக இந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்குமானால் நமக்கு நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு. அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத்தான் இருக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட திரு. செல்வம் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டபோது, செல்வத்தை அவைக்கு இழுக்கக்கூடிய அந்தச் சட்டம் பயன்படுத்தாமல், முறைகேடாகப் பயன்படுத்தாமல் இருந்திருக்க வேண்டுமே தவிர, பயன்படுத்துவதாக இருந்தால், சட்டமன்றத்தினுடைய அந்த அதிகாரத்திற்கு, உரிமைக்கு உட்பட்டதுதான். எனவே, அந்த முறையில் இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமையைப் பாதிக்கின்ற காரியங்கள் தொடர்ந்து இங்கே நடைபெற்ற காரணத்தினாலேதான், அந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொன்னதுபோல, 1986 ஆவது ஆண்டு நானும், கழகத்தைச் சார்ந்த 9 பேர்களும்—10 சட்டமன்ற உறுப்பினர்களும்—இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து அந்தச் சட்டமன்றக் காலம் முடிகிற வரையில் "உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறார்கள், உறுப்பினர் தகுதியை இழக்கிறார்கள்" என்று இங்கே தீர்மானம் வந்தது. ஆனால், நான் இந்த அவையை அவமதிக்கவில்லை, அவமதிக்கிற செயல் எதுவும் நடைபெறவில்லை. இந்த அவையினுடைய முறைக்கு மாறாகவும் நான் நடந்துகொள்ளவில்லை. ஆனால், உண்மையில் நான் என்னுடைய தலைவர் என்று போற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் எதைச் செய்தார்களோ, அதைத்தான் நான் செய்தேன். அண்ணாவினுடைய பெயரை வைத்துக் கட்சி நடத்தியவர்கள்தான், அண்ணாவினுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு என்னை நீக்கினார்கள். அண்ணா

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 அக்டோபர் 19

அவர்கள் எந்தச் சட்டப் பிரிவைக் கொளுத்தி அதற்காகச் சிறை சென்றார்களோ, எதற்காக முன்கூட்டியே கைது செய்யப்பட்டுச் சிறையிலே வைக்கப்பட்டார்களோ, அதே காரியம்தான் அன்றைக்கு நடைபெற்றது. அதைக் குறித்து இங்கே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டதற்குக் கூறிய காரணத்தால், அவருடைய உணர்வை நான் மதிக்கிறேன்; இந்தச் சட்டமன்றத்திற்குள்ள உரிமைகளை நிலைநாட்டுகிற முறையிலே அவர்கள் அதை எடுத்துச் சொன்னதிலே தவறில்லை. ஆனால், நான் பாதிக்கப்பட்ட முறை, சட்டமன்ற உரிமையை நான் பாதித்த காரணத்தினாலே, நான் பாதிக்கப்படவில்லை. இந்த உரிமை மீறல் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டது—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் இந்த உரிமை மீறல் பிரச்சினைத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டது—அவை உரிமை என்பதைவிடக் கடுமையான ஒரு பிரச்சினை. வெறும் உரிமை மீறல் பிரச்சினை அல்ல. இது கிரிமினல் குற்றம். ஒருவரைக் குற்றவாளியாகவே பேசுவது, குற்றஞ்செய்யத் தூண்டுகிறவராகப் பேசுவது, கொலை செய்யத் தூண்டுவதாகப் பேசுவது, கொலை செய்யச் சதி செய்ததாகப் பேசுவது, இதைவிடக் கடுமையான குற்றம் உலகத்திலே வேறு எதுவும் இருக்க முடியாது. கொலையே செய்துவிடலாம். அதைவிட இது மிகப் பெரிய குற்றம். ஆகவே, இந்த மிகப் பெரிய குற்றம், சட்டமன்றத்தில் அமைச்சராக இருக்கிறவரோடு, முதலமைச்சராக இருக்கிறவரையும் இணைத்துப் பேசப்பட்ட காரணத்தால், இது பற்றிய உண்மை முதலில் நாட்டிற்கு விளக்கப்பட வேண்டுமென்கிற முறையில் வந்த உரிமைப் பிரச்சினை இது. இந்த அவையிலே உள்ளவர்களுடைய பாதுகாப்புக்கு என்பதற்காக மட்டுமல்ல; இந்த அவையிலே உள்ளவர்கள்மீது பேசப்படுகிற அவதூறுக்கு ஓர் எல்லை கட்ட வேண்டும்; ஒரு வரம்பு விதிக்க வேண்டும்; தடுக்க வேண்டும்; அது குற்றம் என்பது உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்பதற்காக. ஆகவே, அந்த முறையிலே கொண்டு வரப்பட்ட அந்த உரிமைப் பிரச்சினை என்பது எல்லா வகையிலேயும் இந்த அவையினுடைய கண்ணியத்தைக் காக்க அவசியமான ஒன்று என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி வந்தபோது இந்தச் சட்டமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை வைத்து இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்:

*பிற்பகல் 12-10*

"18-10-2007 அன்று காலை சட்டப் பேரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஓர் உரிமை மீறல் பிரச்சினைமீது இங்கே பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவையில் இருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக எழுந்து பயங்கரமாகக் கூச்சலும், குழப்பமும் விளைவித்து, அவரைப் பேசவிடாமல், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக்கொண்டிருந்தார்கள். மேலும், அவர்கள் அனைவரும் தங்களது இருக்கைகளை விட்டுக் கும்பலாக எழுந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கையின் முன்பு தரையில் அமர்ந்து, கண்ணியக் குறைவாக நடந்துகொண்டார்கள். பேரவைத் தலைவர் பல முறை அவர்களது இருக்கைகளுக்குத் திரும்புமாறு வற்புறுத்திக் கேட்டும், அவர்கள் தங்களது இருக்கைகளுக்குத் திரும்பாத காரணத்தினால், பேரவைத் தலைவர், அவைக் காவலர்களை அழைத்து அவர்களை வெளியேற்ற உத்தரவிட்டார். அப்போது மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், தன்னை அப்புறப்படுத்த வந்த காவலர் திரு. பி. மதிவாணனின் தொப்பியினைப் பிடுங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர்மீது வெறித்தனமாகத் தூக்கி எறிந்ததை, இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நேரில் கண்டனர். தொப்பியைத் தூக்கி எறிந்தது மட்டும் குற்றச்சாட்டு அல்ல. காவலரின் தொப்பியைக் கழற்றியது அதைவிடப் பெரிய குற்றம். காவலருடைய தொப்பியைக் கழற்றுவது, காவலருடைய கையிலே இருக்கிற தடியைப் பிடுங்குவது, அப்படி எந்த நிகழ்ச்சி நடைபெற்றாலும் அது காவலர்களைத் தாக்கிய நிகழ்ச்சியாகத்தான் சட்டப்படிக் கருதப்படும். அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து தொப்பி தங்கள்மீது வீசப்பட்டது.



2007 அக்டோபர் 19] [பேராசிரியர் க. அன்பழகன்]

இந்த நிகழ்ச்சி பேரவைத் தலைவரை மிரட்டுவதாகவும், அவமதிப்பு செய்வதாக இருந்ததையும் சபையில் இருந்த அனைத்து உறுப்பினர்களும்—இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்தனர்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை நான் சேர்க்க விரும்புகிறேன்.

"பேரவைத் தலைவர் மட்டும் insult செய்யப்பட்டவர் அல்ல. பேரவைத் தலைவரை insult செய்வது பேரவையையே அவமதிப்பது. ஜனநாயகத்தை அவமதிப்பதிலே பேரவையை அவமதிப்பதுதான் மிகப் பெரிய அவமதிப்பு. எனவே, அப்படிப் பேரவையை அவமதித்ததற்கு அடையாளமாகத் தாங்கள் அவமதிக்கப்பட்டீர்கள்.

சட்டசபையின் நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்களுடைய பாதுகாப்பிற்கும் பொறுப்பேற்று இருக்கக்கூடிய அரசியல் சாசன சட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற மாண்புமிகு பேரவைத் தலைவருக்கே இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற சூழ்நிலை-அவமதிக்கப்படுகிற சூழ்நிலை-உருவாவதற்குக் காரணமாக இருந்த திரு. ஏ.கே. போஸ் அவர்களின் நடவடிக்கைகள் இந்த அவையின் மதிப்பையும், அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்க வேண்டிய மதிப்பையும் தாழ்த்தி, இந்திய அரசியல் சட்டத்தின் கண்ணியத்தையும், இந்த அவையின் கண்ணியத்தையும் குறைக்கும் செயலாக அமைந்துள்ளதாலும், மேலும் இந்த நடத்தை, உறுப்பினரின் தரத்திற்கும், தகுதிக்கும் ஒவ்வாததாக இருப்பதாலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினருடைய நடத்தையால், அவர் இந்த அவையின் உறுப்பினராக இருப்பதற்கான அருகதை இழந்துவிட்டார் என்றே இப்பேரவை கருதுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

தகுதி-right. அந்த உரிமை இருக்கிறதே, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவையினுடைய உறுப்பினராக உள்ள அந்த உரிமையை இழந்துவிட்டார் என்று இப்பேரவை கருதுகிறது. திரு. ஏ.கே. போஸ் அவர்களுடைய கண்ணியக் குறைவான, முறையற்ற இந்தச் செயல், இந்த அவையின் மாண்பைக் குறைத்து, இந்த அவையின் செயல்பாடுகள்மீது மக்களுக்கு இருக்கும் மதிப்பையும், நம்பிக்கையையும் குறைக்கும் என்று இந்த அவை கருதுகிறது. சபையின் கண்ணியத்திற்கும், மரபுகளுக்கும், பாராளுமன்ற ஜனநாயகப் பண்பாட்டிற்கும் விரோதமாக அமைந்திருக்கும் இம்மாதிரியான நடவடிக்கைகள் தொடர இந்த அவை அனுமதித்தால் பாராளுமன்ற ஜனநாயகத்தின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும் என்று இச்சபை அஞ்சுகிறது.

எனவே, திரு. ஏ.கே. போஸ் அவர்களின் கண்ணியக் குறைவான நடவடிக்கைக்குத் தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்று இந்த அவை தீர்மானித்துள்ளதால், அவரை இந்த அவையிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினரின் செயல்பாடுகள் அனைத்திலிருந்தும், இந்தத் தீர்மானத்திலே முதலில் எழுதப்பட்டுள்ளவாறு ஆறு மாதங்கள் நீக்கி வைக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக, தலைவர் கலைஞர் அவர்கள் ஆலோசனை வழங்கிய அந்த அடிப்படையில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 'ஆறு மாதங்கள்' என்பதற்குப் பதிலாக 'அடுத்த சட்டமன்றத் தொடர் தொடங்கி முதல் 10 நாட்கள் வரை' என்று அதைக் குறைத்துக்கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். இந்த இடைநீக்க காலத்தில் திரு. ஏ.கே. போஸ் சட்டமன்ற உறுப்பினருக்காக





ஙகப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், ுகைகளையும், தகுதிகளையும் அவர் பெற முடியாது என்றும் இந்த வை தீர்மானிக்கிறது"

ன்னும் இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் வர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. றுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பொட்டல் கிராமத்தில் கோயில் மண்டபம் இடிந்து, மரணமுற்றோர் மற்றும் காயமுற்றோர் குடும்பத்தினருக்கு நிதியுதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. Veldurai, என்ன? (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், ஒவ்வொருவராகக் ப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு) ரு. தி. வேல்முருகன், உட்காருங்கள். திரு. பா. வேல்துரை சால்லிவிடட்டும். (குறுக்கீடு) நான் கூப்பிடுகிறேன், உட்காருங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, என்னுடைய தொகுதியிலே கடந்த 14-10-2007 அன்று பாட்டல் என்ற கிராமத்திலே கோயிலுக்கு மண்டபம் ட்டிக்கொண்டிருந்த நேரத்தில் மண்டபம் இடிந்து விழுந்து, நான்கு பர் உயிரிழந்துவிட்டார்கள்; மூன்று பேர் கடுமையாகக் ாயமடைந்துள்ளார்கள். மேலும் 8 பேர் இலேசான காயமுற்று சிகிச்சை பற்றுத் திரும்பியிருக்கிறார்கள். இறந்து போன நான்கு பேர்களில்

முருகன் என்பவர் பஞ்சாயத்துத் தலைவர்; அவருக்கு வயது 35. சக்திவேல் என்பவருக்கு 17 வயது. இந்த இரண்டு பேர்களும் பொட்டலைச் சேர்ந்தவர்கள். ஆதிமூலப் பெருமாள் என்ற கண்ணன் என்பவர் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர்; சுப்பு என்பவர் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்தவர். இந்த நான்கு பேர்களுமே வயதில் குறைந்தவர்கள். அவர்களுடைய குடும்பத்தார் இன்றைக்குப் பிள்ளைகளோடு, வருமானம் ஏதுமின்றி மிகுந்த கஷ்டமான சூழ்நிலையிலே இருக்கிறார்கள். நான் நேரடியாகச் சென்று பார்த்தேன். பார்த்தபோது, எப்படியாவது அவர்களுக்கு நஷ்ட ஈடு வாங்கித் தாருங்கள் என்று சொன்னார்கள். நமது முதல்வர் அவர்களிடத்திலே நான் சொல்லி, உங்களுக்கு நஷ்ட ஈடு பெற்றுத் தருகிறேன் என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு மனிதனுக்குக் கஷ்டம் என்று வந்தால், அதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, எந்த அளவிற்கு உதவி செய்வார்கள் என்பது இந்த மன்றத்திலே இருப்பவர்கள் அனைவருக்கும் தெரியும். அந்த நம்பிக்கையிலே, நான் ஊர் மக்களிடத்திலே கண்டிப்பாக உங்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுத் தருவேன் என்று சொன்னேன். அவர்களுடைய மனைவிமார்களுக்கெல்லாம் 30 வயது, 28 வயதுதான் ஆகின்றது; இளம் வயதிலேயே விதவைகளாகி விட்டார்கள். குழந்தைகள் எல்லாம் சின்ன சின்ன பிள்ளைகள்; 2 வயது, 3 வயதுதான் ஆகின்றது. எனவே, குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற சூழ்நிலை இல்லை; உழைப்பவன் இறந்துவிட்டான். எனவே, நீங்கள் கண்டிப்பாக அந்தக் குடும்பங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாயாவது நஷ்ட ஈடாகத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அதிலே அதிகமாகக் காயம்பட்டவர்களுக்கும் 25 ஆயிரம் ரூபாயையாவது நீங்கள் வழங்க வேண்டும். கண்டிப்பாக நீங்கள் வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டீர்கள் இல்லையா? உட்காருங்கள்.

**திரு. பா. வேல்துரை:** எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்த ஏழைப் பெண்களுக்கு ஏதாவது ஒரு வேலை போட்டுக் கொடுத்தால், அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பி, நான் அமர்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இந்த நிகழ்வினை ஏற்கெனவே எனக்கு அவர் நினைவூட்டியிருக்கிறார்; நிச்சயமாக உரிய உதவி வழங்கப்படும். குடும்பங்களுக்கு வழக்கமாகத் தரப்படுகின்ற குடும்ப நல நிதி வழங்கப்படும் என்பதையும், காயம்பட்டவர்களுக்கு சிகிச்சைக்கான செலவுத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் 2 இலட்சம் ரூபாய் என்று கேட்டார். வழக்கமாக ஒரு இலட்சம் ரூபாய்தான் தருவது. அவர் அவையிலே கேட்ட காரணத்தினால், அவர் கேட்ட 2 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் என்பது, ஒரு தெய்வம் கொடுத்ததைப்போன்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட காரியத்தைச் செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### (இ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

*பிற்பகல் 12-20*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மிக முக்கியமான ஒரு பிரச்சினையை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் 1957-ல் என்.எல்.சி. நிறுவனம் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய முயற்சியால் அன்றைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களால் கொண்டு வரப்பட்ட நிறுவனம். அது இன்று வரையில்

45,000 ஏக்கர் விவசாய நிலங்களையும், வீடுகளையும் கையகப்படுத்தி, ஆண்டு ஒன்றிற்கு 1,240 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகிற ஒரு மிகப் பெரிய நிறுவனமாகவும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய குடும்பங்களை வாழ வைக்கின்ற ஒரு நிறுவனமாகவும் இருந்து வருகிறது. அந்நிறுவனம் கடந்த சில வாரங்களுக்கு முன்பு 69 கிராம மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கையகப்படுத்தி, நிலக்கரி வெட்டியெடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகத் தகவல் வருகிறது. அதிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புவது, 50 ஆண்டுக் காலமாக அந்த நில எடுப்புச் சட்டத்தை, அதாவது தொழிற்சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்துதல் என்கிற ஒரு சட்டத்தைப் பயன்படுத்தி என்.எல்.சி. நிருவாகம் நம்முடைய அரசு மூலமாக நிலத்தைக் கையகப்படுத்தி வருகிறது. மற்ற மாநிலங்களில் அந்தச் சட்டம் இல்லை. Coal Bearing Act என்கிற அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நிலம் கையகப்படுத்தப்பட்டு அதற்கு ஈடான தொகை அங்கு வழங்கப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு ஒரு ஏக்கரில் 30 கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகிற அந்த நிறுவனம் அதில் ஒரு சதவிகிதத் தொகையை, அதாவது 30 இலட்சம் ரூபாயை ஏக்கருக்கு வழங்க மறுக்கிறது. கிட்டத்தட்ட 17,000 ஒப்பந்தத் தொழிலாளர்களும், 3,000 Apprentice முடித்தவர்களும் பணி வேண்டி பல போராட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் தொடர்ந்து அங்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள சுற்று வட்டாரக் கிராம மக்கள் என்.எல்.சி.-யினுடைய மருத்துவமனைக்குப் பிரசவத்திற்குச் சென்றால்கூட 6,000 ரூபாய் பணத்தைக் கட்டினால்தான் அவர்களுக்கு ஊசி போடவும் மருத்துவம் பார்க்கவும் முடியும் என்கிற ஓர் அவல நிலை உள்ளது. சுற்று வட்டார மக்களுக்கான குடிநீர் வசதி, விவசாயிகளுக்குத் தர வேண்டிய விவசாய நீர் என்கிற அனைத்தும் அங்கு மறுக்கப்பட்டு, என்.எல்.சி. என்பது ஏதோ ஒரு தனி மாநிலத்தில் ஒரு தனி சர்வாதிகாரம் பெற்ற ஒரு நிறுவனமாக இயங்கிக்கொண்டு வருகிறது. அந்த நிறுவனம் அந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளையும், மக்களுக்கான நியாயமான கோரிக்கைகளையும், நிலம் கொடுக்கிறவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வேலைவாய்ப்பையும் தர மறுப்பதையும், அந்த நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையைத் தர மறுப்பதையும் குறித்துக் கடந்த காலக் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை நான் ஈர்த்தபோது, "நிச்சயமாக என்.எல்.சி. அதிபர்களையும், இயக்குநர்களையும் அழைத்து நான் பேசி





ஒரு நல்ல முடிவை எடுப்பேன்" என்று முதலமைச்சர் அவர்கள் உறுதி தந்தார்கள்.

அதன் அடிப்படையில் கடந்த 14 ஆம் தேதி நம் தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் தலைமையில் அனைத்துத் துறை சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களின் கூட்டம் நடத்தி, கடலூர் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களையும் அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்த பிறகுதான், 16 ஆம் தேதி எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களின் தலைமையில் ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி மாபெரும் ஒரு போராட்டத்தை நாங்கள் நடத்துவதற்கு முயற்சித்தோம். ஆனால் முதலமைச்சர் அவர்கள், அந்த அறிவிப்பை ஏற்று அவர் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி அங்கு போராட்டம் நடத்தினால் என்.எல்.சி.-யைப் பாதுகாப்பதற்கு முடியாது; அதனால், காவல் துறையிலிருந்து அன்றைக்கு 6 மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள், 2 டி.ஐ.ஜி.-க்கள், 10,000 காவலர்கள், ஒரு ஐ.ஜி. என்று பாதுகாப்பிற்கு நியமிக்கப்பட்டனர். அந்த மிகப் பெரிய போராட்டத்தை, முதலமைச்சருடைய முயற்சிக்குப் பின்பாக நாங்கள் குறைத்துக்கொண்டு ஓர் அடையாளப் போராட்டமாக எங்கள் அய்யா அவர்கள் அன்றைக்கு நடத்தி முடித்திருக்கிறார். எங்கள் அய்யா அவர்களும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

அந்த என்.எல்.சி.க்கு நிலம் கொடுத்த மக்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலையும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்பும், Apprentice முடித்தவர்களுக்கான வேலைவாய்ப்பும், சுற்று வட்டாரக் கிராம மக்களுடைய வாழ்வியல் ஆதாரம் பாதிக்கப்படாமல் அந்த என்.எல்.சி. நிருவாகம் இந்த நிவாரணங்களையெல்லாம் வழங்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை தம்முடைய நேரடிப் பார்வையில், நம்முடைய என்.எல்.சி. அதிபர்களை அழைத்து—மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் அவர்களை எங்கள் மருத்துவர் சின்னய்யா அவர்களோடு டெல்லியில் நாங்கள் அழைத்துப் பேசியபோதுகூட, 'செய்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால், செய்ய மறுக்கிறார்கள். தாசரி நாராயண ராவ் அவர்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கடைக்கண் பார்வையின்பேரில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** எதையும் செய்யக்கூடிய ஒரு நண்பர் என்று தெரிய வருகிறது. அந்த அடிப்படையில் மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். என்.எல்.சி. மக்களுக்காகப் பல்வேறு போராட்டங்கள் தினம் தினம் நடந்துகொண்டிருக்கின்றன. அப்படி நடைபெற்றபோதெல்லாம் பாதுகாப்புக் கொடுப்பதும், பேச்சுவார்த்தை நடத்துவதும் தமிழக அரசுக்கு மிகப் பெரிய தலைவலியாக இருக்கிறது. ஆகவே, 1894 ஆம் ஆண்டின் Industrial Act என்ற அந்தச் சட்டத்தின்மூலமாக நிலம் எடுக்கிற சட்ட ஆணையை இரத்துச் செய்துவிட்டு, மத்திய நிலக்கரித் துறையினுடைய நில எடுப்புச் சட்டம்—Coal Bearing Act-ன் பிரகாரம் நிலத்தைக் கையகப்படுத்தி, அதற்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கும், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருவதற்கும், சுற்று வட்டாரத்திலுள்ள அந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்குக் குடிநீர், சாலை வசதி என்கிற அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், மருத்துவ வசதிகளைப் பெற்றுத் தருவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் என்னுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக நீண்ட நேரம் ஒரு நிகழ்வை இங்கே கோர்வையாகச் சொன்னார். இவ்வளவு நேரம் பேசிய பிறகு என்னுடைய கவனம் ஈர்க்கப்படாமல் இருக்க முடியாது, கவனம் ஈர்க்கப்பட்டிருக்கிறது. கவனிக்கப்படும்; நிச்சயமாக அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். நேரமாகிவிட்டது.



பிற்பகல் 12-25

# 5. அறிக்கைகள் அளித்தல்

## (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. Guillotine நேரம் வந்துவிடும். (குறுக்கீடுகள்) No, No, Not allowed. உட்காருங்கள். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, (குறுக்கீடுகள்) பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) காலையிலே பேசிவிட்டோம். திரு. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. கரி. இராமசாமி, (குறுக்கீடு) உங்களைக் குழுவின் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தைந்தாவது முதல் அறுபத்தேழாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தேழாவது முதல் அறுபத்தொன்றாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007-2008, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007-2008 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendations for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2007-2008."

## 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2007-2008, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழிதல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 18-10-2007 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 23, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், காங்கேயம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம்



கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 55, திரு. கு. செல்வம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 118, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 136, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை உயர் நீதிமன்றத்தில் சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யக் கூடுதல் நடுவர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 191, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையிலுள்ள அரசு நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 270, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 82, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதி, திருமயம் ஒன்றியம், பி. அனகாபுரி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,05,80,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,05,00,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 206, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 226, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி நகராட்சிப் பகுதிகளில் எரிவாயு அடுப்புகள் உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,00,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10, திரு. இரா. இராம்பிரபு.

பிற்பகல் 12-30

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் புதிதாகக் குடும்ப அட்டைகள் வேண்டி விண்ணப்பம் செய்தவர்களுக்கு விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,00,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 40, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 253, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 243, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலவச கேஸ் அடுப்பு வழங்கும் திட்டத்தில் குடும்ப அட்டை இருந்தும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு இலவச எரிவாயு அடுப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,00,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 238, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தில் ஒரு தொகுதிக்கு 10 ரேஷன் கடைகளுக்கு மட்டும் முதல் கட்டமாக வழங்குவதால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.60,00,01,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,00,00,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

2007-2008 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதமும், பதிலுரையும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானமும், மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

பேரவை விதி 189 (3)-ன்படி இன்று விவாதமும், பதிலுரையும் சரியாக 1-30 மணிக்கு முடிந்து வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதை உறுப்பினர்கள் மனதில் கொண்டு, சுருக்கமாகப் பேசும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சி.க. ராஜேந்திரன் அவர்கள். பத்து நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இம்மாமன்றத்தில் அமர்ந்து, தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் அருந்தொண்டாற்றி, வாழ்ந்த காலத்தை வரலாறாக்கிய பெருந்தலைவர்களைக் கண்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் பொன் விழாக் கண்டு, தமிழ் மொழிக்கும், தமிழக மக்களுக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் மற்றும் உறுப்பினர்களையும் வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நடந்து முடிந்த மதுரை மேற்குத் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக எனக்கு வாய்ப்பளித்த தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டணிக் கட்சியின் வேட்பாளர் என்று எண்ணாமல் கூட்டணி தர்மத்தின் அடிப்படையில் தன்னுடைய வயதையும், உடல் நலத்தையும் பற்றிக்கூட கவலைப்படாமல், தேர்தல் களத்தில் பல்வேறு பணிகளுக்கிடையேயும் தனது அமைச்சரவை சகாக்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், இயக்கத்தின் அனைத்துப் பிரிவுத் தலைவர்களையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கேற்க வைத்த



முதுபெரும் தலைவர், முத்தமிழறிஞர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மத்திய அமைச்சர், மக்கள் தளபதி ஜி.கே. வாசன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவரின் அடியொற்றி தமிழகத்தின் அரசியல் விடிவெள்ளியாக உலா வரும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி மாண்புமிகு ஸ்டாலின் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், இவற்றிற்கெல்லாம் மேலாக, தென் பாண்டி மண்டலத்தின் தொண்டர்களின் உந்து சக்தியாக விளங்கும் ஆற்றல் அரசர், அஞ்சா நெஞ்சர் அண்ணன் மு.க. அழகிரி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்தச் சபையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மதுரை மேற்குத் தொகுதி வாக்காளர் பெருங்குடி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆட்சிக்கும், தமிழக முதல்வருக்கும் உள்ள பெருமையே, மத்திய அரசிடம் மக்கள் நலனுக்கான கோரிக்கைகளுக்கான நிதி ஆதாரத்தை வலியுறுத்தி, சுமுகமாக நல்ல இணக்கத்துடன் நிதியைப் பெற்று, அந்த நிதியைத் திட்டங்களுக்காக முழுமையாகச் செலவிட்டு சாதனை படைப்பதே இந்த ஆட்சியின் சிறப்பு அம்சமாகும். முக்கியமாக, சேது சமுத்திரத் திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், தமிழைச் செம்மொழியாக்கியது, நான்கு வழிச் சாலைத் திட்டம். இந்த வகையில், மத்திய அரசிடம் மதுரை மாநகர மக்களுக்காக "ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்மூலம் ரூபாய் 1,462 கோடியை ஒதுக்கீடாகப் பெற்றுக் கொடுத்துள்ளதற்குத் தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், மதுரை மாநகர மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நிதி முழுவதும் திட்டப் பணிகளில் செலவழிக்கப்படுவதற்கும், இத்திட்டங்கள் விரைவில் நிறைவேறவும் தமிழக அரசு முனைப்புக் காட்ட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மாநகரம் கோயில் மாநகரம் என அழைக்கப்படும் பாரம்பரியப் பெருமை மிக்க நகரம் ஆகும். எனவே, மதுரை நகருக்குத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு செய்வதில் சிறப்புத் தகுதி வழங்கி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன். சர்வதேசச் சுற்றுலாப் பயணிகளும், பல மாநில மக்களும் இம்மாநகர் நோக்கி வந்து குவிகின்றார்கள். எனவே,

இம்மாநகரில் சாலைக் கட்டமைப்பு, பாலங்கள் மற்றும் பல்வேறு வசதிகளை உருவாக்கி, சிறப்பு மிக்க பண்பாட்டுத் தலைநகரமாக மதுரையை மாற்றித் தருமாறு மாநில முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-35*

மதுரை நகரில் இன்று மிக அத்தியாவசியமான பணியாகப் போக்குவரத்து நெரிசலைச் சீர் செய்யப் போர்க்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ளதும், மதுரை மாநகரின் இதயம்போன்றதுமான கோரிப்பாளையம், பசும்பொன் தேவர் திருமகனார் சிலை அருகே முக்கியமான சாலைகள் சந்திக்கின்றன. எனவே, தேவர் சிலையை மையமாகக்கொண்டு பல்முனை சுரங்கப் பாதை அமைப்பதில் அரசு மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

மேலும், வைகை மேம்பாலம், பனகல் சாலை, அழகர்கோவில் சாலை, ஆழ்வார்புரம் சாலை, செல்லூர் பாலம் ஸ்டேஷன் சாலை அனைத்தையும் இணைத்துக் கடந்து செல்லும்படியான சுழல் மேம்பாலம் கட்டுவதற்கான வரைவுத் திட்டம், வடிவமைப்பு முதலியவைகளை உடனடியாக அறிவித்து, திட்டம் நிறைவேறுவதற்கான நிதி உட்பட அனைத்துத் தேவைகளையும் காலவரையறையுடன்கூடிய திட்டமாக மேற்கொள்ள வேண்டுகின்றேன்.

இதேபோல, மதுரையின் மையப் பகுதியான கட்டபொம்மன் சிலை உள்ள பகுதியிலும் சுரங்கப் பாதையையும், சுழல் மேம்பாலத்தையும் வடிவமைத்து நிறைவேற்றித் தர வேண்டுகின்றேன். சென்னை மாநகரில் அமைச்சர்களும், அரசாங்கத் தலைமையும் உள்ளதால், இம்மாதிரித் திட்டங்கள் உடனடியாக நிறைவேறும் அதிசயத்தைப் பார்க்கின்றேன். இந்த அதிசயம் மதுரையிலும் நிறைவேற வேண்டுமென்று, பல்வேறு சரித்திர சாதனைகளைப் படைத்து, அதற்காகப் போராடி வரும் தமிழக முதல்வரைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இது மதுரை மாநகர மக்களின் எதிர்வரும் 100 ஆண்டுக் காலத் தேவைகளை உணர்ந்து செயல்படும் திட்டமாக அமைய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மேற்குத் தொகுதியில் அமைந்துள்ள அரசினர் இராஜாஜி மருத்துவமனை, தென் மாவட்ட மக்களின் உயிர்காக்கும் மருத்துவமனையாக விளங்கி வருகின்றது. இந்த மருத்துவமனையில்



வெளி நோயாளிகளாக தினந்தோறும் சுமார் 10 ஆயிரம் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றும், உள்ளிருப்பு நோயாளிகளாக சுமார் 2 ஆயிரம் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இந்த மருத்துவமனையின் இருதய நோய்ப் பிரிவுக்கென மாநகராட்சிக்குச் சொந்தமாக இருந்த அண்ணா பேருந்து நிலைய இடத்தில் தனியாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சுமார் 22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்தப் பணிக்குத் திட்டமிட்ட அமைச்சருக்கு நன்றி கூறுவதோடு, இந்தத் திட்டத்தில் கீழ்க்கண்ட எனது வேண்டுகோளையும் ஏற்று, அதற்காக மேலும் தேவைப்படும் நிதியையும் ஒதுக்கித் தர வேண்டுகின்றேன்.

தற்சமயம் மதுரை மருத்துவமனையில் இருதய அறுவைச் சிகிச்சைக்குப் பல ஆண்டுக் காலமாக எப்போதும் காத்திருக்கும் நோயாளிகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. இந்தக் குறையை நீக்கி உடனடியாக இருதய நோயாளிகளின் உயிர் காக்கும்படித் திட்டமிட்டுள்ள புதிய இதய மருத்துவமனை, குறைந்தது 5 அதி நவீன இருதய அறுவை சிகிச்சை அரங்குகளுடன், அதற்குத் தேவைப்படும் படுக்கைகள், கருவிகள், இதய மருத்துவ சோதனைக் கருவிகள் உள்ளிட்ட வசதிகளுடன் நிறுவப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இவ்விரிவாக்கத்திற்காகத் தேவைப்படும் அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர்களும், அதற்கேற்ற பணியாளர்களும் நியமிக்கப்பட்டு, தென் மாவட்ட ஏழை, நடுத்தர மக்களின் அத்தியாவசிய மருத்துவத் தேவையை நிறைவேற்றித் தருமாறு இதய நேசிப்பை மிகவும் நாடும் மனிதாபிமானமிக்க முதல்வரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், மதுரை அரசு மருத்துவமனைக்கெனத் தனி தண்ணீர் வசதித் திட்டம், தனி மின் வசதித் திட்டம், உயிர் காக்கும் மருந்துகளில் தன்னிறைவான நிலை ஆகிய அனைத்துக்கும் உரிய கவனமும், நிதியும் வழங்கி உதவிட அன்போடு வேண்டுகின்றேன்.

மதுரையில் அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகத்தின்மூலம் Super Speciality மருத்துவமனை கட்ட மதுரை மாநகருக்கு அருகில் உள்ள தோப்பூரில் 110 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிகின்றேன். அந்த இடத்தில் இத்திட்டத்தின்மூலம், இம்மருத்துவமனையை நிர்மாணிக்க [illegible] க்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

228092

[திரு. க.சி.க. ராஜேந்திரன்] [2007 அக்டோபர் 19

உலகம் தகவல் தொழில்நுட்பத்திலும், கணினியிலும் சாதனை படைத்து, புது யுகம் படைத்து வருகின்றது. இந்தப் புத்துலக சாதனையில் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இந்தத் திட்டத்திற்கு வித்திட்டு, இந்தியாவைத் தலை நிமிர்ந்து நிற்க வைத்த விஞ்ஞானத் தொலைநோக்குச் சிந்தனையாளர் அமரர் ராஜீவ் காந்திக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்கால இந்தியக் கனவுகளுக்கான நாயகன் ராஜீவ் புகழ்பாடும் இப்பணியில் மதுரை மாநகரையும் பங்கெடுக்கச் செய்யும் சாதனைகளாக எங்கள் கோயில் மாநகரில் டைடல் பூங்காவும், ஐ.டி. பூங்காவும் அமைய உத்தரவிட்ட முதல்வர் அவர்களின் தொலைநோக்குச் செயலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இப்பணிகள் விரைந்து செயல்படத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இப்பணி நிறைவேற காலக்கெடுவுடன் ஒற்றைச் சாளர முறையில் நடவடிக்கை எடுத்து நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

மதுரை மாநகரில் மத்திய அரசின் திட்டத்திற்குட்பட்ட Indian Institute of Technology தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனம் அமைத்துக் கொடுக்க வலியுறுத்தி மத்திய அரசிடம் நம் முதல்வர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்தக் கோரிக்கையை இடையறாது வற்புறுத்தி, இந்த உயர் கல்வி நிறுவனத்தை மதுரையில் உருவாக்கிட விரைந்து முயற்சிகள் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் புதியதாகத் தொடங்க அறிவித்துள்ள இசைக்கான பல்கலைக்கழகத்தை, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையிலே அமைத்துத் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-40*

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக 1984-ல் தல்லாகுளம் பகுதியில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில், கேட்பாரற்று உள்ளது. கால் நூற்றாண்டுக் காலமாகக் காத்துக் கிடக்கும் தமிழன்னை இனியும் இக்காலதாமதத்தைப் பொறுக்க மாட்டாள். இந்த நிலத்தில் ஆக்கிரமிப்புகளும் அடிக்கடி நடைபெறும் அவலம் ஏற்பட்டுள்ளது. எனவே, அகற்றப்பட்ட கண்ணகி சிலைக்கு மீண்டும் இடமளித்துப் பெருமைப்படுத்திய சிலம்புச் சிந்தனையாளர், தமிழன்னையின் நூற்றாண்டுக் கால ஏக்கமான செம்மொழித் தகுதியைத் தன் தமிழுணர்வால் பெற்றுத் தந்து, தமிழைச் செம்மொழி



2007 அக்டோபர் 19] [திரு. க.சி.க. ராஜேந்திரன்]

அரியாசனத்தில் அமர வைத்த முத்தமிழறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் மலர்ந்திட உரிய நிதியும், திட்டமும் தந்து, தமிழன்னையின் மகுடத்திற்குப் பெருமை சேர்க்கும் நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை மேற்குத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, மதுரை மாநகரில் செல்லூர்-தத்தநேரி இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்குக் கடந்த 2001 ஆம் ஆண்டில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 2002-ல் பணிகள் துவங்கின. இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்ட பணிகள் 5 ஆண்டுகளாகியும் இன்னும் முடிக்கப்படாமல் உள்ளன. தூண்கள் மட்டும் கட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நிலம் ஒப்படைப்பதில் தாமதம் ஏற்படுத்தியதாலும், ஒப்பந்தக்காரர் பணியை மேற்கொள்ளாத காரணத்தாலும் கட்டுமானப் பணிகள் முற்றிலுமாக நின்றுவிட்டன. இந்தப் பணிகள் துரிதமாக நடைபெற அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து, மதுரை மேற்குத் தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான இதனை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மதுரை எல்லீஸ் நகர் இரயில்வே மேம்பாலப் பணிகள் ஆமை வேகத்திலே நடைபெற்று வருகின்றன. இதனையும் விரைந்து முடித்து, மதுரை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைப் போக்க வேண்டும். போக்குவரத்து நெரிசல் மிக்க மதுரை, கோரிப்பாளையம், பழங்காநத்தம்போன்ற பகுதிகளிலே பறக்கும் பாலம் அமைக்க வேண்டும்.

மதுரை மேற்குத் தொகுதிக்கு உட்பட்ட செல்லூர், தத்தநேரி, கரும்பாலை, பி.பி.குளம், தல்லாகுளம், ரிசர்வ் லைன், காளாங்கரை போன்ற பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை விரைந்து வழங்க வேண்டும்.

புறம்போக்குக் குடியிருப்பில் 10 ஆண்டுக் காலம் குடியிருந்தால் பட்டா வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. தமிழக மக்களின் நல்வாழ்விற்காக எத்தனை திட்டங்கள் போட்டாலும் அதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அதிகாரிகளைத்தான் சாரும். ஆனால், அரசு அறிவிக்கும் திட்டங்களில் ஒரு சில அதிகாரிகள்

வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தி அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகின்றார்கள். பட்டா வழங்குவதில் நீர்ப்பிடிப்புப் பகுதி போன்ற காரணங்களைக் கூறி மனுவினை நிராகரிக்கின்றார்கள். இதில் அரசு தலையிட்டு, பட்டா கிடைக்கச் செய்ய வேண்டுமாய் அன்போடு வேண்டுகின்றேன்.

மதுரை மேற்குத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் செல்லூர், பந்தல்குடிக் கால்வாய், கிருதுமால் நதி, மேலப் பொன்னகரம் கால்வாய்போன்ற கால்வாய்களைத் தூர் வாரி, எதிர்வரும் மழைக் காலங்களில், மழை நீர் ரோடுகளில் தேங்குவதைத் தவிர்த்து, தங்குதடையின்றிச் செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

செல்லூர் கண்மாயைத் தூர் வாரி வெள்ளம், புயல் ஏற்படும் காலங்களில் செல்லூர் பகுதியில் நிகழும் வெள்ள அபாயத்தினை வருமுன் தடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றாகப் பேசுகிறீர்கள். சந்தேகமே இல்லை. இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** இன்னும் இரண்டு நிமிடங்கள் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுவீர்களா?

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** முடித்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் எவ்வளவோ நாட்கள் இருக்கின்றன. மூன்றரை வருடங்கள் பேசலாம்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. க.சி.க. ராஜேந்திரன்:** வைகை நதி சீரமைப்புத் திட்டம் தற்போது செயல்பட்டு வருகின்றது. மேலும், வைகை நதியைச் சுத்தம் செய்து, தடுப்புச் சுவர் கட்டி, சாலை ஓரங்களில் இருபுறமும் பொழுதுபோக்குப் பூங்கா அமைத்து அழகுபடுத்த வேண்டும். வருடத்திற்கு ஒரு முறை ஆற்றின் இரண்டு கரைப் பகுதிகளையும் சுத்தப்படுத்த வேண்டும்.

தமிழக முதல்வர் அவர்களின் நண்பரும், மறைந்த காங்கிரஸ் தலைவருமாகிய மக்கள் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களின் திருவுருவச் சிலையை சென்னை, மதுரை மாநகரங்களில் நிறுவ



வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, எனது மதுரை மேற்குத் தொகுதி கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும்; அங்கு கைத்தறி நெசவாளர் நல வாரியம் கடந்த ஆட்சியில் செயல்படாமல் இருந்தது; தற்சமயம் கைத்தறி வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றது; அந்த வாரியத்திற்குப் போதிய நிதியினை அளித்து, கைத்தறி வாரியத்தின் பலன்கள் 60 நாட்களுக்குள் நெசவாளர்களுக்குக் கிடைக்குமாறு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பினை நல்கிய அவைத் தலைவர் அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன். 7 நிமிடங்கள்.

*பிற்பகல் 12-45*

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையினை நாட்டு மக்கள் பாராட்ட இருக்கிற இந்த நல்ல வேளையிலும், நாளைய சமுதாயத்திற்கு இந்த மாமன்றத்தின் மாண்புகளைப் பாதுகாக்க ஒரு மிக முக்கியத் தீர்மானம் எடுக்கப்பட்ட இந்த நன்னாளிலும் இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த வரலாற்றுத் தலைவரான நம் முதல்வரையும், இனமானப் பேராசிரியரையும், உள்ளாட்சியில் நல்லாட்சி காணும் மாண்புமிகு அண்ணன் தளபதியாரையும் வணங்குகிறேன்.

2007-2008 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடு ரூ.1,959.63 கோடி அளவிலான நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிற இந்த நேரத்தில், இதில் வருவாய்க் கணக்கில் ரூ.1,253.99 கோடியும், மூலதனம் மற்றும் கடன் கணக்கில் ரூ.705.64 கோடியும் கணக்கிடப்பட்டுள்ளது. எதிர்பாராச் செலவுகள் மனித வாழ்வில் யதார்த்தமே. வளரும் நாட்டிற்குப் புதுப் பணிகள் அவசியமே. அதன் அடிப்படையில் உருவானது இத்துணை மதிப்பீடு. தொலைநோக்குப் பார்வையோடு, நாட்டு மக்கள் நலனிலும், வளர்ச்சியின்மீது நாட்டம்கொண்ட அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதும், அதன் தலைவர் நம் முதல்வர் என்பதும் இந்தியத் துணைக் கண்டம் அறிந்த ஒன்றே.

அதன் அடிப்படையில், ஏழைத் தாய்மார்களின் மன உளைச்சலைப் போக்கக் கூடுதலாக 3 இலட்சம் இலவச எரிவாயு

இணைப்புகளுடன்கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்க ரூ.60 கோடி ஒதுக்கியதால் ஏழைத் தாய்மார்களின் சிரிப்பில் இறைவனைக் கண்ட தலைவரை நாடே பாராட்டுகிறது.

புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்காக ரூ.140 கோடி பங்கு மூலதன உதவி வழங்குவதன் வாயிலாக, இந்த அரசு எதிர்கால மின்சாரத் தேவையை அறிந்து, வளரும் தொழில்களுக்கும், பொது மக்களுக்கும் தடையின்றி மின்சாரம் வழங்கும் நோக்கில் மின்சாரத்தில் வருமுன் காக்கும் இம்முயற்சியை மேற்கொண்ட கழக அரசினைத் தொழில் முனைவோரும், பொது மக்களும், நாட்டின்மீது அக்கறைகொண்ட அனைவரும் பாராட்டுவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்காகக் கூடுதல் நிதியாக ரூ.80 கோடி வழங்குவதன் வாயிலாக ஏழைத் தாய்மார்களின் உடல் நலத்தையும், எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியத்தையும் கருதிய தாயுள்ளம் கொண்ட இந்த அரசையும், நம் முதல்வரையும், நிதி அமைச்சரையும் நாடே பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டம் நீலகிரியாக மாற வேண்டுமென்ற நல்ல எண்ணத்திற்குச் சொந்தக்காரர் நம் தலைவர் கலைஞர் அவர்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அதன் முதல் கட்டமாக—அந்தப் பகுதிகளில் ஊருணி நீரெடுத்து ஒரு விதையை பானைகளில் உரசி, அதைத் தெளிவாக்கி நீரெடுத்து குடித்த காலங்களை மாற்றி—கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு ரூ.109 கோடி ஒதுக்கியிருப்பதால் அந்த மாவட்ட மக்கள் அனைவரும் பாரபட்சமின்றி இவ்வரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

'நமக்கு நாமே' திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக மீண்டும் உள்ளாட்சித் தத்துவத்தை மேலும் ஊக்கப்படுத்துவதற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்திற்காகக் கூடுதல் ஒதுக்கீடாக, 40 கோடி ரூபாய் வழங்குவதன் வாயிலாக ஏழைப் பெற்றோர்களின் கஷ்டத்திலும், அவர்கள் வீட்டு விசேஷத்திலும் இந்த அரசு பங்கேற்றுள்ளது, நல்லுள்ளம்கொண்ட பெற்றோர்களின் பாராட்டைப் பெறுகிறது.



அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் மீதமுள்ள 60 சதவிகித ஊதியக் குழுவின் நிலுவைத் தொகைக்கு, G.P.F.-க்கு வழங்கப்படுவதைப்போல, வட்டி வழங்குவதற்காக ரூ.358 கோடி சேர்க்கப்பட்டிருப்பதால் அரசு இயந்திரமான நிருவாகத் துறை சீராகவும், செம்மையாகவும் இயங்கும் என்பதை, கற்றுணர்ந்த பணியாளர்கள், அறிஞர் பெருமக்கள் மற்றும் நாளைய சமுதாயத்திற்கு நல்வழி காட்ட வேண்டுமென்ற முனைப்போடு இருக்கிற பொது நலவாதிகள் அனைவரும் பாராட்டத் தவற மாட்டார்கள்.

அரசு உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர் என்ற அடிப்படையில் இக்குழுவின் சார்பாகத் தமிழகத்தின் சுமார் 8 மாவட்டங்களுக்குச் சென்று வந்தேன். அதன் அடிப்படையில் பார்த்தபோது, உளுந்தூர்பேட்டை அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 2,500 மாணவிகள் படிக்கிறார்கள். அப்பள்ளிக்கு 68 சென்ட்டுக்கு உட்பட்ட பகுதி தேவை என்று அந்தப் பள்ளியின் நிர்வாகிகள், ஆசிரியர் பெருந்தகைகள் கூறினார்கள். அந்தப் பள்ளிக்குத் தேவையான இடம் இந்து சமய அறநிலையத் துறையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். அவற்றை நமது அரசு கவனத்தில் எடுத்து, அந்த மாணவிகளின் நலன் காக்க வேண்டுகிறேன்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஐ.டி.ஐ. தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. அங்கு மாணவர்கள் இன்றி, வெறும் பாழடைந்த ஒரு building-ஆக அந்த ஐ.டி.ஐ. காட்சி அளிக்கிறது. அவற்றை ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களுக்குச் சென்றபோது, R.J.D. அவர்கள், ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு இல்லம் இருக்கிறது; வார்டன் இருக்கிறார்; ஆனால், உணவு இல்லை என்கிறார். அது எந்த அளவுக்கு உண்மை என்பதை ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மேலும், மருத்துவமனைகளிலுள்ள, மருத்துவ அதிகாரிகளுக்கும், பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி மிக அதிக தூரத்தில் இருக்கின்ற காரணத்தால், அந்த இடைவெளி—communication gap—என்கின்ற அளவில், தொடர்பில்லாத காரணத்தால், மருத்துவமனைகள் சுகாதாரமற்ற நிலையில் இருக்கின்றன. குழுக்கள்

செல்கின்றபோது அதைத் தெளிவாகச் செய்து முடிக்கின்றார்கள். அவற்றுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கு மிக விரைவில் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், கீழ்க்கோத்தகிரி பகுதியில் மூடப்பட்டிருக்கிற, INCOSERVE-ஆல் நடத்தப்படுகின்ற தேயிலைத் தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்ற கோரிக்கையைக் கடந்த கூட்டத் தொடரிலேயே வைத்தேன். இப்பொழுது அமைச்சரவர்கள், இன்னும் இரண்டொரு மாதங்களில் அதைத் திறக்கலாம் என்று சொல்லியிருக்கின்றார். அதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

நீலகிரியைப் பொறுத்தவரை சுற்றுலாத் தலம் ஒரு தொழிலாகக் காட்சியளிக்கின்ற காரணத்தால், பகாசுரன் மலையைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதோடு, அங்கு ஒரு tower அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தெங்குமரஹடாவில் மாயாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்; தெங்குமரஹடா என்பது ஒரு தீவாக இருக்கிறது. அங்கு சுமார் 2,500 பேர் வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக, மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற காரணத்தால் அந்தப் பகுதியில் அவசியம் பாலம் அமைத்திட வேண்டும். இரண்டு நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி, பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், இராம்நாயர் கூட்டுறவு வங்கியின் மூலம் பெற்ற கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்து, ஏழைத் தொழிலாளிகளைக் கடனிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதிகபட்சமாக இரண்டு கோடி ரூபாய் வரும் என்று வங்கியின் தலைவர் கூறுகின்றார்.

குன்னூர் சிம்ஸ் பூங்கா அருகே வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டுமென்றும், வளர்ந்து வரும் மக்கள் தொகையை எதிர்காலத்தில் சமாளிக்கும்பொருட்டு, குன்னூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி, நவீனப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேட்டுப்பாளையம்-கக்கநல்லா வரையிலேயுள்ள மெயின் சாலை N.H.-5-ல் இருக்கின்ற காரணத்தால், 389/1 என்ற எண்ணுள்ள பாலம் மிக மோசமாக இருக்கிறது. அந்தப் பாலத்தைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"*

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க, எங்களை வழி நடத்துகின்ற எங்கள் தலைவரின் பாதம் தொட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும், தங்களுக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே 1,959.63 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, இலவச எரிவாயு அடுப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, எரிசக்தி, குடும்ப நலத் துறைபோன்ற பல்வேறு துறைகளுக்கு நிதியை ஒதுக்கி, அந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கின்றோம். அதே வேளையிலே, ஒரு சில கருத்துகளை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இளைஞர்கள் என்பவர்கள் 15 வயது முதல் 25 வயது வரையிலான பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது ஐ.நா. அளிக்கும் விளக்கம் ஆகும். நடைமுறையில் இளைஞர்கள் பற்றிய செயல் முறை விளக்கமானது, பண்பாட்டு நிறுவன அரசியல் கூறுகளைச் சார்ந்து, நாட்டுக்கு நாடு பெரிதும் வேறுபடுகின்றது. இந்தியாவில் 13 வயது முதல் 35 வயது வரையிலான பிரிவைச் சேர்ந்தவர்கள் இளைஞர்கள் என்று, அதிகார முறைப்படி கருதுகின்றார்கள். 25 வயது முதல் 35 வயது வரையிலான இளைஞர்கள் உட்படத் தமிழகத்தில் மக்கள் தொகையிலே 13 வயது முதல் 35 வயது வரையிலான இளைஞர்கள் ஒட்டுமொத்தமாக 43 விழுக்காடு ஆகும். இப்பொழுது அது 45 விழுக்காடாக இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகின்றது. மக்கள் தொகையிலே 45 விழுக்காடு

இளைஞர்கள் பெரும் பகுதியாக இருப்பது மக்கள் தொகையின் இலாபப் பங்கு என்று அழைக்கப்படுகின்றது. இது இயற்கை கொடுத்த வரமாகும். ஓர் உடைமை என்ற முறையிலே நமது சமுதாயத்தில் மிகுந்த செயல் துடிப்போடும், ஆற்றல் வளமும் கொண்ட பகுதியில் இளைஞர்களை முறையாக நெறிமுறைப்படி வழி நடத்தினால், வறுமையில் உழலும் நாடு என்று இருக்கும் இந்தியாவை, வளமும், நலமும் மிக்க நாடாக மாற்ற முடியும். ஒரு சுமையாகக் கருதினால், குற்றவியல் மற்றும் சமூக விரோத நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடக் கூடும். நாட்டை மிகவும் பலவீனமாக்கக்கூடிய மிகுந்த அழிவு சக்தியாகவும் அவர்கள் மாறலாம். இது நிகழ்வதற்கு அனுமதிக்கக் கூடாது. தமிழகத்தில் ஏராளமான இளைஞர்கள், சுக்கான் இல்லாத படகுபோலத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். நடிகர், நடிகையர்க்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் வழிபாடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழியில், இலக்கியத்தில், தமிழின் வளமிக்க பண்பாட்டில், மரபில் அவர்களுக்குப் பிடிப்பு இல்லை. போதைப் பழக்கம், புகை பிடிக்கும் பழக்கம், குடிப் பழக்கம் ஆகியவற்றிற்கு ஆளாவதன்மூலமாக H.I.V., AIDS போன்ற நோய்களின் பாதிப்பிற்கு உள்ளாகி இந்த நிலைமைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-55*

இளைஞர்களின் எதற்கும் கட்டுப்படாத இந்தத் தாறுமாறான பண்பாட்டுச் சீரழிவுப் போக்கிற்குத் தரமற்ற கல்வி, தடைமிக்க வேலைவாய்ப்புகள், தொழில் முனைவோருக்கான தடைகள், விளையாட்டுத் துறையிலே தரம் தாழ்ந்த நிலைமை ஆகியவையே மூல காரணங்களாக இருக்கின்றன. தமிழக இளைஞர்களின் ஆற்றல்கள், பொருளாதாரச் செழிப்பின் உச்சியில் எட்ட வேண்டுமெனில், பின்வரும் விஷயங்களிலே கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக, குறிப்பிட்ட வயதில், அதாவது, வளர் இளம் பருவத்திலுள்ள இளைஞர்மீது சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தின் இளைஞர்களுக்குத் தரமான கல்வி கிடைப்பதில்லை. படைப்பாற்றல், கேளிக்கை, ஆளுமை மேம்பாடு ஆகியவற்றில், வழியில்லாத, பொருள் புரியாத பழங்கால மனப்பாடப் பள்ளிக் கல்வியை அமைப்பதில்தான் இன்னும் நாம் பணிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தக் கல்வி அமைப்பில், விளையாட்டிற்கோ, பண்பாட்டிற்கோ அர்த்தம் உள்ள பங்கு இல்லை. முறையான வேர்கள் இல்லாத நிலையில் இளைஞர்கள் தங்களைப் பயனற்றவர்களாகக் கருதுகிறார்கள். முதல் நிலைக் கல்வியானது, தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி அடிப்படையிலே தவறாக



உள்ளது. ஏனெனில், நற் பண்புகளைப் பற்றியோ, உழைப்பின் மேன்மையைப் பற்றியோ அது எந்த வகையிலும் உணர்வூட்டுவது இல்லை. எந்த நாடு இளைஞர் சக்தியை அதிக அளவிலே பயன்படுத்தி இருக்கிறதோ அந்த நாடுதான் வளர்ந்த நாடாகக் கருதப்படுகிறது. எனவே, இளைஞர் சக்தியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தேர்தல் நேரங்களிலே சுவரொட்டி விளம்பரம், தட்டி விளம்பரம் செய்யத் தடை செய்யப்படுகிறது. அனுமதி பெற வலியுறுத்தப்படுகிறது. ஆனால், மற்ற காலங்களிலே அதைப்போல கிராமப்புறங்களிலே சுவர் விளம்பரம், தட்டி விளம்பரம் அனுமதி பெறாமல் எழுதக் கூடாது. அதற்குத் தடை விதிக்க வேண்டும். மிக முக்கியம் வாய்ந்த நிகழ்ச்சிக்கு 4 அல்லது 5 நாட்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கலாம். அதற்கும் கட்டணம் செலுத்தும் வகையிலே அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்றைய நிலையிலே சிமெண்ட் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்திருக்கிறது. சிமெண்ட் விலை 2006 ஆம் ஆண்டு ஆரம்ப காலத்திலே 146 ரூபாயாக இருந்தது. ஆனால், இன்றைக்கு 246 ரூபாயைத் தாண்டிவிட்டது. இதனால், வீடு கட்டுவதுபோன்ற அனைத்துக் கட்டுமானப் பணிகளுக்கும், அரசுப் பணிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு முடங்கிக் கிடக்கின்றன. பணிகள் முழுமையாக நடைபெறவில்லை. இதை நம்பி வாழக்கூடிய இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலையற்று நடுத் தெருவிலே நிற்கிறார்கள். ஆங்காங்கே கட்டுமானத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்துவது நம்மை உலுக்கிக் கொண்டிருக்கிறது.

நம்முடைய அரசு, பாகிஸ்தான், சீனா, இந்தோனேசியாபோன்ற நாடுகளிலிருந்து சிமெண்ட்டை இறக்குமதி செய்வதாக அறிவிக்கப்பட்டதை நாளிதழ்களிலே பார்த்தோம். ஆனால், அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. அது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்? மேலும் அரசு, சிமெண்ட் தொழிற்சாலை உரிமையாளர்களை அழைத்து இதுவரை பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தெரியவில்லை. பேசப்பட்டதாகவும் தெரியவில்லை. பேசுவதற்கு ஏன் தயக்கம் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே, அரசு அறிவித்ததைப் போல, சிமெண்ட்டை இறக்குமதி செய்து நியாய விலைக் கடைகள்மூலமாக முன்பிருந்த விலைக்கே விற்கவேண்டுமென்று பாட்டாளி மக்கள்

கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். இறக்குமதி செய்வது ஒன்றே நிரந்தரமாகாது. எனவே, சிமெண்ட் ஆலை உரிமையாளர்களை அழைத்து விலையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"ஊருக்கு இளைத்தவன் விவசாயி"; "உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மிஞ்சாது" என்பது பழமொழி. உலக வர்த்தக ஸ்தாபனங்கள்—W.T.O.—போன்றவற்றின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் அளவு இந்தியாபோன்ற நாடுகளில் தற்காப்புச் சட்டங்கள் இல்லாத காரணத்தால், யுத்த காலத்திலே கவசம் இல்லாத தரைப் படை வீரன் மடிவதைப்போல விவசாயிகள் பாதுகாப்பு இல்லாமல் இன்றைக்கு மடிந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளிலே விவசாயம் தேக்க நிலையிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். உற்பத்தி அதிகரிக்கவில்லை. சில நேரங்களில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே தேசிய உற்பத்தியிலே—G.D.P.-யிலே—33 சதவீதம் பெற்ற விவசாயம் இன்றைக்கு 24 சதவீதத்திற்குக் குறைந்துவிட்டது. விவசாயத்திலே 4 சதவீதம் எதிர்பார்த்த உற்பத்தி இப்போது 2 சதவீதம்கூட எட்ட முடியாத நிலையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒன்றரை மணிக்கு விவாதத்தை முடித்தாக வேண்டும்.

**திரு. தி.க. ராஜா:** விவசாய நிலங்கள் குறைந்துகொண்டிருக்கின்றன. நிலத்தடி நீர் அருகிவிட்டது. ஆறுகளில் நீர்வரத்துக் குறைந்துவிட்டது. இரசாயன உர உபயோகத்தால் சுற்றுச் சூழல் பாதித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையெல்லாம் மாறி, விவசாயத்திற்குப் புத்துயிர் கொடுக்கின்ற வகையிலே மாற்றுப் பயிர்த் திட்டத்தைக் கொண்டு வந்து சொட்டு நீர்ப் பாசனம் மூலமாக ஏழை விவசாய மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) விவாதத்தை முடித்தாக வேண்டும். Please, இன்றைக்குக் கொஞ்சம் co-operate பண்ணுங்கள். (குறுக்கீடு) ஏனென்றால், guillotine time.

**திரு. தி.க. ராஜா:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.



பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடியாது. மற்ற நாட்களுக்கும், இன்றைய நாளுக்கும் வித்தியாசம் இருக்கிறது, ராஜா.

**திரு. தி.க. ராஜா:** ஒரே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Guillotine time.

**திரு. தி.க. ராஜா:** நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Please co-operate with the Chair. (குறுக்கீடு) இதே வேலையாகப் போய்விட்டது. Guillotine time. Without knowing it, (குறுக்கீடு) முடிக்கிறேன் என்று சொன்னால், முடிந்தது. உரையை முடியுங்களேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. மற்ற நாட்கள் என்றால்கூட பரவாயில்லை.

**திரு. தி.க. ராஜா:** ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது கூட்டுறவுத் தேர்தலின்போது, கொலை முயற்சி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. பொய்யான வழக்கு. அந்த வழக்கை நம்முடைய தமிழக அரசு திரும்பப் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குறும்பன்ஸ் பழங்குடியின மக்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் இருக்கிறது. இனச் சான்று வழங்கச் சொல்லியிருக்கிறது. அதையும், கொங்காரெட்டி போன்ற சமுதாயத்திற்குச் சாதிச் சான்றிதழும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகரமாகக் கொண்ட புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008-க்கான முதல் துணை நிதிநிலை மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்ற வாய்ப்புத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'Hindu' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலே சொல்கின்றபோது, தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட 177 வாக்குறுதிகளில் 107 வாக்குறுதிகளை நிறைவேற்றிய மகிழ்ச்சியில் தான் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கைகளைத் தேர்தலோடு மறந்துவிடாமல், தேர்தல் முடிந்து ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுக் காலம் ஆனபோதிலும், தான் மட்டும் மறந்துவிடாமல் இருந்தால்கூட இந்த மக்களும் மறக்காமல் இருக்கின்ற அந்த அத்தகைய அற்புதமான தேர்தல் அறிக்கையைத் தந்து, 5 ஆண்டுகளும் பேசப்படுகின்ற தேர்தல் அறிக்கையாக, மக்கள் உற்றுப் பார்த்து இந்தத் தேர்தல் அறிக்கையில் என்னென்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை மிக ஆர்வத்தோடு பார்த்துக்கொண்டிருக்கின்ற ஒரு தேர்தல் அறிக்கையாகத் தந்த காரணத்தினால், இந்தத் தேர்தல் அறிக்கை தேர்தலோடு மறக்கப்பட்டுவிடாமல், இந்த அரசு பதவி வகிக்கின்ற 5 ஆண்டுக் காலங்களிலும் இந்தத் தேர்தல் அறிக்கையை முன்னேற்றத்திற்கான, நடைமுறைக்கான யதார்த்தங்கள் ஒவ்வொரு நாளும் நடக்கின்றனவா என்று நாட்டு மக்கள் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அந்தத் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த அரசுக்கும், முதலமைச்சருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, போகின்ற பாதை சரியானதாக இருந்தாலும், போக வேண்டிய இடம் வெகு தூரமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த நீண்ட நெடிய பயணத்திற்கு நம்மை நாமே தயார் செய்துகொள்ள வேண்டிய ஒரு நிருவாக அவசியத்திற்கு நம்மை நாமே உட்படுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, அந்த வகையிலே இந்த இடைநிலை மதிப்பீட்டிலே, கடந்த 3, 4 மாதங்களாக, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த பின்பு நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற திட்டங்களிலே எங்கெல்லாம் தொய்வு வந்திருக்கிறது; எங்கெல்லாம் நிருவாகச் சிக்கல் வந்திருக்கிறது; எங்கெல்லாம் நாம் நினைத்த அளவு பயன்கள் மக்களைச் சென்றடையவில்லை என்பதை ஒரு பரிசோதனை செய்கின்ற விவாதமாகவே இந்த விவாதத்தை நான் எடுக்கிறேன்.

முதலில் நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையை நாம் எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், புரட்சிகரமான இரண்டு திட்டங்களை நாம் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அனைத்து அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டம் என்று சொல்லி ஒவ்வொரு



ஊராட்சிக்கும் 20 இலட்சம் ரூபாய் வழங்குகிறோம். பேரூராட்சிக்கு இப்பொழுது 50 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய அளவிலே முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, சில பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஆனால், அதிலே என்ன நிருவாகச் சிக்கல்கள் வருகின்றன என்று சொன்னால், சில பேரூராட்சிகளிலே இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகின்றபோது, நிச்சயமாக ஒரு பூங்காவையும், ஒரு குளத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற கட்டாயம் இருக்கிறது. அநேகமான பேரூராட்சிகளிலே அந்த இடமே இல்லை. அதனால் அவர்கள் அந்தப் பணத்தைப் பயன்படுத்த முடியாமல், என்ன செய்வதென்று நினைக்கிறார்கள். எனவே, அத்தகைய நிபந்தனைகளைத் தளர்த்தி அந்தச் சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னால், அந்தப் பணத்தினை அடிப்படைக் கட்டுமானப் பணிகளுக்காக அந்தப் பேரூராட்சிகளே பயன்படுத்திக்கொள்ளலாம் என்கிற அந்த மாற்றத்தினை அந்த நிருவாகத்திலே செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு தற்பொழுது பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு ஊராட்சியை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், 20 இலட்சம் ரூபாய்; பேரூராட்சிக்கு 50 இலட்சம்; இது போக, சட்டமன்ற உறுப்பினருடைய வளர்ச்சித் திட்டங்கள்; இப்படி ஒவ்வொரு ஊராட்சிக்குள்ளும் ஏறக்குறைய 40 இலட்சம், 45 இலட்சம் ரூபாய் அரசாங்கத்தினுடைய பணம் பல்வேறு பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது. இதிலே கட்டடப் பணிகளுக்கான சிமெண்ட் வழங்க வேண்டிய பொறுப்பு ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்தது. ஆனால், தென் மாவட்டங்கள் 8 மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், Tamil Nadu Cements Factory என்று அழைக்கக்கூடிய TANCEM நிறுவனம்தான் அந்த சிமெண்டை வழங்க வேண்டும். ஆனால், அந்த நிறுவனம் அடைத்துக் கிடக்கின்ற காரணத்தினால் 8 மாவட்டங்களுக்குப் போய்ச் சேர வேண்டிய சிமெண்ட் இல்லாத காரணத்தினால், அரசாங்கம் பணம் கொடுத்தும், திட்டங்கள் நிறைவாக இருந்தும், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. அதற்கு மாற்று ஏற்பாடாக அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது? அந்த சிமெண்ட் வழங்கப்படவில்லை என்கின்ற காரணத்தினாலே, ஒப்பந்தக்காரர்கள், அரசு ஒப்பந்தக்காரர்கள்—இவர்கள் பெரிய ஒப்பந்தக்காரர்கள் அல்ல; சாதாரண ஒப்பந்தக்காரர்கள்; மிக அடித்தட்டு மக்களைச்

சார்ந்தவர்கள்—அந்த ஒப்பந்தப்புள்ளிகளை எடுத்து நிறைவேற்றுவதற்கு முன்வரத் தயங்குகிறார்கள். ஏன் என்றால், எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த நண்பர் சொன்னதுபோல, வெளிச் சந்தையிலே சிமெண்ட் வாங்கி அந்தப் பணியை நிறைவேற்ற முடியாது. நம்முடைய உள்ளாட்சித் துறை 150 ரூபாய்க்கு அந்த சிமெண்டை வழங்குகிறது. ஆனால், அதே சிமெண்டை வெளியே வாங்க வேண்டுமென்று சொன்னால் ரூ.235 கொடுக்க வேண்டும். அதனால் பல ஒப்பந்தக்காரர்கள் வரவில்லை. ஆகவே, உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற கட்டடப் பணிகளுக்கு முறையாக சிமெண்டை வழங்குகின்ற வகையிலே, அதற்கான அவசரமான போர்க்கால அடிப்படையில் மாற்று ஏற்பாடுகளைச் செய்தால்தான், அடுத்த நிதிநிலை அறிக்கைக்குள்ளே, நாம் ஏற்கெனவே போட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்று எண்ணுகிறேன். அதற்கு அடுத்து, மத்திய அரசு இப்போது . . . (குறுக்கீடு)

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் சார்பாக இங்கே அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இன்று 230 ரூபாய் என்று விலையும் நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான சிமெண்ட் பெறப்பட்டு அந்தப் பணிகளுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல; Import cement -என்பதன் அடிப்படையிலே 3 நாடுகள் அதிலே கலந்துகொண்டிருக்கின்றன. பாகிஸ்தான், சீனா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் இதிலே கலந்துகொண்டிருக்கின்றன. அவையும் கூடிய விரைவில் திறக்கப்பட்டு, சிமெண்ட் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து TANCEM பெற்று இருக்கிறது. விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று கருதுகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல 230 ரூபாய்க்கு அவர்களுக்கு சிமெண்ட் வழங்கப்படும் என்று சொன்னால், ஏற்கெனவே மதிப்பீடுகள் 150 ரூபாய் அடிப்படையிலே தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கான அந்த rate-களையும் மாற்ற வேண்டும். அதற்கான முன்மொழிவுகளையும் சேர்த்து ஒரே நேரத்திலே வந்தால்தான் அந்தப் பணிகள் நடக்கும். எனவே, சிமெண்ட் கூடுதல் விலைக்கு வழங்க அரசு முன்வருகின்றபோது, ஏற்கெனவே fixed rates என்று உள்ளாட்சித் துறையிலே கட்டடப் பணிகளுக்கு என்ன rates முடிவு செய்து வைத்து இருக்கிறோமோ, அதை உடனடியாகக் கூட்டி, உயர்த்தி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தாற்போல, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். உங்கள் தொகுதியிலே எடுக்கப்பட்ட சாலைகள் இவ்வளவு; இதிலே பணி செய்ய வேண்டிய சாலைகள் இவ்வளவு இருக்கின்றன; இதிலே நிதிப் பற்றாக்குறையால் என்னால் இவ்வளவு சாலைகள்தான் எடுக்க முடிந்தது; வரக்கூடிய காலங்களில் இந்தச் சாலைகளை எடுத்துக்கொள்கிறோம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம். ஆனால், நான் நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை, 'Times of India'-விலே வந்த ஒரு செய்திக்கு ஈர்க்க ஆசைப்படுகிறேன்.

அதிலே என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், "States sit on funds for road upkeep"—மாநிலங்கள், மத்திய அரசு சாலைப் பராமரிப்பிற்காக ஒதுக்கிய பணத்தைச் செலவிடவில்லை என்று. எவ்வளவு செலவிடவில்லை என்று சொன்னால், 70 விழுக்காடு பணத்தைச் செலவிடாமல் மாநிலங்கள் இருக்கின்றன. அதிலே நன்றாகச் செலவழித்த மாநிலங்கள் என்று 10 மாநிலங்களை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்த 10 மாநிலங்களிலே தமிழ்நாடு இல்லை. அது சரியான தகவலா? ஏனென்று சொன்னால், அதிலே முன்னிலையிலே பீகார்தான் நிற்கிறது. தேசிய சராசரியே 30 விழுக்காடுதான் வருகிறது. எனவே, ஏறக்குறைய 1,500 கோடி ரூபாய் சாலைப் பாதுகாப்பிற்காக மத்திய அரசினுடைய Central Road Fund என்று சொல்லக்கூடிய அந்தப் பணம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறதே, அதைப் பயன்படுத்தி இதைப் போன்ற சாலைகளுக்கு எடுப்பதற்கு நெடுஞ்சாலைத் துறை என்ன முயற்சிகளை எடுத்து இருக்கிறது என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

அதற்கடுத்து, Education. 'The Hindu' பத்திரிகையிலே ஆகஸ்ட் மாதம் 4 ஆம் தேதி, "Crores in Education Tax unutilized. Nearly 30 per cent of schools do not have separate toilets for girls. At the same time, the education tax collected from the public not used for up to 70%"—மக்களிடமிருந்து கல்வி

வரியாக வசூலிக்கப்பட்ட பணம் 70 விழுக்காடு செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லி, எந்தெந்த ஊராட்சிகளில், நகராட்சிகளில், மாநகராட்சிகளில் எத்தனை கோடி பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்பது ஒரு பெரிய பட்டியலாகவே வந்திருக்கிறது.

உதாரணமாக, நம்முடைய சென்னை மாநகராட்சியிலேயே ஏறக்குறைய 27 கோடி ரூபாய் கல்வி வரியாக வசூலிக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதுபோல காஞ்சிபுரத்திலே, திருவாரூரிலே, புதுக்கோட்டையிலே, ஆத்தூர் நகராட்சியிலே, ஈரோட்டிலே, கோயம்புத்தூரிலே திருநெல்வேலியிலே என்று சொல்லி, ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்வி வரியாக வசூலிக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படாமல் உள்ளாட்சி அமைப்புகளிடம் தூங்கிக்கொண்டு இருப்பதை அந்தப் பத்திரிகைச் செய்தி சுட்டிக்காட்டி இருக்கிறது. அது சம்பந்தமாகவும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 1-10*

அடுத்து, நம்முடைய பத்திரப் பதிவுத் துறையிலே நம்முடைய மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் 1-9-2007-லிருந்து நில மதிப்பீடுகளைக் கூட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைப்பற்றிக் கொஞ்சம் விளக்கமாகப் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நில மதிப்பீடுகளைக் கூட்டியிருப்பதிலே உள்ள நியாயத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். சென்னைபோன்ற பெரிய வளர்ந்த நகரங்களிலே நில மதிப்பீடுகள் ஒரு மடங்கு, 2 மடங்கு, 3 மடங்கு எனக் கூடியிருக்கிறது. மாநகராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளிலே கூடியிருக்கலாம். மாவட்டத் தலைநகரங்களிலே கூடியிருக்கலாம். ஆனால், சிறிய குக்கிராமங்களிலேகூட 3 மடங்கு அந்த நில மதிப்பீட்டைக் கூட்டியிருக்கின்ற காரணத்தினால், சாதாரண விவசாயிகள், கூலித் தொழிலாளிகள் வீட்டுமனை வாங்குவதற்கோ, நிலங்களை வாங்குவதற்கோ ஒன்றுக்கு 3 மடங்கு கொடுக்கின்ற நிலை இருக்கிறது. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். மாநகராட்சிப் பகுதியிலே கூட்டுவதைப்பற்றி யாரும் கேட்கவில்லை. நகர்மன்றங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலே கூட்டுவதைப்பற்றி யாரும் கேட்கவில்லை. ஆனால், கிராமப்புறத்திலும், சிறிய நகரப்



பஞ்சாயத்துக்களிலும் இருக்கின்ற விவசாய விளை நிலங்களின் மதிப்புகளை கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாய, வீட்டுமனை நிலங்களின் மதிப்புகளைக் கூட்டுவதைப்பற்றி உடனடியாக அவர்கள் அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறை. கிராமப்புற மருத்துவமனைகள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என் பேச்சை எத்தனை மணிக்கு முடிக்க வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 4 நிமிடங்கள் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அங்கே, கிராமப்புற மருத்துவமனைகளிலே அநேக மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால், அவர்கள் டாக்டர்களைப் பணி நியமனம் செய்து உத்தரவிடுவதாகச் சொல்கின்றார்கள். ஆனால், உத்தரவிட்டு 3 நாட்கள், 5 நாட்களிலேயே அந்த டாக்டர்கள் வேறு ஊர்களுக்கு மாறுதல் வாங்கிச் சென்று விடுகிறார்கள். இது என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குள்ளேயே நடந்தது. நானே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற ஆய்க்குடி என்கின்ற அந்தப் பேரூராட்சியிலே இருக்கின்ற மருத்துவமனைக்கு ஒரு மருத்துவரைப் பணி நியமனம் செய்ய வேண்டுமென்று அவர்களிடம் கேட்டு. அவர்களைப் பணி அமர்த்திய மறுநாளே அந்த டாக்டரை தென்காசி அரசு மருத்துவமனைக்கு deputation-இலே கூப்பிட்டுக் கொண்டார்கள். தென்காசி அரசு மருத்துவமனையின் டாக்டரைக் கேட்டால் அவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், இது மாவட்டத் தலைமை மருத்துவமனை; 70 டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 16 டாக்டர்கள்தான் இருக்கிறார்கள்; ஒரு மாதத்திற்கு 200 டெலிவரிகள் நடக்கின்றன; பிரசவங்கள் பார்ப்பதற்கான டாக்டர்கள் இல்லையென்று அவர் சொல்கிறார். எனவே, இதற்கான மாற்று ஏற்பாடுகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். டாக்டர்கள் வந்தால் பணியில் அமர்த்தப்பட வேண்டும். அவர்கள் விரும்புவது இல்லை என்பது ஒருபுறம் இருந்தாலும்கூட, ஓய்வுபெற்ற டாக்டர்களை—அரசாங்க சர்வீசிலிருந்து 58 வயதில் ஓய்வு பெற்ற சில டாக்டர்கள் இன்னும் நல்ல உடல் நலத்தோடு பணி செய்யக் காத்திருக்கிறார்கள்; அப்படி ஓய்வுபெற்ற

டாக்டர்களை—Consolidated Pay, குறிப்பிட்ட ஒரு ஊதியத்திற்குள்ளே அவர்களைப் பணியமர்த்தி அந்தக் கிராமப்புற மருத்துவமனைகளிலே பணி செய்ய முடியுமா என்று அவர்களைக் கேட்க வேண்டும்.

இறுதியாக, சட்டம்-ஒழுங்கைப்பற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சமீப காலமாக நம்முடைய காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும், சில குறிப்பிட்ட பகுதி மக்களுக்கும் ஒரு மோதலை ஏற்படுத்துவதற்கு ஒரு சதி நடப்பதாகவே நான் நினைக்கிறேன். கடந்த ஒரு வாரப் பத்திரிகைகளைப் பார்த்தால் காவல் துறைக்கும், மாணவர்களுக்கும் இடையே மிகப் பெரிய யுத்தம்; காவல் துறைக்கும், வழக்கறிஞர்களுக்கும் இடையே ஒரு மிகப் பெரிய யுத்தம்; இவர்களுக்குள் இப்படி ஒரு மோதலைத் தூண்டிவிட்டு, காவல் துறையை மக்களிடமிருந்து அன்னியப்படுத்துவதற்கான ஒரு பெரிய அரசியல் சதி நடப்பதாகவே நான் நினைக்கிறேன். அதைப்பற்றி நாம் சற்றுக் கவனமாக இருக்க வேண்டும். அது எதனால் அப்படி நடக்கிறது? சின்ன சின்ன சம்பவங்கள்; நேற்றையதினம் ஒரு மாணவன் ஹெல்மெட் போட்டுக்கொள்ளவில்லையென்பதால் ஒரு காவலர் கூப்பிட்டு, அவரை ஹெல்மெட் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்ன காரணத்தினாலேயே இன்று தமிழகத்திலே இருக்கின்ற எல்லா கல்லூரிகளிலும் வேலைநிறுத்தம் நடக்கிறது. எங்கேயோ ஒரு சிறு இடத்திலே ஒரு வழக்கறிஞருக்கும், காவல் துறையைச் சேர்ந்த ஒரு ஆய்வாளருக்கும் ஏற்பட்ட ஒரு சிறிய வாக்குவாதம், ஒரு மிகப் பெரிய தெருச் சண்டையாக வழக்கறிஞர் சமுதாயத்திற்கும், காவல் துறைக்கும் இடையே ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, காவலர்களுடைய மனைவிகள் எல்லாம் தெருவுக்கு வந்து மனுக் கொடுத்து, இந்தக் காவல் துறையைப் பொது மக்களிடமிருந்து அன்னியப்படுத்துகின்ற ஒரு முயற்சி மிக இரகசியமாக, மிகுந்த கீழ்த்தரமான எண்ணத்தோடு அரங்கேற்றப்படுவதற்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டு இருப்பதாகத் தெரிகிறது. நான் சற்று அதிகமாக சொன்னால், இந்த அரசு அதைப் பற்றிக் கவனமாக இருக்க வேண்டும். அந்த மோதல் போக்கைத் தவிர்ப்பதற்கான நல்ல நடவடிக்கைகளை நாம் உடனே மேற்கொண்டு, அந்த மோதல் போக்கை ஊக்குவிப்பதற்கு யார் காரணமாக இருக்கின்றார்களோ, அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, 177 வாக்குறுதிகளிலே 107 வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறீர்கள். எஞ்சிய காலத்திலே மீதமுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்து, கொடுக்காத வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றுகின்ற நல்ல அரசாக இந்த அரசு



நிச்சயமாக விளங்கும் என்கிற நம்பிக்கையோடு வாழ்த்துக்களைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பதிலுரை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை இங்கே வழங்கப்பட்டு, அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துகளையும், பல்வேறுவிதமான கோரிக்கைகளையும் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டுத் தொடக்கத்திலே நிதிநிலை அறிக்கையில், 52,332 கோடி ரூபாய் அளவுக்குப் பெரும் அளவிலே வழங்கப்பட்டது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மிகப் பெரிய அளவு நிதிநிலை அறிக்கையிலே வளர்ச்சி; பல்வேறு பணிகள், புதிய பணிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலை. அப்படி அறிவிக்கப்பட்ட பல்வேறு விதமான காரியங்கள் நிறைவேற்றப்பட்டு, அவை சாதனைகளாக நிறைவேற்றப்பட்டிருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பெரும் பகுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேலும், சில புதிய பிரச்சினைகள்—ஏனென்றால், கடந்த காலங்களில் எல்லாம் நிதிநிலை அறிக்கை ஒரு முறை வந்துவிடுமானால், அதற்குப் பின்னர் அந்த ஆண்டில் அதிலே பெரிய மாற்றங்களும், வளர்ச்சியும் ஏற்படுகிற வாய்ப்பு இல்லாத ஒரு காலமாக இருந்தது. அண்மைக் காலமாக ஆண்டுத் துவக்கத்தில் நிதிநிலை அறிக்கை வந்தாலும்கூட-- தொடர்ந்து பல வளர்ச்சிப் பணிகள், தொடர்ந்து பல புதிய திட்டங்கள், தொடர்ந்து பல புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் அவ்வப்போது புதிய அளவில் கூடுதல் நிதிநிலை அறிக்கை வழங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அந்த வகையிலே, இப்போது 1,959 கோடி ரூபாய்க்கு இந்த மதிப்பீடு, புதிய துணை மதிப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த மதிப்பீடு குறித்து பல நல்ல ஆலோசனைகள், கடந்த காலத்திலே நடைபெற்ற அந்தப் பணிகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய குறைகள் அல்லது நிறைவேற்றப்பட வேண்டிய பல கடமைகள் இங்கே

எடுத்துரைக்கப்பட்டன. அப்படி உரைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில் வெட்டுத் தீர்மானங்களாகத் தரப்பட்ட தீர்மானங்கள், ஏறத்தாழ 236 தீர்மானங்கள் தரப்பட்டன. இதிலே மிக அதிக அளவுக்கு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றி 27 வெட்டுத் தீர்மானங்கள், எரிசக்தித் துறை பற்றி 19 வெட்டுத் தீர்மானங்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றி 13 வெட்டுத் தீர்மானங்கள், மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றி 24 வெட்டுத் தீர்மானங்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றி 16 வெட்டுத் தீர்மானங்கள், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்து 12 வெட்டுத் தீர்மானங்கள், மற்ற மற்ற துறைகள் பற்றி 8, 9, 5 என்று எல்லாத் துறைகளைப் பற்றியும் வெட்டுத் தீர்மானங்கள். நிதித் துறையைப் பற்றி ஒரே ஒரு வெட்டுத் தீர்மானம்தான். காரணம், இந்தத் துறை நேரடியாகத் திட்டங்களைச் செயல்படுத்தாத காரணத்தால் இந்தத் துறை பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். உண்மையாகவே இந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் அந்தந்தத் துறை அமைச்சர்களால் நிச்சயமாகக் கருதப்படும். அவைகளிலே பல, நடைமுறைப்படுத்தக்கூடிய வாய்ப்பு இருப்பவை எல்லாம் நிச்சயமாகச் செயல்படுத்தப்படும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தக் கூடுதல் நிதிநிலை அறிக்கை குறித்து உரையாற்றிய, சட்டமன்றத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் பேசிய பேச்சை நான் இங்கு குறிப்பிடுவதற்கு முக்கியமான காரணம், கன்னிப் பேச்சிலேயே வேண்டுகோள் வைத்தார்கள். அந்த வேண்டுகோளில் மதுரை, செல்லூரில் வெள்ளத் தடுப்புப் பணிகள் செய்வது குறித்து, அவர்கள் தன்னுடைய தொகுதியின் குறை கவனிக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மதுரையில், செல்லூர் பகுதிக்கான வெள்ளத் தடுப்புப் பணிகளை ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நபார்டு வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆகவே, அப்பணிகள் அரசால் விரைந்து மேற்கொள்ளப்படும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்முடைய திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் பேசுகிறபோது, 2007-2008 ஆம் ஆண்டில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேம்படுத்துவது பற்றி. அந்த மருத்துவமனைகளை



மேம்படுத்துவதற்காக இந்த அரசு முன் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு உயரளவாக ரூபாய் 68 கோடி தொகையைப் பராமரிப்புக்காக—maintenance—ஒதுக்கியிருக்கின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, அந்த நிதியைக் கொண்டு மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைகள் அவர்களுடைய வேண்டுகோளாகக் கருதப்பட்டு, அந்தந்தத் துறையால் பரிசீலிக்கப்படும்.

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அரசாங்கம் பல திட்டங்களைப் போட்டிருக்கிறது; ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், பேரூராட்சிகளெல்லாம் பல பணிகளை மேற்கொண்டிருக்கின்றன; அவற்றுக்கு சிமெண்ட் கிடைப்பதிலே மிகப் பெரிய தடை இருக்கிறது, போதுமான சிமெண்ட் கிடைக்கவில்லை; விலை அதிகமாக இருக்கிறது என்று இரண்டு பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். விலையைக் குறைப்பதற்கு ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசாங்கம் எந்த அளவு அரசுத் திட்டங்கட்குத் தேவை என்று கருதுகிறதோ, அந்த அளவு சிமெண்ட், மூட்டை 230 ரூபாய் என்ற அளவிலே வழங்குவதற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், அந்தத் துறைகட்கு அரசாங்கம் நிதி ஒதுக்கியிருப்பது இந்த விலையிலே அல்லாமல் குறைந்த விலையிலே இருக்கிற காரணத்தால் அதைப் பரிசீலிக்க வேண்டும்; அவர்களுக்கு இந்த விலைக்கு சிமெண்ட் வாங்கினாலும் கட்டுப்படியாகிற முறையிலே வேலை செய்யக்கூடிய முறையில், பணிகள் நடைபெறக்கூடிய முறையில் அரசு நிதியை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அது அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், நாட்டிலே இப்போது அண்மைக் காலத்திலே நடைபெற்று வருகிற சில தேவையில்லாத பாராட்டங்கள், ஒருவருக்கொருவர் தங்களுக்கு இடையே இருக்கிற மாறுபட்ட, தடித்துப் போன உணர்ச்சி காரணமாக ஏற்படுகிற பாராட்டங்கள், இவையெல்லாம் காவல் துறையோடும், மாணவர்களோடும், சட்டத் துறையில் சேர்ந்து படித்த வழக்கறிஞர்களோடும் நடைபெறுவதை எடுத்துக்காட்டி, இதற்கெல்லாம்

ஒரு பின்னணி ஏதேனும் இருக்குமோ என்ற எண்ணத்தை அவர்கள் தெரிவித்தார்கள். சமுதாயச் சீர்கேடும் அதற்கு ஒரு காரணம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக, சமுதாயத்திலே படித்தவர்களிலேகூட பல பேர், சில பொறுப்பான வேலைகளிலே, அவர்கள் இருப்பதாகக் கருதப்பட்டாலும்கூட, அந்தப் பொறுப்பை அவர்கள் உணர முடியாதவர்களாக இருக்கிறார்கள். அந்தப் பணியிலே அவர்கள் நிறைவு அடையாதவர்களாக இருக்கிறார்கள். அதனுடைய விளைவாக, அவர்களுடைய மனக் குறை காரணமாக, தங்களுடைய வாழ்க்கையிலே இருக்கிற குறை காரணமாக சமுதாயத்தைப் பற்றி எண்ணிப் பார்க்காத ஒரு மனநிலை காரணமாக, சிறு சிறு பிரச்சினைகளிலேயெல்லாம் மற்றவர்களுடன் மாறுபாட்டை அதிகமாக வளர்த்துக்கொள்கிற ஒரு நிலையை நான் காண்கிறேன்.

குறிப்பாக, இந்த அரசு, கல்விக்காக, மாணவர்களுக்காக எவ்வளவு அதிகப் பொறுப்போடு செயல்படுகிறது என்பதை நாடு மிக நன்றாக அறியும். எனவே, மாணவர் சமூகத்தையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாணவர்களுடைய எதிர்கால நன்மைக்காகத்தான், வருங்காலத் தமிழகத்தை வளமுள்ள தமிழகமாக ஆக்குவதற்காகத்தான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிக அதிக முயற்சி எடுத்துக்கொண்டு, அயராது பாடுபட்டு, பல திட்டங்களை அவ்வப்போது அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். சமுதாய நலன் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய ஒரே இலட்சியம். அரசியல் கொள்கைகளில் வேறுபாடு எதுவாக இருந்தாலும்கூட, சமூக நன்மை, அந்தச் சமூக நன்மையைக் கருத்தில்கொண்டுதான், அதற்காக ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக மிகப் பெருந்தன்மையோடு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அரசின் மூலமாக நாட்டுக்கு வழிகாட்டிச் செயல்படுகிறார்கள். எனவே, மாணவர்களும், அதேபோல வழக்கறிஞர்களாகப் பட்டம் பெற்றவர்களும் இந்த அரசினிடத்திலே நம்பிக்கை வைத்து, நீதிக்கும், நியாயத்திற்கும் என்றைக்கும் இந்த அரசு துணை நிற்கும் என்ற அந்த நம்பிக்கையோடு அவர்களெல்லாம் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். தேவையற்ற போராட்டங்களை அவர்கள் வளர்த்துக்கொள்ளக்கூடாது என்றும் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, காவல் துறையினரை எதிரிகளைப்போல தயவுசெய்து கருதக் கூடாது. மாறுபாடு ஏற்படலாம்; அது தனிப்பட்ட



ஒருவருக்கும், தனிப்பட்ட மற்றொருவருக்கும் ஏற்பட்ட மாறுபாடு என்று கருத வேண்டுமே தவிர, இரண்டு பிரிவினருக்கு இடையிலே ஏற்பட்ட மாறுபாடாக அதைக் கருதக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

இங்கே தரப்பட்ட வெட்டுத் தீர்மானங்களில், சுனாமியினால் ஏற்பட்ட பேரழிவுக்குப் பின்னர், மிகப் பெரிய பாதிப்புக்குப் பின்னர் நடைபெற்ற பணிகள் என்ன என்ற கருத்து, வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது சுனாமியினாலே பாதிக்கப்பட்டவர்களுக்காக 8,406 வீடுகள் மட்டும்தான் நிரந்தர வீடுகளாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன. ஏறத்தாழ இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருந்தபோது, வெறும் 8,406 வீடுகள்தான் 1½ ஆண்டுக் காலத்தில் அல்லது ஓராண்டுக் காலத்தில் கட்டப்பட்டிருந்தன. இந்த அரசினுடைய சீரிய முயற்சியினால், கலைஞர் அவர்கள் கூட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே எடுத்துச் சொன்ன அந்த அறிவுரையின் அடிப்படையில், 30-9-2007 அன்று 34,028 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, அந்த வீடுகள் எல்லாம் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. தனியார் தொண்டு நிறுவனங்களால் கட்டப்படாமல் விடப்பட்டிருந்த மூவாயிரம் வீடுகளை அரசே கட்ட ஆணையிடப்பட்டு, அரசாங்கமே பொறுப்பேற்று, அவை கட்டி முடிக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி, கடலோரப் பகுதிகளில் வாழும் அனைத்து ஏழை மக்களையும், மீனவர்கள் மட்டும் அல்லாமல், மற்ற ஏழை மக்களையும் பாதுகாக்கும்வண்ணம் கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் உள்ள 52,000 குடிசை வீடுகளில் வசிப்போருக்கு, மத்திய அரசு நிதியுதவியுடன் 22,000 வீடுகளும், World Bank—உலக வங்கி—உதவியுடன் 30,000 வீடுகளும் கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மீனவ சமுதாயத்தினுடைய மறுமலர்ச்சி வாழ்வுக்காக அவர்களுக்கு எந்தெந்த வகையிலே எல்லாம் நிதியுதவி, அதேபோல பொருள் உதவி முதலானவை வழங்க முடியுமோ, அவையெல்லாம் வழங்கப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவு உண்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் எவர்சில்வர் தட்டு, எவர்சில்வர் குவளை வழங்க வேண்டும் என்று கேட்டார்கள்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 அக்டோபர் 19

அந்த எவர்சில்வர் தட்டும், எவர்சில்வர் குவளையும் எல்லாக் குழந்தைகளுக்கும் வழங்க இந்த 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 1.35 கோடி மதிப்பீடு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இப்படிச் சத்துணவு வழங்கல், குழந்தைகளுடைய நல்வாழ்வு, தாய்மார்களுக்கான உதவி இவையெல்லாம் தொடர்ந்து செய்வதற்கு இந்தக் கூடுதல் நிதி அறிக்கை மூலமாகவும், மேலும் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்வதுடன், இதற்கு மேலும் இந்த அரசு தொடர்ந்து செயல்படும் என்று கூறி, இந்த உரையை நான் நிறைவு செய்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 18-10-2007 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.**



2007 அக்டோபர் 19]

**நிறைவேற்றப்பெற்ற 2007–2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 3 | நீதி நிருவாகம் | 9 | — | — |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 21,05,80 | 18,05,00 | — |
| 5 | வேளாண்மைத் துறை | 37,34,32 | 48,10 | 30,00,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 2,04,71 | 2 | — |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 68,01 | 2,00,00 | — |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | — | 30,20,34 | — |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 17,42,80 | 2,00,00 | — |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1,83,40 | — | — |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 73,32 | — | — |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 60,00,01 | 3,00,00 | — |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | எரிசக்தித் துறை | — | 140,00,00 | — |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 5 | 5,00,03 | — |
| 16 | நிதித் துறை | 1 | — | — |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 12,66 | — | 12,18,24 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 140,01,69 | 50,94,37 | — |
| 20 | உயர் கல்வித் துறை | 20,57,55 | 1 | — |
| 21 | நெடுஞ்சாலைகள் துறை | 85,00 | 21,04 | — |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 16 | 3 | — |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 15,20 | — | — |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3,24,52 | 95,78 | — |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 7 | — | — |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,39,69 | — | — |
| 27 | தொழில் துறை | 6,16,45 | 25,00 | 141,97,23 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,12,05 | — | — |



| | | | | |
|---|---|---|---|---|
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 1,13,61 | 2,41,75 | — |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 53,39 | 1,01,50 | — |
| 33 | சட்டத் துறை | 40,93 | — | — |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 8,84,50 | 134,00,00 | — |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 30,61 | — | — |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 50,01 | 2,99,66 | — |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 28,24 | — | — |
| 38 | பொதுத் துறை | 15,17,38 | — | — |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 50,01 | 51,12 | — |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 21,58 | 49,33 | — |
| 41 | வருவாய்த் துறை | 7 | — | — |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 400,79,17 | 80,43,12 | — |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 4,95,01 | — | — |
| 44 | சிறு தொழில்கள் துறை | — | 1,21,00 | — |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 136,21,80 | — | — |

| | | | | |
|---|---|---|---|---|
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 1,38,54 | — | — |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 5,00,00 | — | — |
| 48 | போக்குவரத்துத் துறை | — | 27,20,00 | — |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,18,61 | — | — |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 2,63,99 | — | — |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 13,84 | — | — |
| | **பெருமொத்தம்** | **895,98,85** | **503,37,20** | **184,15,47** |

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 22-10-2007 திங்கட்கிழமை அன்று காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-7-2007 ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

27. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

28. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு கணக்குகள் மற்றும் கணக்குகள்மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

11. 2007-2008 ஆம் ஆண்டிற்கான "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

12. 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

13. 2007-2008 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

14. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தைந்தாவது அறிக்கை. (2007-2008)

15. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தாறாவது அறிக்கை. (2007-2008)

16. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தேழாவது அறிக்கை. (2007-2008)

17. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தேழாவது அறிக்கை. (2007-2008)



18. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை. (2007-2008)

19. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்பதாவது அறிக்கை. (2007-2008)

20. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபதாவது அறிக்கை. (2007-2008)

21. பொது நிறுவனங்கள் குழுவின் அறுபத்தொன்றாவது அறிக்கை. (2007-2008)

---

D
V211,31P07
P07.38.1

228092